# பெண்மணி

செப்டம்பர் 2011

ரூ. 20



ஆர். மகேஸ்வரி

## காதல் வைத்து காத்திருந்தேன்

முழு நாவல்

# காதல் வைத்து காத்திருந்தேன்...!

— ஆர். மகேஸ்வரி



பகலெல்லாம் சுட்டெரித்த சூரியன்... பூமியின் மேலும்... அதில் வசிக்கும் செடி, கொடி, மரம், மனிதர்கள் மேலும் இரக்கம் கொண்டு... தனது வீரியத்தைக் குறைத்து கொண்ட... அழகிய இளமாலை நேரம்!

கன்னியாகுமரி நகரம்... இனிய தென்றலின் தாலாட்டில் மயங்கிக் கொண்டிருந்தது!

அன்று ஞாயிறு என்பதால் கதிரவன் வீட்டில் இருந்தான். ஆறு நாட்களும் விவசாய பண்ணை, 'ரெஸ்டாரெண்ட்' என்று காலில் சக்கரம் கட்டிய கணக்காய் உழைப்பவன்... அன்று மட்டும் ஓய்ந்து உட்கார்ந்து விடுவான்.

மதிய உணவிற்கு பிறகு படுத்து உறங்கிக் கொண்டிருந்தான்.

'கந்தர் சஷ்டி கவசம்' டேப்பில் ஒலித்து... பங்களா முழுவதும் இனிய பக்தி மணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது! பூஜையறையில் மணியோசை ஒலித்தது. கதிரவனின் தாய் செண்பகம் பூஜையை முடித்து விட்டு... அப்படியே முருகப்பெருமானை மனமுருக வேண்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

கதிரவனுக்கு விழிப்பு வந்து... குளியலறைக்கு போய் வெந்நீரில் குளித்து, உடுத்திக் கொண்டு பூஜையறைக்கு வர... செண்பகம் அவனுக்கு திருநீறு பூசிவிட்டார்.

"என் பிள்ளையின் மனசை மாத்திடுப்பா, முருகா!" நினைக்கும்போதே கண்கள் பொங்கியது.

இருவரும் ஊருக்கு வர... இதயாவிற்கு மஞ்சுளா தலைவாரி, பவுடர் போட்டுக் கொண்டிருக்க... இதயா சரியாக காட்டாமல் அழுது அடம் செய்து கொண்டிருந்தாள்.

இதயா கதிரவனுடைய ஆறு வயது குழந்தை! அதுவும் மனவளர்ச்சி குன்றிய குழந்தை! சரியாக பேசமாட்டாள். வார்த்தைகள் திக்கி திணறி, தடுமாறி வெளிப்படும். ஆனால் சொல்லும்



வார்த்தைகளை எளிதில் கிரகித்துக் கொண்டு அதன்படி செயல்படுவாள்! சிலநேரங்களில் சொல்பேச்சு கேட்பாள்! பல நேரங்களில் அவளுடைய அடம் பிடிக்கும் தன்மையும், தொல்லைகளும் அதிகமாக இருக்கும்!

பாட்டிகள் செண்பகம், மஞ்சுளாவால் அவளை இப்போதெல்லாம் சமாளிக்க முடியவில்லை. தாத்தா விநாயகத்திற்கும் அதே நிலைமைதான்! அவளின் ஓட்டத்திற்கு ஈடு கொடுத்து ஓட முடியவில்லை! அவள் திக்கி திணறி கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியவில்லை!

இந்த வருடம்தான் பள்ளியில் சேர்த்தனர்.

செட்டியின் புறநகரில் கதிரவன் இதயா ஆதரவற்றோர், முதியோர் இல்லமும், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பள்ளியும் நிறுவி செயல்படுத்தி வருகிறான். அதில்தான் இதயா பயில்கிறாள்.

பள்ளி செல்லும் நேரத்தை தவிர மீதி நேரங்களில் அவர்கள் மூவரையும் போட்டு பாடாய் படுத்தி எடுத்து விடுவாள், இதயா.

செண்பகத்திற்கோ ஒன்றைநாடி சரீரம். இதில் ஆஸ்துமா வேறு! சமீபமாய் இரண்டு கண்களிலும் பார்வை கோளாறு ஏற்பட அறுவை சிகிச்சை செய்து கொண்டு இருப்பவர்.

கதிரவன் அவருடைய ஒரே பிள்ளை! அந்தப் பிள்ளையின் வாழ்க்கை இவ்வாறு ஆகும் என்று கனவிலும் நினைக்காதவர். அவன் வாழ்வில் நடந்த அந்த நிகழ்ச்சிக்கு பிறகு சக்தியெல்லாம் வற்றிப் போய் செண்பகம் முடங்கித்தான் போனார்.

மகனுக்காகவும், பேத்திக்காகவும், மெல்ல எழுந்தாலும்... மனதில் உள்ள ரணத்தால் அடிக்கடி நோய் வந்து படுக்கையில் விழுந்து போவார்.

அவருடைய தம்பி விநாயகமும், மனைவி மஞ்சுளாவும் அவர்களோடே இருப்பதால் கதிரவனால் வீட்டையும், தாயையும், குழந்தையையும் பற்றிய கவலையின்றி... தொழிலைக் கவனிக்க முடிந்தது!

இரவு கதிரவன் வீட்டுக்கு வந்து விட்டால் அவனோடே ஒட்டிக் கொள்ளுவாள், இதயா. இரவு முழுக்க அவன் மார்பு மீதும், அவனைக் கட்டிக் கொண்டும்தான் உறங்குவாள்.

சைக்காலஜி படித்த பெண்ணை வேலைக்கு அமர்த்தி, வீட்டோடு தங்க வைத்து இதயாவை பராமரிக்க வேண்டும். முதியவர்களுக்கும் ஓய்வு கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறான், கதிரவன்.

மனவளர்ச்சி குன்றிய குழந்தையிடம் எப்படி நடந்து கொள்வது! எப்படி அன்பு பாராட்டுவது! எப்படி அரவணைப்பது! எப்படி பேசுவது? என்று சைக்காலஜி படித்த பெண்களுக்கு நன்கு தெரியும். படிப்பிற்கு இணையான சம்பளம் கொடுத்தால் கட்டாயம் இதயாவை பராமரிக்க வருவார்கள் என்பது அவனுடைய நம்பிக்கை.

அதைச் செயல்படுத்த முடியாமல் தள்ளிப் போய் கொண்டே இருக்கிறது.

கதிரவன்... அழகன்! ஆறடிக்கு மேலான கம்பீரமான உயரம் கொண்டவன்! யோகா, உடற்பயிற்சி என்று செய்து உடலை கட்டோடு வைத்திருப்பவன்! உழைத்து உழைத்து உரமேறிய உடம்புக்கு சொந்தக்காரன்!

மாநிறம்! மலர்ந்த தாமரையாய் இருந்தவன்தான்... ஆனால் இப்போது முகத்தில் மலர்ச்சியோ மகிழ்ச்சியோ இருக்காது! வில்லாய் வளைந்த புருவம், அழுத்தமான பார்வையுடன் விழிகள், கூர்மையான நாசி, உதட்டுக்கு மேலே அடர்ந்த கருகரு மீசை, அழுத்தமான உதடுகள் என்று மிக அழகாய் இருப்பான்! பரந்து விரிந்த தோளும், திட்சண்யமான பார்வையும் இருக்கும் அவனை எந்த பெண் கடந்து போனாலும் திரும்பி பார்த்து விட்டு போவாள்!

"ஏய் இதயா குட்டி... என் செல்லம்... தலைவாரி பவுடர் போட்டு, பொட்டு வச்சிட்டாதான் டாடி உன்னை பீச்சுக்கு அழைத்து போவேன்! பீச்சுல ஜாலியா மணல் வீடு கட்டி விளையாடலாமா?"

கதிரவன் குழந்தையருகே சோபாவில் அமர்ந்து சின்ன சிரிப்போடு கேட்க...

"ம்... நீ... நீங்க..." என்று மஞ்சுளாவின் கையிலிருந்த சீப்பை பறித்து கதிரவனிடம் கொடுத்தாள்.

"அம்மா... இதயா குட்டியைப் பார்த்தீங்களா! எவ்வளவு நல்ல பொண்ணாய் தலைவாரக் காட்டுகிறாள்!"

"ஆமாம்ப்பா! நம்ம குட்டி இளவரசி நல்ல பெண்தான்! சமத்துதான்! அட்டா அழகா டாடிகிட்ட தலைவாரிக்கிறாளே!"

செண்பகம் அவ்வாறு சொல்ல... குழந்தை சிரித்தபடி அமைதியாகிவிட்டாள்.

கதிரவன் டவல் கொண்டு குழந்தையின் முகத்தைத் துடைத்தான்.

"இதயா குட்டி... எதுக்குடா அழுதே?"

"பாட்டிக்கு அ... அழகா க...கதை சொல்ல தெரியலே! டா... டான்ஸ் ஆ... ஆடுன்னா மாட்டேங்கிறா!" என்று மஞ்சுளாவை குழந்தை குற்றம் சாட்ட...

"உனக்கு கதை சொல்ல, பாட்டு பாட, டான்ஸ் ஆட ஆண்ட்டியா வேலைக்கு ஏற்பாடு பண்ணிடலாமா! ஆண்ட்டி வந்து உனக்கு கதை சொல்லி பார்த்துட்டா பிடிக்குமா?"

"ம்... ம்..." என்று குழந்தை ஆடியது.

குழந்தையின் அலங்காரம் முடிந்தது. இதயாவிற்கு சற்று தலைதான் பெரிதே தவிர... குழந்தை அத்தனை அழகாய் இருப்பாள். அவளை நிறுத்தி புதிதாய்

பார்ப்பவர்கள் அவளை மனவளர்ச்சி குன்றிய குழந்தை என்று சொல்லவே மாட்டார்கள். அவள் சேட்டையும், செயலை வைத்துமேதான் கண்டுபிடிப்பார்கள்.

வேலைக்காரி கொண்டு வந்து வைத்துவிட்டு போன சுண்டலையும், பஜ்ஜியையும் கதை சொல்லி ஊட்டி விட்டாள், இதயாவிற்கு. தானும் உண்டு முடித்து குழந்தையோடு கிளம்ப போன சமயம் மாமா விநாயகம் உள்ளே நுழைந்தார்.

"கதிர்... தரகர் வீட்டுக்குதான் போயிட்டு வரேன். மூன்று போட்டோவைக் கொடுத்து... மூன்றுமே நல்ல வரன் என்று சொல்லியனுப்பினார். எல்லோரும் ரொம்ப அழகா இருக்காங்க! நல்ல குடும்பத்து பெண்களும் கூட! நிர்மலாங்கிற பெண் டிகிரி முடிச்சிருக்காம்! அடுத்ததா இந்த கல்யாணி, நர்ஸாம்! ஒரு தாய்மாமா மட்டும்தானாம்! அடுத்ததா விமலாங்கிற பெண் இது! டீச்சர் வேலை பார்க்குதாம்! இதுநாள் வரை கல்யாணமே வேண்டாம்ன்னு சொல்லி இருந்ததாம்! உன்னைப் பற்றி தரகர் சொன்னதும்... சந்தோஷமா உன்னை மணந்துக்கிறேன்னு சொல்லிட்டு போனதாம்! இந்தப் பெண் அண்ணனின் பராமரிப்பில் இருக்கிறாள்! தகப்பனில்லே! தாய் மட்டும்தான்! அந்த குழந்தைக்கு பெற்ற தாயாய் நான் இருந்து பராமரிக்கிறேன்னு சொன்னதாம்!

தரகர் இந்த விஷயத்தைச் சொல்ல ரொம்ப சந்தோஷப்பட்டேன்! பெண்ணுக்கு உன் வயது இருக்கும். அது மட்டும்தான் எனக்கு கொஞ்சம் பிடிக்கலே! ஆனால் யோசித்து பார்க்கும்போது... இப்படி வயதுல முதிர்ந்த பக்குவப்பட்ட பெண்ணால்தான் நம்ம குழந்தையை தாயாய் பார்த்துக்க மனசு வரும்!"

"மாமா... இதெல்லாம் எதுக்கு என்னிடம் சொல்றீங்க?"

"உன்னிடம் சொல்லாமல் வேற யார்கிட்ட சொல்லுவது! பெண் பார்ப்பதே உனக்குதானே!"

"எனக்கு ஏற்கனவே திருமணமாயாச்சி!"

"அந்தச் சண்டாளி உன்னோட வாழுறாளா, கதிர்?"

"வாழலேதான்! ஆனால், முதல் மனைவி இருக்க... இரண்டாவது திருமணம் சட்டப்படி தப்பு!"

"அந்த கேடுகெட்ட ஓடுகாலி நாய் உயிரோடு இருக்காளா? இல்லையா என்றே தெரியலே! கண்டிப்பா அவன் செய்த துரோகத்துக்கு செத்துதான் ஒழிஞ்சிருப்பா!"

"மாமா... இப்படி கீழ்தரமா பேசாதீங்க யாரைத் தெரியுமா?"

"என் பெண் சுவாதியைத்தான் பேசறேன்!" என்று விநாயகம் கோபமாய் சொல்ல...

"உங்களால் எப்படி மாமா, இப்படி பேச முடியுது?"

"உங்களையும், பச்ச குழந்தையையும் எப்போ விட்டுட்டு... நம்ம மூஞ்சியில கரியை பூசிட்டு ஓடிப்போனாளோ அப்பவே அவ செத்துட்டா!" என்றான் சுவாதியை பெற்றவனான மஞ்சனா.

"இந்தப் போட்டோக்களைத் தரகர் கிட்ட திருப்பி கொடுத்துடுங்க, மாமா!" கதிரவன் மாமாவைப் பார்த்து சொல்ல...

"இல்ல கதிர்... இந்த டீச்சர் பொண்ணு உனக்கு நல்ல துணையா இருப்பான்னு தோணுது!"

"அத்தை... மாமாகிட்ட சொல்லுங்க... எனக்கு திருமணமே வேண்டாம்!"

"இந்தக் குழந்தைக்காவது நீ கட்டாயமா திருமணம் செய்துக்கணும், கதிர்!" விநாயகம் சொல்ல...

"பெற்ற தாயே தன் குழந்தையை பரிதவிக்க விட்டுட்டு ஓடிப் போகும்போது... இன்னொருத்தி வந்து பார்த்துக்குவான்னு எப்படி அவ்வளவு ஆணித்தரமா உங்களால சொல்ல முடியுது! நல்ல, குறையில்லாத குழந்தையா இருந்தால்கூட கருணை உள்ளம் கொண்ட ஒரு பெண் வந்து என்னோடு, குழந்தையையும் சேர்த்து அரவணைத்துக்கலாம்!...

ஆனால் நம்ம இதயா மனநலம் குன்றிய குழந்தையாச்சே, மாமா! ஒருநாள், இரண்டு நாள்லே கூட, குழந்தையை என்னால பார்த்துக்க முடியாது! உங்க மாமா, அத்தை, அம்மாகிட்ட விட்டுட்டு என்னோட தனிக்குடித்தனம் வாங்கன்னு பெட்டியைத் தூக்கிட்டு கிளம்பிடுவா! அந்தக் கொடுமையெல்லாம் நம்ம வீட்டுல நடக்கணுமா, மாமா!"

கதிரவன் தழுதழுத்த குரலில் சொல்ல...

"அதெல்லாம் நடக்காது, கதிர்! வேண்டிய கஷ்டத்தை அனுபவிச்சிட்டே! கடவுள் இனியாவது உனக்கு கண் திறக்காமலா போவார்?"

"ம்கூம்... எனக்கு நம்பிக்கையில்லே மாமா!"

"கதிர்... வாழ்க்கையிலே எதை வேண்டுமானாலும் இழக்கலாம்! ஆனால் நம்பிக்கையை மட்டும் இழக்கக்கூடாது!

அப்படி நம்பிக்கையை இழந்துபோனால் உடம்போட மனமும் சேர்ந்து, நம்மை கீழே தள்ளி, மீண்டும் எழவே முடியாமல் செய்துடும், கதிர்! மனசை தளரவிடாதே. எவ்வளவு பெரிய சோதனையெல்லாம் கடந்து, வெற்றி கண்டு, இன்னைக்கு உயர்ந்து நிக்கறே!" உணர்ச்சிப் பெருக்குடன் பேசியவரின் விழிகள் நீரில் நனைந்தன.

"கதிர்... இன்னும் எத்தனை நாளைக்கு வாழவேண்டிய வயசு! இப்படி சந்நியாசியா வாழலே!" அம்மா கண்ணீரோடு கேட்க...

"என் தலையில் விதிச்சது இந்த வாழ்க்கைதாம்மா!" என்றான்.

"கதிர்... நானும், மாமாவும், அத்தையும் எத்தனை நாட்களுக்கு நிரந்தரம்? மூன்று பேருமே நோயாளிகள்! போட்டுன்னு போயிட்டா எங்க ஆத்மா சாந்தியடையாதுப்பா!"

செண்பகம் கண்ணீரோடு கூற... கதிரவன் அமைதியாகவே இருந்தான்.

"உங்களுக்கொரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்தாதான் எங்களாலும் நிம்மதியா இருக்க முடியும், மாப்ளே!" மந்தனா கூறினாள்.

"இவ்வளவு நாட்களும் நாங்க எவ்வளவு சொல்லியும் நீ கேட்கலே! இனியாவது பெரியவங்க பேச்சைக் கேள்! எங்களுக்கு பிறகு உன்னைப் பார்த்துக்க ஒரு பெண் நிச்சயம் வேணும்" விநாயகம் சொல்ல...

"ஒரு பெண்ணோட துணையில்லாமல், இந்த உலகத்துல வாழவே முடியாது என்பதுபோல பேசறீங்களே, மாமா?"

"இன்னைக்கு வயசிருக்கு! யாரோட துணையும் வேண்டாம்! நாளைக்கு வயசும் போய், வாலிபமும் போய், உடலில் வலுவில்லாமல் போனால் சாய்ந்துக்க ஒரு தோள் இல்லையேன்னு உன் மனம் ஏங்கும், கதிர்! ஒரு பெண் உனக்கு துரோகம் செய்தாங்கிறதுக்காக நீ காலமெல்லாம் இப்படி தனியே இருந்து வாடணுமா? நீயும் மனிதன்தானே, கதிர்?"

"உடலும், மனமும் காயப்பட்டு புண்ணா கிடக்குது, மாமா! அதுல காதல் கொஞ்சம் கூட ஏற்படாது! வலியும், வேதனையும்தான் என்னுள் நிறைஞ்சிருக்கு!"

"அந்த காயத்துக்கு, வலிக்கு மருந்தா ஒரு பெண் வந்தால்..." செண்பகம் இடைமறித்து முடிப்பதற்குள்...

"சொந்தமே கசப் கொடுக்கல! இரவல் எப்படிம்மா? எந்த பெண்ணும் என்னை வேணா மனசார ஏத்துக்கலாம்! ஆனால் என் குழந்தையை ஏத்துப்பாளா?" என்றான்.

"உன்னோட, உன் குழந்தையையும் மனசார ஏத்துக்கிற ஒருத்தி கிடைச்சா... அப்போ திருமணம் செய்துப்பியா, அய்யா?"

"அதுக்கும் யோசிக்கணும்மா!"

கதிரவன் பட்டென்று சொல்ல...

"அப்படியெல்லாம் சொல்லாதே, கதிர்! அப்படி ஒரு நல்லவள் கிடைச்சா நீ அவளைத் திருமணம் செய்துக்கணும்!"

"கருணையும், ஜீவகாருண்யமும், இரக்கமும் கொண்ட பெண் தென்பட்டும்!"

"அப்போ மறுக்க மாட்டேயில்ல?" செண்பகம் கண்களில் வழிந்த நீரோடு சொல்ல... தாயின் கண்ணீர் அவனை சம்மதம் சொல்ல வைத்தது.

"மறுக்கலே!"

அத்தனைபேரும் மகிழ்ந்தனர்.

"பேச்சு மாறக்கூடாது, கதிர்! தரகர் கொண்டு வரும் பெண்களின் படத்தைப் பார்! அவர்களில் உனக்கு யாரை பிடிச்சிருக்கோ சொல்... போவோம்! பெண்ணைப் பார்ப்போம்! நம்ம குடும்பத்துக்கு ஏத்தவளா இருந்தால் ஏற்பாடு செய்வோம்!" விநாயகம் சொல்ல...

## மலிவு விலையில் புதிய மியூட் கார்!

மூனிச் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மலிவான விலையில் மியூட் எலெக்ட்ரிக் கார் ஒன்றை உருவாக்கி உள்ளது. இந்த கார் மற்ற எலெக்ட்ரிக் கார்களைப் போல இருக்காது. இது 3.5 மீட்டர் நீளம் உடையது. 400 கிலோ எடை உள்ளது. எலெக்ட்ரிக் வாகனங்கள் எடை மிக குறைவாக இருக்க வேண்டும் என்பதால்.



இவ்வளவு குறைந்த எடையில் இந்த புதிய மியூட் கார் உருவாக்கப்பட்டுள்ளது.

சாதாரண பெட்ரோல் கார்கள் இந்திய ரூபாய் மதிப்பில் 5 லட்சத்து 53 ஆயிரத்து 146-ல் பெற முடியும் என்றால், இந்த எலெக்ட்ரிக் கார்கள் விலை 15 லட்சத்து 18 ஆயிரத்து 660 ரூபாய் மதிப்பில் தொடங்குகிறது. ஒரு முறை மின்சாரம் சார்ஜ் செய்த நிலையில் 100 கி.மீ. வேகத்தில் செல்லலாம். அதிகபட்சம் 120 கி.மீ. வேகத்தில் இந்தக் காரை செலுத்த முடியும்.

இந்த மாதம் பிராங்க்பர்ட்டில் சர்வதேச மோட்டார் கண்காட்சியில் இந்த கார் இடம் பெறுகிறது. நமது பார்வைக்கு எப்போது வரும் என்கிறீர்களா? நம்முடைய இந்திய மார்க்கெட்டுக்கு வர கொஞ்சம் நாளாகலாம். அதுவரையில் பொறுத்திருக்கத்தான் வேண்டும்.

"ஆனாலும் முதல் மனைவி இருக்க இரண்டாவது மனைவி கட்டிக்கிறது தப்புதான்! இன்னும் சுவாதியோட டைவர்ஸ் கூட நடக்கலே!" கதிரவன் இப்படி சொல்லவும்...

"அவன் உயிரோடு இருக்க மாட்டான்... அப்படியே உயிரோடு இருந்தாலும் அவன் எந்த முகத்தை வைத்துக் கொண்டு இங்கே வருவான்? இனி அவன் வரவே மாட்டான்! நான் சொல்றதை நம்பு கதிர்!... என் வற்புறுத்தலால்தான் உன் வாழ்க்கையே பாழாப்போச்சி! என்னால் உருக்குலைந்த உன் வாழ்க்கையை... நானே மீட்டு தரேன்! நல்ல பெண்ணாய் தேடித் தரேன், கதிர்!"

"மாமா... என்னைப் போல இழப்போ, காயமோ ஏற்பட்ட பெண்ணாவே பாருங்க!"

"உன் தகுதிக்கும், திறமைக்கும், அழகுக்கும் இளவரசி கணக்காக பெண்ணையே கட்டி வைக்கிறேனா... இல்லையான்னு பார், கதிர்?"

"மாமா... அப்படியெல்லாம் செய்துடாதீங்க! பாதிக்கப்பட்ட பெண் என்றால்தான் நான் திருமணத்துக்கே சம்மதிப்பேன்! அப்படிப்பட்ட பெண்ணால்தான் இன்னொரு பாதிப்புக்குள்ளான இருதயத்தைப் புரிந்து கொள்ள முடியும்! காயம் பட்டவங்களுக்குத்தான் காயத்தோட வலி தெரியும்! தோல்வியடைந்தவர்களுக்குத்தான் தோல்வியால் விளையும் துக்கத்தின் வீரியத்தை அறிந்து கொள்ள முடியும்!" கதிரவன் துயரம் மேவிட பேசி முடித்தான்.

# 2

கதிரவன் இதுநாள் வரையிலும் திருமணப் பேச்சை எடுத்தாலே பதில் பேச மாட்டான்! விலகிப் போய் விடுவான்!

இன்று அவனின் சம்மதத்தால் பெரியவர்கள் மூவரும் மகிழ்ந்து போனார்கள். ஆனால் கதிரவனுக்கோ மனதில் மருந்துக்கு கூட சந்தோஷமில்லை! மாறாக விரக்தியே நெஞ்சில் விஞ்சி நின்றது!

உடலும் உள்ளமும் வலுவிழக்க அசதியாய் உணர்ந்தான். படுக்க வேண்டும்போல இருந்தது.

கடற்கரையை ஒட்டியேதான் அவனுடைய பங்களா இருந்தது. கொஞ்ச நேரம் கழித்து இதயாவோடு கடற்கரைக்கு செல்லலாம் என்று முடிவெடுத்தான்.

"அம்மா... கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துவிட்டு இதயாவை கடற்கரைக்கு அழைத்துப் போகிறேன்!"

கதிர் இப்படி முகம் வாடி கூற... தாயின் உள்ளம் சட்டென்று பரிதவித்தது.

"ஏம்பா... உடம்புக்கு முடியலையா?" என்ற தாய் முகம், கழுத்து, நெற்றி என்று தொட்டுப் பார்க்க...

"உடம்பு நல்லாதான் இருக்கு! மனம்தான்... சரி அதை விடுங்க! ஐந்தரை வாக்கில் ஒரு குரல் கொடுங்கம்மா!" என்று சொன்னவன், தன்னறைக்கு போய் பொத்தென்று படுக்கையில் விழுந்தான் கதிரவன்.

படுக்கையில் விழுந்தவன் விட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சுவாதி அவனுக்கு ஏற்படுத்திய அவமானத்தை எண்ணி நெஞ்சு விம்மியது.

கண்களிரண்டும் வெந்நீரில் மிதந்தன. மறுநொடியே மடையை உடைத்து வரும் காட்டாறு வெள்ளமாய் கண்ணீர் வேகமெடுத்து காதோரத்தை நனைத்தது.

கண்ணீரோடு உறவாடிய இருட்டுக்கு தெரியும்... அவன் காயங்களின் வலிமையை! நெஞ்சில் பழைய நினைவுகள் குத்தி கிளறி பொங்கி பிரவாகமெடுத்து ஓடியது.

அந்த ஞாபகங்கள் தந்த வலியை மறக்க கண்களை இறுக்கி மூடியும்... நெஞ்சின் அடி ஆழத்தில் இருந்து கண்களின் வழியே காட்சி ஓடியது.

கன்னியாகுமரியின் இருந்து ஒரு

ஐந்து கிலோ மீட்டர் பயணித்தால் கதிரவனின் சிற்றூர் வந்து விடும். அந்த ஊர் பார்ப்பதற்கு பச்சை பசேலென்று ரம்மியமாய் காட்சியளிக்கும். எங்கும் இயற்கையும், பசுமையும் கைகோர்த்து விளையாடிக் கொண்டிருக்கும்.

கதிரவனின் தந்தை சுப்பிரமணியனுக்கு அங்கே முப்பது ஏக்கருக்கு மேல் விவசாய நிலமிருந்தது. ஆனால், அவர் ஒரு சோம்பேறி! உழைப்பதற்கு சங்கடப்படுபவர்.

அவருடைய மனைவி செண்பகமோ உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவள்! கணவனிடம் எவ்வளவோ புத்தி புகட்டியும்... அவர் உழைக்க தயாராக இல்லை.

காரணம்? ஒரே மகன் என்று அளவுக்கு மீறிய செல்லம் கொடுத்து வளர்த்து விட்டாள், அவன் தாய்! விளைவு குடி, சீட்டு, சோம்பேறித்தனம் எல்லாம் சுப்பிரமணியத்திடம் வாடகை எதுவுமின்றி குடியேறி விட்டது.

நிலத்தை வேறு நபரிடம் குத்தகைக்கு விட்டு, அதில் கிடைக்கும் வருமானத்தை சீட்டு ஆடியும், குடித்தும் அழித்து விட்டு சொற்ப தொகையைக் கொடுப்பார்.

செண்பகம் அந்த தொகையை வைத்துக் கொண்டு வயிறார உண்ணவோ, உடுத்திக் கொள்ளவோ கூட முடியாமல் திண்டாடினாள்.

"பாருப்பா கதிர்... உங்கப்பா வயல்ல இறங்கி பயிர் வச்சி, விவசாயம் செய்தா லட்ச லட்சமா பார்க்கலாம்! இந்த மனுஷன் உழைப்பதற்கு கஷ்டப்பட்டுகிட்டு... நிலத்தை குத்தகைக்கு விட்டு... அதில் கிடைக்கும் வருமானத்தையும் கூட்டாளிகளைச் சேர்த்துகிட்டு, குடிச்சியும், சீட்டாடியும் அழிக்கிறார்!...

நிலத்துக்கு சொந்தக்கார நாம பஞ்ச பரதேசி போல வாழறோம்! குத்தகைக்கு எடுத்தவன் நெல்லையும், கரும்பையும், மலர் தோட்டத்தையும் போட்டு காசா அள்ளி குவிக்கிறான்!...

விவசாயத்தை உங்கப்பா கேவலமா நினைக்கறாரு! விவசாயம் ஒன்னும் அவ்வளவு கேவலமான தொழிலில்லே, கதிர்! விவசாயம் புனிதமான தொழில்! நம் நாட்டின் முதுகெலும்பே விவசாயம்தானே கதிர்!"

"ஆமாம்மா!" பத்து வயதில் இருந்த கதிரவன் சொன்னான்.

"அப்படி ஒரு போற்றுதலுக்குரிய தொழிலை கேவலமான தொழிலா நினைச்சி சுற்றி திரியறார்! இந்த விவசாயம் பிடிக்கலேன்னாக் கூட வேற ஏதாவது தொழில் செய்து பிழைக்கலாம், கதிர்! இந்த பாவி மனுசன் எதுக்குமே மசிய மாட்டேங்கிறாரே! உனக்கு ஒரு குறையும் வைக்காமல் வளர்க்கணும்... பெரிய படிப்பெல்லாம் படிக்க வைக்கணும்னு கனவு கண்டுகிட்டு இருந்தேன்! இந்த மனுசன் என் கனவுலயும், கற்பனையிலயும் மண்ணைவாரி போட்டுட்டு பொலிகாளையா சுற்றி திரிஞ்சிட்டு இருக்கார். சத்திரம், சாவடி, அரசமரத்தடின்னு நாள் முழுக்க உட்கார்ந்து கிடந்துட்டு வந்து, இரவானால் என்னோட சண்டைக்கு நிற்கறார்!" என்று செண்பகம் அழ...

கதிரவன் அவள் கண்களைத் துடைத்து...

"அம்மா... சப்ளிமெண்டரி ரீடர்லே ஒரு ஸ்டோரி இருக்கும்மா! அந்த ஸ்டோரி பேரு 'ரிப்வான் விங்கிள்'. அதில் வரும் ரிப்வான் விங்கிள் நம்ம அப்பா போல சோம்பேறிதாம்மா! அவருக்கு நிலமிருக்கும். ஆனா உழைக்க மாட்டார். அவர் வொய்ப் நிலத்துல இறங்கி வேலை செய்துட்டு வாங்க... குழந்தைங்க பசியும், பட்டினியுமா கிடக்குன்னு கெஞ்சுவாங்க! அவர் வொய்ப் பேச்சை கேட்க மாட்டார். ஊர் குழந்தைகளைக் கூட்டிட்டு கதை சொல்லுவார்... பட்டம் செய்து பறக்க விடுவார்! நிக்கோலஸ்ன்னு ஒரு ஓல்டுமேன் சத்திரம் கட்டி வச்சிருப்பார். அந்த சத்திரத்துக்கு முன்னாடி படுத்தும், சீட்டுவிளையாடியும் பொழுதை கழிப்பார்!...

அவர் மனைவி பார்ம்ல இறங்கி வேலை செய்து குழந்தைகளை காப்பாற்றுவாங்க! அதுபோல நீ நம்ம நிலத்துல இறங்கி உழைம்மா! பிறகு நான் பெரியவனாகி, படிச்சி முடிச்சிட்டு வந்து... நானும் நிலத்துல இறங்கி அறுவடை செய்யறேன்!" என்று பேசிய கதிரை தாய் செண்பகம் இழுத்து இறுக்கி கண்ணீர் விட்டாள்.

கன்னியாகுமரியில் வசித்த தம்பி விநாயகம் அரசு ஊழியர்.

தனது மைத்துனன், தனது அக்காவை கஷ்டஜீவனம் செய்ய விட்டு விட்டாரே என்று பரிதாபப்பட்டு... அவரால் முடிந்த பண உதவி செய்தார்.

கதிரவனையும் தரமான பள்ளியில் சேர்த்து படிக்க வைக்கிறார். ஸ்கூல் பீஸ், பஸ் செலவு என்று எல்லாவற்றையுமே ஏற்றுக் கொண்டார்.

பள்ளியில் காலாண்டு, அரையாண்டு, முழு ஆண்டு பரீட்சைக்கு லீவு விடும்

போதெல்லாம் மாமா விநாயகம் வீட்டுக்கு வந்து விடுவான், கதிரவன்.

விநாயகத்திற்கு ஒரே ஒரு பெண் சுவாதி. ஆண்வாரிசற்ற விநாயகத்திற்கு கதிரவனை ரொம்பவே பிடித்து விட்டது. கதிரவன் என்றால் அவருக்கு உயிர்!

கதிரவனுக்கும், சுவாதிக்கும் ஐந்து வயது வித்தியாசம்.

சுவாதிக்கு கதிரவனைப் பிடிக்காது!

காரணம்!

தனது தந்தைக்கு தன்னைவிட அவனைப் பிடித்திருப்பதால்தான்!

விநாயகம் கதிரவனைக் கொஞ்சும் போதெல்லாம் குரோதத்தோடு முறைப்பாள், சுவாதி.

அவன் எழுதி வைத்திருக்கும் காலாண்டு, அரையாண்டு வினாத்தாள்களின் அசைன்மெண்ட் பேப்பர்களை எடுத்து மறைத்து வைத்துவிட்டோ, அல்லது கிழித்து எறிந்து விட்டோ... மீண்டும் அந்த வினாத்தாள்களுக்கான விடையைத் தயாரிக்கும்படி செய்துவிடுவாள்.

அவன் கண்விழித்து எழுதுவதை கண்குளிரப் பார்த்து ரசிப்பாள்.

கதிரவனின் பதிமூன்றாவது வயதில் குடித்து குடித்து குடல் அழுகிப்போனதால் சுப்பிரமணியன் இறந்து போனார். விநாயகம் எவ்வளவு வற்புறுத்தியும் மாமியாரையும், வீட்டையும் விட்டு வர முடியாது என செண்பகம் சொல்லிவிட்டாள்.

கதிரவன் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது விநாயகம் வீட்டின் மாடிக்கு ஒரு குடும்பம் குடி வந்தது. அந்த வீட்டுப் பெண் தென்றல்... சுவாதியோடு படித்தாள்.

சுவாதிக்கு நேர் எதிர்மாறானவள், தென்றல்! தென்றல் அறிவும், புத்திசாலித்தனமும், அமைதியும் கொண்ட பெண்! அந்த அழகான முகத்தைக் கண்டுவிட்டால் உற்சாகமாகி விடுவான். அவளை அழைத்துக் கொண்டு பட்டம் செய்து பறக்க விடுவான்.

அவளுக்கு பாடத்தில் எழும் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பான்.

பத்தாம் வகுப்பு படிக்கும்போது மாமன் வீட்டிலேயே தங்கி படித்தான், கதிரவன்.

"அத்தான்... இந்த சம் புரியலே மாட்டேங்குது. சொல்லித் தரீங்களா?" என்று தென்றல் வந்து நிற்பாள்.

"அவன் பப்ளிக் பரீட்சைக்கு படிக்கிறான். என்று மஞ்சுளா விரட்டுவாள்.

"அதை நான் படிக்க வேண்டியதை படிச்சி முடிச்சிட்டேன். தென்றலுக்கு சொல்லித் தரேன்!" என்று கதிர் சொல்லித் தருவான்.

"ஏய் தென்றல்... அவனுக்கு ஒன்னும் தெரியாது! போயும் போயும் அவன் கிட்டே போய் கேட்கறியேடி!" என்று சுவாதி இளக்காரம் சொல்லி சிரிப்பாள்.

"அத்தான் நல்லா சொல்லித் தருவாங்க. ஏற்கனவே எனக்கு நிறைய சம் க்ளியர் பண்ணியிருக்காங்க! சயின்ஸ் சப்ஜெக்ட் சூப்பரா சொல்லித் தந்திருக்காங்க!" என்று தென்றல் சுவாதிக்கு பதிலடி கொடுப்பாள்.

"அத்தானாம் அத்தான்! அவன், இவன், தடியன்னு சொல்லாமல்!" என்று பழித்துக் காண்பிப்பாள் சுவாதி.

"அத்தான்... நீங்க என் மிஸ்ஸை விட ரொம்ப அழகா, அருமையா சொல்லித் தரீங்க, தெரியுமா? இந்த சுவாதி இப்படி ஒரு நல்ல அத்தானை வச்சிட்டு படிக்கவே மாட்டேங்கிறா! மிஸ்கிட்ட பேட்கேர்ள்னு பேர் வாங்கறா!" என்று தென்றல் ஒருநாள் சொல்ல...

"நீ என்ன ரேங்க் எடுக்கறே, டென்றே?" என்று கதிரவன் கேட்டான்.

"முன்னெல்லாம் தேர்ட், செகண்ட் எடுத்தேன். இந்த முறை நல்லா எழுதியிருக்கேன். பர்ஸ்ட் ரேங்க் வருவேன் அத்தான்! எல்லாம் உங்களால்தான் அத்தான், தேங்க்ஸ் அத்தான்!" என்றாள் தென்றல்.

பன்னிரெண்டாம் வகுப்பில் நிறைய மார்க் எடுத்து தேர்ச்சி பெற்றான் கதிரவன்.

"கதிர்... மருத்துவம் படிக்க விருப்பமா? இல்லே பொறியியல் படிக்க விருப்பமா? எதுக்குப்பா விண்ணப்பிக்கலாம்?"

விநாயகம் மருமகனைக் கட்டிக் கொண்டு ஆசையோடு கேட்டார்.

"அதெல்லாம் வேண்டாம் மாமா! நான் பி.எஸ்சி. அக்ரியில சேரப் போறேன்!"

அவன் அவ்வாறு சொல்ல, விநாயகம் அதிர்ந்தார்.

"உன் மார்க்குக்கு மருத்துவமும், பொறியியலும் மெரிட்லே கிடைக்கும்?"

"அதெல்லாம் வேண்டாம்! எனக்கு விவசாயம் பற்றி படிக்கத்தான் ஆசை! நான் ஒரு டாக்டர், என்ஜினியர் என்பதை விட... விவசாயி என்று சொல்லிக் கொள்ளத்தான் ரொம்ப விரும்பறேன்!" என்று முடிவாக சொல்லி விட்டான்.

## 3

கதிரவன் கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மை பல்கலைக்கழகத்தில் சேர்ந்தான்.

''அங்கின்... நீங்க இனி வார விடுமுறைக்கெல்லாம் வரமாட்டீங்களா!'' தென்றல்தான் கேட்டாள்.

''ம்கும்! கோயம்புத்தூரிலிருந்து கன்னியாகுமரி ரொம்ப தொலைவு! அப்படியெல்லாம் அடிக்கடி வர முடியாது தென்றல்! செமஸ்டர் லீவு விட்டாதான் வர முடியும்!'' கதிரவன் கூற, தென்றல் முகம் வாடி சென்றாள்!

கதிரவனுக்கு தென்றலை ரொம்பவேப் பிடிக்கும்!

அது அந்த வயதிற்கே உண்டான ஈர்ப்பா? கவர்ச்சியா? அல்லது காதலா? அதற்கான விடை கதிருக்கு அந்த வயதில் தெரியாமல் போனது.

அதற்கு அடுத்த வருட லீவில் கதிரவன் கன்னியாகுமரி வந்தபோது தென்றலின் குடும்பம் சேலத்துப் பக்கம் குடிபோய் விட்டதாக செய்தி கிடைக்க... அவனுக்கு இடிவிழுந்தாற்போல ஒரு துடிப்பு உள்ளுக்குள் விரவி பரவியது.

தென்றல் இல்லாத லீவு நாட்கள் அவனுக்கு வெறுமையாய் இருந்தது.

ஒருநாள்...

''கதிரவனுக்கும், சுவாதிக்கும்... அழகுன்னாகட்டும், உயரத்திலாகட்டும் ரொம்ப பொருத்தம்! இல்லையாங்க!''

மஞ்சுளா கணவனைப் பார்த்து மலர்ந்த முகத்துடன் கேட்க... அப்பு வீட்டிலிருந்த சுவாதியின் காதுகளில் இந்த சொற்கள் விழுந்துவிட...

''யாரு கதிரையா நான் கட்டிக்குவேன்!''

''ஆமா!''

''ச்சே... அவனையெல்லாம் நான் கட்டிக்க மாட்டேன்!''

''ஏன்?''

''அவனை எனக்கு பிடிக்கலே! அறிவுமில்லாமல் ஒரே வீட்டுல வளர்ந்த ரெண்டு பேரும் கட்டிக்குவாங்களா? கண்டிப்பா நான் கதிரை கல்யாணம் செய்துக்க மாட்டேன்!''

சுவாதி கண்டிப்புடன் சொல்ல... அந்த வயதில் அறியாமல் பிதற்றுகிறாள் என்றுதான் அனைவரும் எண்ணினர்.

கதிரவன் படிப்பு முடிந்து வந்து விவசாயம் பார்க்க, சுவாதி கல்லூரியில் காலெடுத்து வைத்தாள்.

அவள் படிப்பது ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கும் கல்லூரி. முதல் வருடம் படிப்பிலும், படிப்பிலும் கழிந்து விட்டது.

இரண்டாம் ஆண்டு... கல்லூரி மாணவிகளுக்கிடையே நடைபெற்ற அழகு போட்டியில்... சுவாதி வென்று மகுடம் சூடிக் கொள்ள, அன்றிலிருந்து இளவரசி கணக்காய் சுற்றித் திரிந்தாள்.

கவின் வர்மா பி.பி.ஏ.வை இங்கேதான் பயின்றவன். மீண்டும் இங்கே வந்து எம்.பி.ஏ. சேர்ந்து படித்தான். அவன் அழகில் மயங்கி வலிய போய் விழுந்த பெண்கள் ஏராளம்.

அந்த வருடம் அழகிப் போட்டியில் வென்ற சுவாதியின் மேல் அவன் பார்வை ஆழமாய் பதிய... அவன் போகுமிடமெல்லாம் பின்னாடியே சென்றான்.

அந்த முறைப்பக்காரனின் கோதுமை



### உலகின் மிகப்பெரிய புகைப்படம்

கடந்த வருடம்தான் 111 கிகா பிக்சல் என்ற கேமரா உலகில் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த கேமரா மூலம் ஸ்பெயின் நாட்டின் நான்காவது பெரிய நகரமான ''செவில்'' என்ற நகரை புகைப்படமாக எடுத்தார்கள். இந்தப் புகைப்படம்தான் உலகின் மிகப்பெரிய புகைப்படமாக இருந்து வருகிறது.

6,13,376 x 1,81,248 பிக்சல் நீள, அகலம் கொண்டது இப்புகைப்படம். கிட்டத்தட்ட 9,750 படக் கோர்வைகளைக் கொண்டது. நகரின் 60 மீட்டர் உயரத்தில் டோர் ஸ்வெட்லர் என்ற இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட இப்புகைப்படம் அண்மையில்தான் வெளியிடப்பட்டது. செவில் 111 கிகா

நிறம்... அவளுக்கு இறக்கத்தை உண்டுபண்ணியது!

அவன் நோக்க... அவளும் நோக்க... சுனில் நெருங்கி வந்து பேசத் தொடங்கிவிட்டான்.

அந்த சுனிலின் காதலை... தன் அழகுக்கு கிடைத்த காணிக்கை என்று எண்ணினாள்.

கல்லூரியை கட் செய்து விட்டு... சுனிலோடு டூவீலரில்... சுடிதாரின் துப்பட்டாவால் முகத்தை மறைத்துக் கொண்டு... கட்டிப் பிடித்துக் கொண்டு பயணித்தாள்.

ஸ்பெஷல் கிளாஸ், குரூப் ஸ்டடி என்று கூறிக் கொண்டு... சுனிலோடு பீச், பார்க், ஓட்டல் என்று கை கோர்த்து திரிந்தாள்.

அவன் ஒரு நாள் ஓட்டலில் ரூம் போட்டு விட்டு அவளை அழைக்க... அவளும் சாதாரணமாய் அங்கே போக... அவளை உள்ளே அழைத்து தாழ்போட... சுவாதிக்கு கருக்கென்றது.

"எதுக்கு கதவைத் தாழ் போடறீங்க?"

"எதுக்கு தாழ் போடுவாங்க? நீ



பிக்சல் என்று இப்புகைப்படத்துக்கு வெளியிடப்பட்டுள்ளது.

இதனை காகிதத்தில் அச்சடிக்க யாராவது விரும்பினால் 13,800 சதுர அடி பரப்பளவுக்கு அதாவது இரண்டு கால்பந்து மைதானங்களின் பரப்பளவுக்கு கொண்டு வர வேண்டும். அம்மாடியோவ்... அம்மாம் பெரிய புகைப்படமா!

இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுங்கள். கைத்தொலைபேசியிலும் இந்த தொழில்நுட்பத்தைக் கொண்டு வந்து விடுகிறோம் என்கிறார்கள், இந்தப் புகைப்படம் எடுத்த புகைப்படக்காரர்கள்.

பலே கில்லாடிகள்தான்.

சினிமாவுல இதுபோல சீன்களையெல்லாம் பார்த்ததில்லையா? அதுக்குதான்!"

அவன் கண்களில் கவர்ச்சியைக் கூட்டி... இதழ்களில் மந்தகாசமான புன்னகையை நெளியவிட்டு... ஆசையோடு அவளை அணைத்து... முகமெங்கும் முத்தமிட்டு... அவளை படுக்கையில் தள்ளியபோதுதான் அவளுக்கு திக்கென்றது. அவனைப் பிடித்து தூரமாக தள்ளினாள்.

"இதெல்லாம் தப்பு சுனில்! எல்லாம் கல்யாணத்துக்கு பிறகுதான்!" ஆத்திரத்தோடு சொன்னவளை...

"என்ன இது... சரியான கன்ட்ரி புரூட்டா இருக்கே? நான் உன் காதலன்! காதலியோட ஆசையை நிறைவேத்தறதுதான் ஒரு காதலியோட வேலை!" என்று சுனில் கோபமாய் கூறினான்.

"எங்க தமிழ்நாட்டு பொண்ணுங்க காதலனோட ஆசையையெல்லாம் நிறைவேற்ற மாட்டாங்க! அதே காதலன் கணவனானால்தான் ஆசையும், இன்பமும் நிறைவேறும்!"

சுனில் அவளைப் பார்த்து ஏளனமாய் சிரிக்க...

"சுனில்! நான் உன்னை உயிருக்குயிரா விரும்பறேன்! உன்னை மணந்து உன் காலடியில் வாழ விரும்பறேன்!" என்று அழுதாள்.

எத்தனையோ முறை அவளை அடைய நினைத்த சுனிலுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. சுவாதியிடம் அவனுடைய கெஞ்சலும், கொஞ்சலும் கடைசிவரை செல்லுபடியாகாமல் போனது.

ஆனாலும்... அன்புடன், நேசமுடன், பிரியமுடன், மயிலிறகாய் மனதை வருடியப் பெண் சுவாதியை அவனுக்கு ரொம்பவும் பிடித்து விட்டது.

சுனில் மேலும் அவளுக்கு மதிப்பு கூடியது!

படிப்பு முடிந்தது!

சுனில் வசீலாவைப் பிரிய முடியாமல் கண்ணீர் விட்டு கதறினாள், சுவாதி.

"சுனில்... என்னை ஏமாற்றிட மாட்டீங்களே?" அவன் கைகளைப் பற்றி கேட்டாள்.

"ஹேய் சுவாதி... என்ன கேள்வி கேட்கிறே! உன்னைப் போய் மறப்பேனா?"

"என்னை பெண் கேட்டு வந்து மணந்துப்பீங்க இல்லையா!"

"மும்பை போய் அண்ணாவோட

பிள்ளைய எடுபடணும்! அண்ணாகிட்ட நல்லபேர் எடுக்கணும்! நீ ஒரு ரெண்டுவருடம் பொறுத்துக்கோ! அண்ணாவுக்கு மேரேஜ் ஆனதும்... நம்ம சூட் இனிமா அண்ணாவோட ஆயிடும்! அப்புறமா பார்வதியோட பெண்கேட்டு வரேன்! நீ சும்மா இருந்துடாதே! எம்.பி.ஏ. சேர்ந்து படி! என்ன சுவாதி!"

"ம்..."

"என்னை நீ நம்பறேதானே!"

"ம்..." என்று அழுகையில் குலுங்கியவளை இழுத்து அணைத்து, இதழ்களில் முத்தமிட்டான்.

சுவாதி அடக்க முடியாமல் நெடுநேரம் விம்மினாள்! வெடித்தழுதாள்!

## 4

விநாயகம் சுவாதி, கதிரவனின் ஜாதகக் கட்டை எடுத்தார். சுவாதி அதிர்ந்தாள்.

"உன் படிப்பு முடியத்தான் காத்திருந்தேன்! அடுத்த கடமை உன்னோட திருமணம்தானே? அதான்"

"யார் மாப்பிள்ளை?"

"என்ன இது மடத்தனமான கேள்வி? நம்ம கதிரவன்தான்! அவனுக்குத்தான் நீன்னு சொல்லித்தானே வளர்த்துட்டு வரேன்!" என்று மிரட்டலோடு கேட்டார்.

"எனக்கு இப்போ திருமணம் வேண்டாம்!" சுவாதி கோபத்தோடு பட்டென்று கூறினாள்.

"ஏன்?"

"எம்.பி.ஏ. படிக்கணும், நான்!"

"படிச்சதெல்லாம் போதும்! இப்போ எம்.பி.ஏ. படிச்சிட்டு எந்த பிஸினசைப் பார்க்க போறே? நீயென்ன பெரிய பிஸினஸ் மேனோட மகளா என்ன! சாதாரண அரசு ஊழியரோட மகள் என்பதை நினைவுபடுத்திக்கோ!"

"தனியா பிஸினஸ் பார்க்கணும்னு அவசியமில்லேப்பா! படிச்சிட்டு போனால் பெரிய பெரிய கம்பெனியில வேலை கிடைக்கும்! நாற்பது, ஐம்பதாயிரம்னு மாசத்துக்கு சம்பாதிக்கலாம்!"

"உன்னை வேலைக்கு யார் அனுப்பப்போறா? வெட்டியா பேசிட்டு நிக்காதே! போய் வேலையிருந்தாப் பார்!"

"அப்பா..."

"படிப்பை முடிச்சிட்டு கதிரவன் மூணு வருஷமா விவசாயம் செய்து முன்னேறிட்டு வரான்! ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சம் வீதம் இருபத்தஞ்சி முப்பது லட்சம் மகசூல்ல எடுக்கறான். மூணுவருஷத்துல கடுமையா உழைச்சி, அப்பன் வித்துட்டு போன இந்த ஏக்கரா வாங்கி கிரயம் பண்ணிட்டான்! இப்படியே என் மாப்பிள்ளை கடுமையா உழைச்சான்னா ஒரு நாள் பெரிய கோடீஸ்வரனா ஆயிடுவான்!... ஊரெல்லாம் தேடினாலும் இப்படி ஒரு தங்கமான, எந்த கெட்டப்பழக்கமும் இல்லாத மாப்பிள்ளையை உனக்கு கட்டி வைக்க முடியாது!"

"எனக்கு என்ன வயசாயிடுச்சிப்பா? அதுக்குள்ளே கல்யாணம் பண்ணி வைக்கணும்னு ஒத்தக் காலில நிக்கறீங்க?" சுவாதி கொஞ்சம் கடுமையாகவே கேட்டாள்.

"இருபத்தி ஒண்ணு நடக்குது! பெண்களின் திருமண வயசு இதுதானே?"

"எனக்கு கதிரவனை கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லே" சுவாதி முகம் வாடி சொல்ல...

"ஏய்... என்னடி சொல்றே?" மஞ்சுளா அடுப்படியில் கோபத்தோடு ஓடி வந்தாள். விநாயகத்திற்கு உச்சம் தலைவரை கோபம் விர்ரென்று ஏறியது. அதனை அடக்கி..

"கதிரவனும், உன் அத்தையும் இந்த வார்த்தைகளைக் கேட்டால் ரொம்ப கவலைப்படுவாங்க. கதிரவனுக்கு நம்ம சொந்த பந்தத்திலே ஏகப்பட்ட கிராக்கி! நம்ம வீட்டுல பெண் இருக்கறதால யாரும் உன் அத்தையை நெருங்க பயப்படறாங்க! அது உனக்கு தெரியுமா?"

"ஏய் சுவாதி...வாயை மூடிட்டு போடி! நீங்க போய் ஜோசியரைப் பார்த்துட்டு வாங்க! அவ கிடக்கா!" மஞ்சுளா கூறினாள்.

"எனக்கு இப்போ திருமணம் வேண்டாம்மா!"

"ஏய் சுவாதி... உன் உளறலை நிறுத்திட்டு உள்ளே போ!"

விநாயகம் உறுமிவிட்டு ஜாதகத்தோடு வெளியே செல்ல.. சுவாதி கண்ணீரோடு ஓடிப் போய் கட்டிலில் விழுந்து விம்மியவள் அப்படியே உறங்கி விட்டாள். தூக்கம் கலைந்து எழுந்தவள் திருமணத்தை நினைத்து கண்ணீர் விட்டாள்.

இந்த ஒரு மாதத்தில் அனில் போன் செய்வான் என்று காத்திருந்தாள். காத்திருந்து காத்திருந்து ஏமாந்ததுதான் மிச்சம். அவன் போன் செய்யாது போக... இவளும் விம்மலும், கோபத்தாலும்

அவனுக்கு போன் செய்யவில்லை.

ஆனால், இன்று தன் வீம்பு, கோபம், சுயமரியாதையை தூக்கி எறிந்து விட்டு... கனில் வர்மாவின் எண்களுக்கு தன் செல்போனில் முயற்சித்தாள்.

'இந்த எண் உபயோகத்தில் இல்லை' என்று பதில் வர விக்கிட்டமுதாள்.

மாலை வீடு திரும்பிய விநாயகம் புன்னகையோடு உள்ளே நுழைந்தார்.

"ஜாதக பொருத்தம் ரொம்ப அம்சமா இருக்கு மஞ்சுளா! எனக்கு மனசு நிறைஞ்சி போச்சி"

"எப்படிங்க பொருந்தாமல் போகும்? நம்ம மனசுல இருக்கற ஆசையெல்லாம் கடவுளுக்கு தெரியும்தானே! எப்படி நம்மை ஏமாற்றுவார்?" மஞ்சுளா சின்ன சிரிப்போடு சொன்னாள்.

"உன் பொண்ணுக்கு நல்ல புத்தி சொல்லி அவள் மனசை கல்யாணத்துக்கு தயார்படுத்து!"

"விவரம் தெரியாத பொண்... அதெல்லாம் விளக்கி சொன்னால் ஏத்துக்குவா! ஆனால், நீங்க அவகிட்ட பொறுமையா பேசுங்க! நீங்க அவகிட்ட கோபப்படறதும், கத்தறதும் எனக்கே பிடிக்கலை! இந்தக் காலத்து பிள்ளைங்ககிட்ட இனிமையா அன்பா சொன்னா கேட்டுக்குவாங்க!"

"சரிம்மா... நீ அவ மனசை பேசி பக்குவப்படுத்து"

"கட்டாயமா செய்யறேங்க!" மஞ்சுளா கூற, விநாயகம் நிம்மதியானார்.

இரவு சுவாதி பேருக்காய் சாப்பிட்டுவிட்டு போய் படுக்கையில் சுருண்டாள்.

'இந்தக் கல்யாணத்தை நிறுத்த வேண்டும்! கனிலை மணக்க வேண்டும்!' என்ற எண்ண அலைகளே அவளை அலைக்கழித்தது.

எத்தனை முறை முயன்றும் உபயோகத்தில் இல்லை என்று வர சோர்ந்து போனாள். பீரோவைத் திறந்து அவன் எழுதி கொடுத்த முகவரியைப் பார்த்தாள்.

உடனே ஒரு வெள்ளைப் பேப்பரை எடுத்து கடிதம் எழுதினாள்.

தன் நிலையை விளக்கினாள். அவன் மேல்கொண்ட காதலை உருக்கத்துடன் தெரிவித்தாள். அவன் இந்த கடிதம் கண்டு உடனே அவளைப் பார்க்க வரவில்லையென்றால்... தன் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று கடிதத்தை முடித்து... அதை உறையில் போட்டு... அட்ரஸ் எழுதி...தலையணைக்கு அடியில் வைத்தாள்.

பின் படுக்கையில் விழ... உணர்வுகளைக் கொட்டி கடிதம் எழுதியதன் விளைவாய், நெஞ்சிலிருந்த பாரமெல்லாம் இறங்கி, வடிந்து விட்டாற்போல தோன்றி, இதயம் முழுக்க ஒரு இதம் பரவ, நிம்மதியாய் இமை மூடினாள். நித்திராதேவி அவள் கைப்பற்றிக் கொண்டாள்.

நான்காம் நாள் கனில் வருவதற்கு பதிலாய் சுவாதி எழுதிய லட்டரே திரும்பிவர... அதை மார்பில் அணைத்துக் கொண்டு விம்மி வெடித்தாள்.

நல்லவேளை கடிதம் திரும்பிவந்த போது... வீட்டில் யாரும் இல்லாததால்... அவள் தப்பினாள்.

கனிலை இனி எவ்வாறு தொடர்பு கொள்வது எனத் தெரியாமல் விழிக்கமுதாள்.

இரண்டு நாட்கள் கழிந்து... ஒரு மாலை வேளையில் அத்தை செண்பகமும், கதிரவனும் வந்து நிற்க... விநாயகமும், மஞ்சுளாவும் பலமாய் வரவேற்றனர்.

ஹாலில் பேச்சு சப்தமும், சிரிப்பு சப்தமும் பெரிதாய் கேட்க... வெளியே வந்து பார்த்த சுவாதிக்கு மனதில் பெரும் நடுக்கம் ஏற்பட்டது.

"நானே வரணும்னு இருந்தேன்க்கா! அதுக்குள்ள நீயே வந்துட்டே!" செண்பகத்தைப் பார்த்து விநாயகம் சொல்ல...

"என்ன விஷயம், தம்பி?" செண்பகம் புன்னகையுடன் கேட்க...

"எல்லாம் நல்ல விஷயம்தான்! சுவாதிக்கு படிப்பு முடிஞ்சாச்சி! கதிரவனோ வீடு, வயல், தோட்டம்னு விவசாயத்தை கையில எடுத்து வெற்றிநடை போடறான்! காலாகாலத்துல இதுங்களுக்கு கல்யாணம் பண்ணிவச்சிட்டா என்னக்கா?" என்றார்.

அந்த கேள்வியால் செண்பகம் பூவாய் மலர... கதிரவனின் முகம் இருண்டு களையிழந்து போனது.

இன்னமும் சேலம், ஆத்தூர், கள்ளக்குறிச்சி என்று அங்கே வேலையாய் சென்றால்... சாலையின் இருமருங்கிலும் தென்றலைத் தேடுவான். தேடி அகப்படாத விழிகள் சோர்ந்து போகும்.

சமீபமாய் ஒரு நாள் விநாயகத்திடம் "மாமா... நம்மவீட்டு மாடியில சுவாதியோட ப்ரண்ட் தென்றலும், அவங்க குடும்பமும் குடியிருந்தாங்களே அவங்க எங்க இருக்காங்கன்னு தெரியுமா, மாமா!" என்றான்.

"சேலம் பக்கம் ஏதோ ஊர் சொன்னாங்க! கொஞ்ச நாள் கடித போக்குவரத்துகூட இருந்தது. அதுக்குப் பிறகு அவங்களும் கடிதம் போடறதில்லே! நானும் விட்டுட்டேன்! அந்த ஊரை விட்டு வேற ஊர் மாறி இருப்பாங்கன்னு நினைக்கறேன்! நீ எதுக்கு கேட்கறே?"

"அந்த தென்றல் ரொம்ப நல்ல பெண்! நம்ம சுவாதியோட பெஸ்ட் ப்ரெண்டும் கூட! என்ன செய்யறா? என்ன படிக்கறான்னு தெரிஞ்சுக்கலாம்னு கேட்டேன்! வேற எதுக்கும் இல்லே மாமா!" என்று மழுப்பி சமாளித்து இருக்கிறான், கதிரவன்.

"நானுமே இது விஷயமா உன்கிட்ட பேசணும்னு இருந்தேன், விநாயகம்! நீயே அதுபற்றி தொடங்கிட்டே!" என்று பூரிப்பில் செண்பகம் சிரிக்க...

"என்னக்கா... உனக்கு இஷ்டம்தானே?"


"என்னடா இப்படி ஒரு கேள்வி கேட்கறே, விநாயகம்? இதுக்காகத்தானே நான் தவமா தவமிருந்தேன்! நான் வச்சிருக்கறது ஒத்த பிள்ளை! ஊர் மெச்ச கல்யாணம் செய்யணும்! அவன் மகிழ்ச்சியா இருக்கணும்னு நான் ஆசைப்படாத நாட்களில்லை!"

"அம்மா என் திருமணத்திற்கு என்ன அவசரம்? இருபத்தஞ்சி முடிஞ்சி இருபத்தாறு தொடங்குது! அதுக்குள்ளே என்ன அவசரம்? நான் இன்னும் முன்னேறணும்! அதுக்கு பிறகுதான் திருமணம்!"

கதிரவன் அப்படி சொல்ல, சுவாதி மலர்ந்தாள். பெரியவர்கள் மூவரும் அதிர்ந்தார்கள்.

"என்ன கதிரவா பேசறே! நீ சம்பாதிக்கிற சம்பாத்தியம் போதும்! லட்ச லட்சமா சம்பாதிக்கறே! ஏர் உழுற டிராக்டர், அறுவடைக்கு மெஷின்னு ரொம்ப முன்னேறிட்டே! திராட்சை தோட்டம் வேற கொத்து கொத்தா காய்ச்சி தொங்குது! இந்த வருஷம் இன்னும் வருமானம் அதிகரிக்கும்!... காலா காலத்துல பூவா இருந்தாலும்... ஆடவனா, பூவையரா இருந்தாலும் பூக்கணும், காய்க்கணும்!" செண்பகம் முடித்தார்.

"ஏன் சுவாதியை உனக்கு பிடிக்கலையா கதிரவா?" விநாயகம் கூர்மையாக



பார்வையோடு கேட்டார்.

"ஐய்யோ மாமா... அப்படியெல்லாம் இல்லை!"

"பின்னே? பெரியவங்க ஆசை உங்களுக்கு திருமணம் செய்து வச்சி கண்குளிர பார்க்கணும்கிறதுதான்! நீ இப்படி பேசினா என்ன அர்த்தம்! பெரியவனா ஆனதும், கொஞ்சம் சம்பாதிக்க ஆரம்பிச்சதும், மாமனை மதிக்கக்கூடாதுன்னு நினைக்கறியாப்பா?"

"ஏன் மாமா... இப்படி தப்பு தப்பா அர்த்தம் எடுத்துக்கறீங்க!"

"திருமணத்தை மறுக்க என்ன காரணம்? உன் மனசுல வேற யாராவது இருக்காங்களா? சொல்லு, கதிர்?"

என்றோ பிரிந்து சென்ற தென்றல் மனதில் இருக்கிறாள் என்று எப்படி சொல்வது?

தென்றலுக்கு என் நினைப்பு இருக்குமா? என்னை நினைப்பாளா?

வயது பெண்ணான தென்றலுக்கு யார் மேலாவது காதல் வந்திருக்கலாம்! இந்நாளில் திருமணம் கூட நடந்திருக்கலாம்! கணவன், குழந்தை என்று வாழலாம்! எதிரில் இல்லாத மாயைக்காக, நிழலுக்காக நிஜத்தை எப்படி தொலைப்பது?

கதிரவன் யோசனையோடு இருக்க...

"நீ யோசிக்கிறதைப் பார்த்தால் ஏதோ விஷயம் இருக்காப்போல இருக்கே, கதிர்!" விநாயகம் கேட்க.

'கதிர் மனதில் யாராவது இருக்க வேண்டும். அதைக் காரணம் காட்டி கதிர் இந்தத் திருமணத்தை நிறுத்த வேண்டும்!' என்று இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தாள், சுவாதி.

ஆனால், கொஞ்ச நேரத்தில் நீர்க்குமிழியாய் அவள் வேண்டுதல்கள் உடைந்து சிதறின.

"யாரும் இல்லை மாமா! சுவாதிக்கு இஷ்டம்ன்னா எனக்கும் விருப்பம்தான்!"

கதிரவன் சொல்ல... சுவாதியைத் தவிர அங்கிருந்த மூவரின் வயிற்றிலும் பாலை வார்த்தாற்போல இருந்தது.

## 5

விநாயகம் சுவாதி சொல்லுக்கோ... கதிரவன் சொல்லுக்கோ மதிப்பு கொடுக்கவில்லை!



திருமணத்தை முடித்துவிடுவதில் மும்முரமாய் இருந்தார். அவர் மட்டும் ஒரு முடிவெடுத்தால்... அந்த முடிவிலிருந்து பின் வாங்க மாட்டார்.

கதிரவனும் மாமனின் விருப்பத்திற்கு விட்டுவிட்டான்.

அவர் செண்பகத்தை அழைத்து திருமணத் தேதியை குறித்தார்.

"அப்பா... சொந்தத்திலே கல்யாணம் பண்ணினால் குறையுள்ள பிள்ளைதான் பிறக்குமாம்!" சுவாதி சொல்ல...

"யார் சொன்னா?"

"அறிவியல் சொல்லுதுப்பா! அத்தை மகன், மாமன் மகன், தாய்மாமன்னு உறவுக்குள்ளே சொந்தம் விட்டுப் போகக்கூடாதுன்னு திருமணம் செய்துக்கிற பெரும்பாலான பேருக்கும் குறையுள்ள பிள்ளைதான் பிறக்கும்! நிறைய இடத்துல இது பிராக்டிகலா நடக்குதுப்பா!"

"நானும், உன் அம்மாவும் சொந்தம்தான்! உனக்கு என்ன குறையிருக்கு? என் அக்கா செண்பகமும் அத்தை மகனைத்தான் கட்டிட்டாங்க! கதிரவனுக்கு என்கே ஊனமா இருக்கு? ம்? சொல்லு?" என்று விநாயகம் சுவாதியை பார்த்து கத்த...

"அப்பா... நீங்க படிச்சவங்க! நீங்களே இதுபோல முட்டாள்தனமான வேலையைச் செய்யலாமா?" சுவாதி இப்படி கேட்கவும், பெரும் கோபம் வந்தது, விநாயகத்துக்கு!

"ஏய் சுவாதி... நீ இப்படி உட்காரு! நீ பேசறதைப் பார்த்தா கதிரவனை மறுக்க இதெல்லாம் காரணம் இல்லே போல தெரியுது? ஏய்... நீ யாரையாவது காதலிக்கறியா!" என்று விநாயகம் ஏழுகட்டையில் மிரட்ட...

"ஐய்யோ அவகிட்ட போய் ஏன் இப்படியெல்லாம் அசிங்கமா கேட்கறீங்க? நம்ம வளர்ப்பு எப்படி பொய்யாகும்?" மஞ்சுளா கண்ணீரோடு இடைப்புகுந்தாள்.

"மஞ்சுளா.. நீ தூரப் போ! சுவாதி... உண்மையான காரணத்தை சொல்லு! பொய் சொல்லாதே!"

"அதெல்லாம் எந்த காரணமும் இல்லேப்பா" பயத்துடன் சுவாதி சொல்ல...

"பொய் சொல்லாதே சுவாதி! உன் வார்த்தைகளில் எது பொய்! எது உண்மைன்னு உன்னைப் பெத்தவன் என்னால கண்டுபிடிக்க முடியும்!" ஒரு கூர்மையான பார்வையோடு கேட்க...

சுவாதி கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மெல்ல

"நான் ஒருத்தனை காதலிக்கிறேன்..."

"நான் ஒருத்தனை தாலிக்கணும்! பெத்த

"ஏய்... உனக்கு என்ன துணிச்சல்? பெத்த தகப்பன்கிட்டயே காதல், கத்தரிக்காய்னு பிதற்றறியே! யாருடி அவன்?" என்று அவர் கை ஓங்கிவர... மஞ்சுளா ஓடி வந்து தடுத்தாள்.

"வேண்டாங்க! வயசு பொண்ணுமேல கை வைக்க வேண்டாம்! மெதுவா கேளுங்க!" என்று அழுகையோடு சொல்ல...

"சொல்லு! உன் மனசை கெடுத்த ராஸ்கல் யார்?"

"கனிஷ் வர்மா! அவர் சொந்த ஊர் மும்பை! அவரை உயிருக்குயிரா விரும்பறேம்ப்பா!" கலங்கிய விழிகளோடு சொல்ல...

"ச்சே... இப்படி சொல்ல உனக்கு வெட்கமா இல்லே? அந்த காதல், கத்தரிக்காயை எல்லாம் தலைமுழுகிட்டு... கதிரை கட்டிக்கிற வேலையைப் பார்!" விநாயகம் காட்டமாய் கூறினார்.

"இந்த கழுதைக்கிட்ட எதுக்கு பேசிட்டு இருக்கீங்க? நான் குடிச்சாச்சி இல்லையா? எதுக்கு இவகிட்ட அநாவசியமா கெஞ்சிட்டு இருக்கீங்க?"

மஞ்சுளா கோபம் கொப்பளிக்க கண்ணீரோடு பேசினாள்.

சுவாதி ஆத்திரமும், கோபமும், ஆற்றாமையும் மேலிட தன்னறையில் போய் புகுந்து கொண்டாள்.

தொடர்ந்து வந்த ஒரு நாள்... தோழியைக் காண செல்வதாய் கூறிவிட்டு... கனிஷ்வர்மாவோடு படித்த ராஜா, ரமேஷ், அமர், கிருஷ்ணாவைப் போய் சந்தித்தாள் சுவாதி.

"அவனைப் பற்றி கேட்காதே, சுவாதி! போன் நெம்பரை மாற்றிட்டு இருக்கான். அவன் கொடுத்துட்டு போன அட்ரஸும் பொய்! மும்பையில இருக்கிற என் நண்பனை விட்டு என் வேலை விஷயமா கனிஷைப் பார்த்துட்டு வரச் சொன்னேன். போனால் கனிஷ் அந்த வீட்டுல இல்லே! யாரோ ஒரு சேட் குடும்பம் இருக்குதாம்! அவன் பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்தவனாய்தான் இருப்பான்!"

"நீ எப்படித்தான் அந்த இடியட்கிட்ட ஏமாந்தியோ! அவன் கெட்டவன்னு உனக்கு தெரியும்தானே? உன் மேல எனக்கெல்லாம் கோபம்தான்! அவனை மறந்துட்டு... உன் அப்பா பார்க்கிற கதிரைக் கட்டிக்கோ. அவரைப் போல ஒரு நல்ல

மனிதரைப் பார்க்க முடியாது! எந்த கெட்ட பழக்கமும் இல்லாதவர்! அருமையா இயற்கை விவசாயம் செய்து முன்னேறிட்டு வர்றாரம்! நானுமே கேள்விப்பட்டேன்!"

"அவன்கிட்ட மயங்கின பொண்ணுங்களை கற்போட விட்டு வச்சது உன்னைத்தான்! நீ சம்மதிக்காத ஒரே காரணத்தால்தான்... நீ அவன்கிட்டயிருந்து தப்பிச்சே! ஒருத்தியை மட்டும் என்னால தொட முடியல, அனுபவிக்க முடியலைன்னு புலம்புவான்! அப்படி ஒரு கேடு கெட்ட புத்திக்காரன்!"

"அவனை மற, சுவாதி! உன் அத்தை மகன் கதிரை கட்டிக்கோ! உன் வாழ்க்கை தெளிந்த நீரோடையா இருக்கும்!"

ஸ்கூட்டி எடுத்துக் கொண்டு அலைந்து திரிந்ததில் கிடைத்த தகவலால்... இடி விழுந்த கணக்காய் உட்கார்ந்து விட்டாள், சுவாதி.

அவளின் களையிழந்த முகம், உடலின் ஒளியிழப்பு, உண்ணாமல், உறங்காமல் சத்தியாகிரகம் செய்தது கண்டு... விநாயகம் அவள் முன்பு கவிழ, தூக்க மாத்திரை அடங்கிய பாட்டிலை வைத்தார்.

"சுவாதி... கதிரை மணந்துக்க மறுத்துட்டு... நீ ஏதாவது விபரீதமான வேலையில இறங்கிட்டா... நாங்க ரெண்டுபேரும் எதைத் தேர்ந்தெடுத்து சாகட்டும்?" என்று கேட்க, அதற்கு மேல் தாங்க முடியாத சுவாதி அழுகையோடு சொன்னாள்.

"உங்க விருப்பப்படி கேட்கறேம்ப்பா! கதிர் அத்தானை கட்டிக்கிறேம்பா!"

சுவாதி அனுமதி கொடுத்துட்டு தன்னறையில் புகுந்து நெடுநேரம் அழுது தூங்கிக் கொண்டிருந்தாள்.

அதன் பிறகு திருமணத்துக்கான ஏற்பாடு தடபுடலாய் நடந்தது.

ᴗᴗᴗ

இரவும், இருட்டும் கை கோர்த்துக் கொண்டு... கும்மாளத்துடன் பூமியை இருட்டடிப்பு செய்து கொண்டிருந்த பனிபடர்ந்த அந்த விடியற்காலைப் பொழுதில்... அங்கொன்றும் இங்கொன்றுமாய் மின்விளக்குகள் செயற்கை நிலவாய் இருட்டை விரட்ட படாதபாடு பட்டுக் கொண்டிருந்த அந்த வேளையில்...

கன்னியாகுமரி, கடற்கரைச் சாலையில் இருந்த அந்த பெரிய திருமண மண்டபம்... சீரியல் பல்புகளின் துணையுடன்... மின்மினியாய் மின்னி ஒளிர்ந்துக் கொண்டிருந்தது.

சுவாதி எழுப்பப்பட்டாள். நீராடி அழைத்து வரப்பட்டாள். எளிய அலங்காரம் செய்து அழைத்து வந்து... அவளையும், கதிரவனையும் அருகருகே அமர வைத்து மணவலங்கு வைத்தனர்.

பெற்றவர்கள், சொந்தபந்தம் என்று இன்புற்று இருக்க... சுவாதி மட்டும் மனதிற்குள் ஊமையாய் அழுதுக் கொண்டிருந்தாள்.

கதிரவனுக்கோ தென்றலின் மழலை முகம் நினைவில் வந்து அடிக்கடி இம்சித்தது.

தென்றலின் நினைவுகளை அப்புறப்படுத்தவும், உள்ளுக்குள் இருக்கும் தென்றலின் பாதச்சுவடுகளையும் அழிக்க பெரும் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தான்.

சுவாதி நலங்கு முடிந்து மீண்டும் நீராடப்பட்டாள். அழகுநிலைய பெண்மணியின் கைவண்ணத்தில் தேவதையாய் ஜொலித்தாள்.

மணமேடையில் பட்டுவேட்டி, சட்டை அணிந்த கதிர் அமர்த்தப்பட்டான். வானத்து தேவதையாய் வந்தமர்ந்த சுவாதியைக் கண்வெட்டாமல் நோக்கினான்.

'என்னை நம்பி வந்த பெண்! என்னை நம்பி தனது எதிர்கால வாழ்க்கையை ஒப்படைக்கப் போகும், என்னவள் இந்த சுவாதி! இவளுக்கு சிறு திங்கோ, துரோகமோ, தயாமோ இழைக்கக்கூடாது! மனமே... மனமே... தென்றலின் மேலுள்ள சிறுநேசத்தை அழித்துக் கொள்! என்னுடன் பயணிக்கும் சலனத்தை, சஞ்சலத்தை அப்புறப்படுத்து!' கதிரவன் மனதிடம் வேண்டிக் கொண்டான்.

தென்றலின் மேல் வைத்த அந்தப் பிரியத்தை, ஞாபகத்தை ஓமகுண்ட தீயில் போட்டு பொசுக்கினான்.

அய்யர் மந்திரம் சொல்ல... சுவாதியின் சங்கு கழுத்தில் தாலியைக் கட்டினான், கதிரவன். அந்த நிமிடத்தில் இருந்து முழுமையாய் சுவாதியுடையவனானான்! சுவாதியை நேசிக்க ஆரம்பித்தான்.

வானபரப்பில் தனித்துவிடப்பட்ட நிலவு மங்கையை... நட்சத்திர வாலிபர்கள் ஒன்று திரண்டு, கலாட்டா செய்து, விரட்டி வேட்டையாட முயல... அந்த அழகு தேவதையோ... அவர்களுக்கெல்லாம் பயந்து பயந்து கருமேகங்கள், வெண்மேகங்களில் மறைந்து மறைந்து நடைபெற்ற இரவு

நான் முழுக்க சடங்கு சம்பிரதாயம் என நிறைய வைத்து கதிரையும், சுவாதியையும் நிற்க வைத்து கதிரையும், சுவாதியையும் வாட்டி வதைத்து விட்டனர். கதிரவனின் கிராமத்திலிருந்து வந்த முதியோர்களின் காலில் விழுந்து வணங்கியே சுவாதிக்கு மூட்டுகளில் வலி எடுத்து விட்டது.

இருவரும் பேசிக் கொள்ள சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. மதியத்திற்கு மேல் மண்டபத்தை காலி செய்து கொண்டு... சுவாதியின் வீட்டுக்கு போய்... இரவே கிராமத்து வீட்டிற்கு மொத்த சொந்தங்களோடு வந்திறங்கினான், கதிரவன்.

காரில் வந்த தனிமையில் கூட சுவாதி வெளியே இலக்கின்றி பார்த்துக் கொண்டுவர... அதை அவன் வேறுவிதமாய் எடுத்துக் கொண்டான்.

இதுநாள் வரையிலும் அத்தைமகன் என்று மல்லுக்கு நின்று வாயாடியவள்... தற்போது அவனே கணவனானதும் ஏற்பட்ட நாணத்தால்தான் அப்படி முகத்தைத் திருப்பி வெட்கத்தை மறைக்கிறாள்... பேசுவதைத் தவிர்க்கிறாள் என்று நினைத்தான்.

முதலிரவு அறை!

கட்டிலும் தன்னை இளம்பெண்ணாய் அலங்கரித்துக் கொண்டு நாணத்தோடு அவர்களின் முதலிரவு காட்சிகளை வேடிக்கைப் பார்க்க தயாராகி காத்துக் கொண்டிருந்தது!

தங்கத்தில் வார்த்தெடுத்த சிலையாய்... முகத்தில் மலர்ச்சியையும், புன்னகையையும், உணர்ச்சியையும் தொலைத்து விட்டு அவன் எதிரே வந்து பால் சொம்போடு நின்றாள், சுவாதி.

கதிரவன் பால் சொம்பை வாங்கி மேடையில் வைத்தான்.

"நமக்குள்ளே கால்ல விழுந்து வணங்குற சம்பிரதாயமெல்லாம் வேண்டாம்மா, சுவாதி! நான் என்ன நீ அறியாதவனா? என்னிடம் என்ன வெட்கம்? எனக்கு இந்த சுவாதியைப் பிடிக்கலே, தெரியுமா?"

அவ்வாறு கதிரவன் சொல்ல... அவன் அதிர்ச்சியுடன் அவனை நோக்கினாள்.

"எந்த நேரமும் மலர்ச்சியுடன், என்னை வம்புக்கு இழுத்துட்டு இருந்த சுவாதியைத்தான் எனக்கு ரொம்ப பிடிக்கும்!"

அவளின் அந்த அழகிய விழிகளால் ஆழ்ந்து பருகிக் கொண்டே அவன் சொல்ல... அவள் தலை குனிந்து கொண்டாள்.

## கொடுக்கும் கண்ணாடி!



அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் மாநில தொழில்நுட்பக் கல்லூரி எக்ஸ்ரே மூக்கு கண்ணாடியை புதிதாக உருவாக்கி வருகின்றனர். இந்த மூக்கு கண்ணாடி, நமது நண்பர் யார்? எதிரி யார் என்பதை எளிதாகக் காட்டிக் கொடுத்து விடும். நமது மூளை நன்றாக செயல்படும் பட்சத்தில் அடுத்தவர்களின் முகபாவத்தை வைத்து என்ன நினைக்கிறார்கள் என்பதை கண்டறிய முடியும். ஆனால் மறதி நோயால் (ஆட்டிசம்) பாதிக்கப்பட்டவர்களால் இவ்வாறு உணர முடியாது.

அவர்களுக்கு வசதியாக இந்த எக்ஸ்ரே மூக்கு கண்ணாடி உருவாக்கப்பட்டுள்ளது. இதில் அரிசி அளவே உள்ள கேமரா பொருத்தப்பட்டுள்ளது. இது பாக்கெட் அளவு கணினியுடன் இணைக்கப்பட்டிருக்கும். மனிதர்களின் 24 விதமான முகபாவங்கள் இதில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

ஒருவருடன் பேசுகிறோம் என்றால்

அவன் கையை இயல்பாய் பற்றி அருகில் உட்கார வைக்க... அவன் அந்தக் கையை உருவிக் கொண்டு தள்ளி உட்கார்ந்தான்.

சுவாதியின் மேல் வீசிய நறுமணமும்... அவளின் பேரழகும் அவனின் மோகத்தைத் தூண்ட... அவளருகே நகர்ந்து அவளை ஆசையோடு அணைக்க... உடம்பெல்லாம் இறுகிக் கொண்ட உணர்வு ஆட்கொள்ள... அவள் கழுத்தில் முகம் புதைத்தவன்... முகம் பற்றி முத்தமிட போக...

"வேண்டாம்! இன்னிக்கு வேண்டாம்! ரொம்ப அசதியா இருக்கு! தூக்கம் வருது!"

சுவாதி கூற... கதிரவனின் மனம் மளுக்கென்று உடைந்தது!

அவ்விடமிருந்து இறங்கி... ஒரு போர்வையையும், தலையணையையும் எடுத்து கீழே விரித்து படுத்துக் கொண்டான்.

அதற்கு மேல் சுவாதியிடம் கெஞ்சிச்

இந்த எக்ஸ்ரே கண்ணாடியை அணிந்து கொள்ள வேண்டும். அவரது முகத்தில் ஏற்படும் சிறு அசைவுகள், சுருக்கங்கள் ஆகியவற்றை கண்ணாடியில் இருக்கும் கேமரா கண்காணித்துக் கொண்டே இருக்கும். நேரில் எதிராளி சிரித்தாலும் கூட அவரது முகத்தில் ஏற்படும் நுண்ணிய அசைவுகளை வைத்து அவரது மனோபாவத்தை கணினி கணக்கிடும்.

எதிரில் இருப்பவரிடம் பாசிட்டிவ் உணர்வுகள், முகபாவங்கள் தென்பட்டால் கண்ணாடியின் உள்பகுதியில் இருக்கும் சிக்னலில் பச்சை விளக்கு எரியும். தொடர்ந்து பேசலாம், ஆபத்தில்லை என்று புரிந்து கொள்ளலாம். அவர் நமக்கு ஆதரவானவர் அல்ல என்றாலோ, இனிக்க இனிக்க பேசி வேட்டு வைக்கிறார் என்றோ தெரிய வந்தால் இந்த சிக்னலில் மஞ்சள், சிவப்பு விளக்கு எரியும். உஷாராகி பேச்சை நிறுத்திக் கொள்ளலாம்.

எதிராளி எந்த நோக்கத்தில் பேசுகிறார் என்பதை நன்கு புரிந்து கொள்ள முடியும். உஷாராக பேசு என்று பிரத்யேக ஸ்பீக்கர் மூலம் காதுக்குள் எச்சரிக்குமாறும் வடிவமைத்துக் கொள்ளலாம்.

ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும்தான் இந்த எக்ஸ்ரே கண்ணாடி தேவை என்பதில்லை. இந்த காலத்தில் நண்பர் யார், எதிரி யார் என்று கண்டுபிடிக்க முடிவதில்லையே. ஆகவே எல்லோருக்குமே இந்த கண்ணாடி அவசியம் தேவைதான்.

செல்ல அவனுடைய சுவாரஸ்யத்தைத் தடுத்தது!

எந்த ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் திருமணமான அன்று வரும் முதலிரவு உன்னதமானது! அந்த முதலிரவின் அசதியையும், தூக்கத்தையும் காரணம் காட்டி... சுவாதி அவனை விலக்குகிறாள் என்றால் அவளுக்கு அவனைப் பிடிக்கவில்லை என்றுதானே அர்த்தம்?

அதுகூட புரிந்து கொள்ளாத முட்டாளா, அவன்?

அவள் விளக்கை அணைத்துவிட்டு மல்லாந்து படுத்தாள்.

அவனுக்கு பள்ளியிலாகட்டும், கல்லூரியிலாகட்டும், கிராமத்திலாகட்டும் பெரும் மதிப்பும், மரியாதையும்தான் கொடுத்தனர்! ஏனென்றால் அத்தனை அறிவாளி! புத்திசாலி! இரக்கக்குணம் உள்ளவன்!

கிராமத்தில் உள்ள மேற்படிப்பு படிக்க முடியாத நான்கு மாணவ, மாணவிகளை கல்லூரியில் சேர்த்து படிக்க வைக்கிறான்.

இல்லாதோருக்கு திருமண உதவித் தொகை வழங்கி வருகிறான்.

அவன் புதிதாய் ஒரு திட்டம் வைத்திருக்கிறான். சிறிய அளவில் ஒரு ஓட்டலை நிறுவி... அவன் நிலத்தில் விளையும் அரிசி, பருப்பு, காய்கறிகளைக் கொண்டு குறைந்த அளவில் நிறைவான உணவினை மக்களுக்கு வழங்க திட்டமிட்டிருக்கிறான்.

தொடர்ந்து வந்த நாட்களிலும் அவள் கதிரவனிடம் முகம் கொடுத்தே பேசவில்லை. உணவு பரிமாறவில்லை! அதோடு உள்ளத்தையும் பரிமாறவில்லை!

வெளியிடங்களுக்கு அழைத்து சென்று தனிமையில் பேசினால் அவளின் உள்ளத்து ஆதங்கத்தையும், ஆசையையும் அறியலாம் என்று சுவாதியை கொடைக்கானலுக்கு அழைக்க...

"தேனிலவு ஒன்னுதான் குறைச்சல்!" என்று அலட்சியப்படுத்தி விட்டாள்.

சுவாதியின் அலட்சியத்தாலும், ஆணவத்தாலும், நிராகரிப்பினாலும் அவன் உள்ளுக்குள் உடைந்து போனாலும்... அதனைத் தாய் முன்போ, மாமா அத்தை முன்போ காட்டிக் கொள்ளாமல்... செயற்கையாய் ஒரு புன்னகையை முகத்தில் சூடி நடமாடினான் கதிரவன்.

ܘܘܘ

ஒரு மாலைப் பொழுதில்...

"சுவாதி... சத்யம் தியேட்டர்ல நல்ல படம் போட்டிருக்கான்! போகலாமா?" அன்புடன் கதிரவன் கேட்க...

"இப்போ எனக்கு படம் பார்க்கறது ஒன்னுதான் குறைச்சல்! ஆனா... இதோ உடனே ட்ரஸ் மாத்திட்டு புறப்படறேன்!"

சுவாதி நக்கலாய் சொல்ல.. அவனை அவமான அலைப் புரட்டி போட்டு வேடிக்கை பார்த்தது!

ܘܘܘ

நண்பனின் திருமணத்திற்கு பட்டெடுக்க போயிருந்தான், கதிரவன். அப்படியே சுவாதிக்கும் அழகிய 'பரம்பரா' பட்டொன்றையும், வீட்டும், பந்து பந்தாய் மல்லிகைப் பூவையும் வாங்கி வந்து அவளிடம் கொடுத்து...

வாங்கணும்னா கோடி ரூபாயாவது வேணும்மா! புதுசா ஓட்டல் பிஸினஸ் பண்ணலாம்னு இருக்கேன்! அது சக்ஸஸ்புல்லானால் கூடிய சீக்கிரமே கார், பங்களான்னு வாங்கிடலாம்!"

"எங்க வீட்டுக்கு போகலாம்! அந்த வீடும் நமக்குத்தானே சொந்தம்!"

"ம்கூம்! அது முறையில்லே சுவாதி! கொஞ்ச நாள் பொறுத்துக்கோ! கடற்கரை ஓரமா பெரிய பங்களாவே வாங்கி தந்துடறேன்!"

"நீங்க இப்படி நாள் பூரா சேற்றிலும் சகதியிலும் இறங்கி வேலை செஞ்சுட்டு வரது பிடிக்கலே!" அவள் சொற்கள் கேட்டு... கதிரவன் சத்தமாய் சிரித்தான்.

"நான் சேற்றிலும், சகதியிலும் இறங்கி வேலை செய்யறேனா? பார்த்தியா, நீ! வரப்புல நின்னுட்டு வேலை வாங்குவேன்! சில சமயம் சரியா வேலை செய்யலேன்னால் அவங்களுக்கு எப்படி செய்யணும்னு விளக்குவேன்! பண்ணையில எல்லாத்துக்குமே ஆள் இருக்காங்க! டிராக்டர் இருக்கு ஏர் உழுவதுக்கு! நாத்து நட, அறுவடை செய்யன்னு எல்லாத்துக்குமே இயந்திரம் வாங்கி வச்சிருக்கேன்! இருபது குடும்பம் பண்ணையில தங்கி வேலை பார்க்கறாங்க! பண்ணையில அருமையா விவசாயம் நடந்துட்டு இருக்கு! நீ ஒருநாள் என்னோட வந்து பாரேன்" என்று இதமாய் சொன்னான் அவன்.

"ம்..."

"அடுத்தது ஓட்டல் தொழிலை கையில எடுக்கணும் சுவாதி!"

அவள் தலையணையும் போர்வையையும் எடுக்க...

"சுவாதி... எதுக்கு தரையிலே படுக்கறே? நான் உன்னை... உன் விருப்பம் இல்லாமல் தொட மாட்டேன்! சத்தியமா, சுவாதி!"

அவன் இதமாய் கூற... அவள் அந்தக் கட்டிலின் ஒரு புறம் படுத்துக் கொண்டாள்.

அதன் பிறகு மெல்ல சகஜமாய் நட்புடன் இருவரும் பழகினர். அவனோடு கன்னியாகுமரி, நாகர்கோவில் என்று வெளியூர் சென்று வந்தாள்.

அதன் பிறகு... அன்றைக்கு அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெறாமலே இருந்திருக்கலாம்!

## 7

சுவாதி கன்னியாகுமரிக்கு தனியே சென்று திரும்பும் போது நல்ல மழையில் மாட்டி... இருட்டிய பிறகு வந்து நின்றாள்.

"ஏய் சுவாதி... இப்படி தெப்பமா நனைஞ்சி வந்திருக்கியேம்மா! உடம்புக்கு ஒத்துக்காம போகப்போகுது! போ... போய் முதல்ல உடை மாற்றிட்டு வா!" கதிரவன் அவசரப்படுத்த...

சுவாதி அணிந்திருந்த சுடிதாரை கழற்றிவிட்டு, இரவு உடையில் வர... "முதல்ல கட்டில்ல உட்கார்!" என்றவன் அவள் தலைமுடியைப் பிரித்து டவலால் சரம் போக துடைத்தான்.

கழுத்து, முகம் என அருகில் அமர்ந்து துடைத்து விட... அவளும் சிறு குழந்தையாய் காட்டிக் கொண்டிருந்தாள்.

நெற்றியில் புரளும் அழகு சுருள் கற்றை முடியோடு... பாலாய் பளிங்காய் ஜொலித்த முகத்தோடு... உதடுகளில் தேன் சுமந்து காட்சியளித்த சுவாதியை அப்படியே இழுத்து இறுக்கி அணைத்து, மூச்சு முட்ட முட்ட முத்தமிட்டு முத்தெடுக்க விரும்பிய அவனின் மன ஆசைக்கு பெரிய விலங்கிட பெரும் சிரமப்பட்டான், கதிரவன்.

இரவு உண்டார்கள், வந்து படுத்துக் கொண்டார்கள்.

தூக்கம் அவன் கண்களைத் தழுவ மறுத்தது.

சுவாதியோ நாளெல்லாம் அலைந்து திரிந்து ஷாப்பிங் செய்த அலுப்பில்... போர்வையின் கதகதப்பில் அவன் உணர்வுகளை அறியாமல் இமைமூடி ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள்.

நள்ளிரவுக்கு மேல் மழையில் நனைந்ததன் விளைவாய் சுவாதிக்கு லேசாய் காய்ச்சலடித்தது! குளிர் வாட்டி வதைத்தது!

தூக்க கலக்கத்திலும், குளிரிலும், அருகில் படுத்திருந்த கணவனை நெருங்கி அணைத்துக் கொண்டாள். பற்று கொடியை தேடிய முல்லையாய் [?] அவன் மார்பில் பற்றி படர்ந்த சுவாதியை... கதிரவனும் மெல்ல அணைக்க... அவள் மேனி தந்த வெப்பத்தில் இன்னும் நெருங்கி அவனுள் புதைந்து போனாள்.

கதிரவனின் உடலும், உள்ளமும் ஆனந்த கூத்தாட... அவளை மேனி நொறுங்க அணைக்க... அந்த அணைப்பு அவளுக்கு மேலும் மேலும் இன்பம் கூட்ட... அவள் மெல்ல சிணுங்க... அந்த சிணுங்கல் அவனை உசுப்ப... அவள் முகம் பற்றி முத்தமிட்டான்.

பிரச்னையில்லாம எடுபடணும்! அண்ணாகிட்ட நல்லபேர் எடுக்கணும்! நீ ஒரு ரெண்டுவருஷம் பொறுத்துக்கோ! அண்ணாவுக்கு மேரேஜ் ஆனதும்... நம்ம ரூட் கிளியர் ஆயிடும்! அப்புறமா அண்ணாவோட பர்மிஷனோட பெண்கேட்டு வரேன்! நீ சும்மா இருந்துடாதே! எம்.பி.ஏ. சேர்ந்து படி! என்ன சுவாதி!"

"ம்..."

"என்னை நீ நம்பறேதானே?"

"ம்..." என்று அழுகையில் குலுங்கியவளை இழுத்து அணைத்து, இதழ்களில் முத்தமிட்டான்.

சுவாதி அடக்க முடியாமல் நெடுநேரம் விம்மினாள்! வெடித்தழுதாள்!

## 4

விநாயகம் சுவாதி, கதிரவனின் ஜாதகக் கட்டை எடுத்தார். சுவாதி அதிர்ந்தாள்.

"உன் படிப்பு முடியத்தான் காத்திருந்தேன்! அடுத்த கடமை உன்னோட திருமணம்தானே! அதான்"

"யார் மாப்பிள்ளை?"

"என்ன இது மடத்தனமான கேள்வி? நம்ம கதிரவன்தான்! அவனுக்குத்தான் நீன்னு சொல்லித்தானே வளர்த்துட்டு வரேன்!" என்று மிரட்டலோடு கேட்டார்.

"எனக்கு இப்போ திருமணம் வேண்டாம்!" சுவாதி கோபத்தோடு பட்டென்று கூறினாள்.

"ஏன்?"

"எம்.பி.ஏ. படிக்கணும், நான்!"

"படிச்சதெல்லாம் போதும்! இப்போ எம்.பி.ஏ. படிச்சிட்டு எந்த பிஸினசைப் பார்க்க போறே? நீயென்ன பெரிய பிஸினஸ் மேனோட மகளா என்ன? சாதாரண அரசு ஊழியனோட மகள் என்பதை நினைவுபடுத்திக்கோ!"

"தனியா பிஸினஸ் பார்க்கணும்னு அவசியமில்லேப்பா! படிச்சிட்டு போனால் பெரிய பெரிய கம்பெனியில வேலை கிடைக்கும்! நாற்பது, ஐம்பதாயிரம்னு மாசத்துக்கு சம்பாதிக்கலாம்!"

"உன்னை வேலைக்கு யார் அனுப்பப்போறா? வெட்டியா பேசிட்டு நிற்காதே! போய் வேலையிருந்தாப் பார்!"

"அப்பா..."

"படிப்பை முடிச்சிட்டு கதிரவன் மூணு வருஷமா விவசாயம் செய்து முன்னேறிட்டு வரான்! ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சம் வீதம் இருபத்தஞ்சி முப்பது லட்சம் மகசூல்ல எடுக்கறான். மூணுவருஷத்துல கடுமையா உழைச்சி, அப்பன் விட்டுட்டு போன ஐந்து ஏக்கரை வாங்கி கிரயம் பண்ணிட்டான்! இப்படியே என் மாப்பிள்ளை கடுமையா உழைச்சான்னா ஒரு நாள் பெரிய கோடீஸ்வரனா ஆயிடுவான்!... ஊரெல்லாம் தேடினாலும் இப்படி ஒரு தங்கமான, எந்த கெட்டப்பழக்கமும் இல்லாத மாப்பிள்ளையை உனக்கு கட்டி வைக்க முடியாது!"

"எனக்கு என்ன வயசாயிடுச்சிப்பா? அதுக்குள்ளே கல்யாணம் பண்ணி வைக்கணும்னு ஒத்தக் காலில நிற்கறீங்க?" சுவாதி கொஞ்சம் கடுமையாகவே கேட்டாள்.

"இருபத்தி ஒண்ணு நடக்குது! பெண்களின் திருமண வயசு இதுதானே!"

"எனக்கு கதிரவனை கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லே" சுவாதி முகம் வாடி சொல்ல...

"ஏய்... என்னடி சொல்றே?" மஞ்சுளா அவசரமாய் கோபத்தோடு ஓடி வந்தாள். விநாயகத்திற்கு உச்சம் தலைவரை கோபம் விர்ரென்று ஏறியது. அதனை அடக்கி..

"கதிரவனும், உன் அத்தையும் இந்த வார்த்தைகளைக் கேட்டால் ரொம்ப கவலைப்படுவாங்க. கதிரவனுக்கு நம்ம சொந்த பந்தத்திலே ஏகப்பட்ட கிராக்கி! நம்ம வீட்டுல பெண் இருக்கறதால தான் யாரும் உன் அத்தையை நெருங்க பயப்படறாங்க! அது உனக்கு தெரியுமா?"

"ஏய் சுவாதி...வாயை மூடிட்டு போடி! நீங்க போய் ஜோசியரைப் பார்த்துட்டு வாங்க! அவ கிடக்கா!" மஞ்சுளா கூறினாள்.

"எனக்கு இப்போ திருமணம் வேண்டாம்மா!"

"ஏய் சுவாதி... உன் உளறலை நிறுத்திட்டு உள்ளே போ!"

விநாயகம் உறுமிவிட்டு ஜாதகத்தோடு வெளியே செல்ல.. சுவாதி கண்ணீரோடு ஓடிப் போய் கட்டிலில் விழுந்து விம்மியவள் அப்படியே உறங்கி விட்டாள். தூக்கம் கலைந்து எழுந்தவள் திருமணத்தை நினைத்து கண்ணீர் விட்டாள்.

இந்த ஒரு மாதத்தில் அனில் போன் செய்வான் என்று காத்திருந்தாள், காத்திருந்து காத்திருந்தாள், மிச்சம், அவன் போன் செய்யாது போக... இவளும் விம்பியும், கோபத்தாலும்

அவனுக்கு போன் செய்யவில்லை.

ஆனால், இன்று தன் வீம்பு, கோபம், சுயமரியாதையை தூக்கி எறிந்து விட்டு... கனியின் வர்மாவின் எண்களுக்கு தன் செல்போனில் முயற்சித்தான்.

'இந்த எண் உபயோகத்தில் இல்லை' என்று பதில் வர விரக்தியுற்றான்.

மாலை வீடு திரும்பிய விநாயகம் புன்னகையோடு உள்ளே நுழைந்தார்.

"ஜாதக பொருத்தம் ரொம்ப அம்சமா இருக்கு மஞ்சுளா! எனக்கு மனசு நிறைஞ்சி போச்சி"

"எப்படிங்க பொருந்தாமல் போகும்? நம்ம மனசுல இருக்கற ஆசையெல்லாம் கடவுளுக்கு தெரியும்தானே! எப்படி நம்மை ஏமாத்துவார்?" மஞ்சுளா சின்ன சிரிப்போடு சொன்னாள்.

"உன் பொண்ணுக்கு நல்ல புத்தி சொல்லி அவள் மனசை கல்யாணத்துக்கு தயார்படுத்து!"

"விவரம் தெரியாத பெண்... அதெல்லாம் விளக்கி சொன்னால் ஏத்துக்குவா! ஆனால், நீங்க அவகிட்ட பொறுமையா பேசுங்க! நீங்க அவகிட்ட கோபப்படறதும், கத்தறதும் எனக்கே பிடிக்கலை! இந்தக் காலத்து பிள்ளைங்ககிட்ட இனிமையா அன்பா சொன்னா கேட்டுக்குவாங்க!"

"சரிம்மா... நீ அவ மனசை பேசி பக்குவப்படுத்து"

"கட்டாயமா செய்யறேங்க!" மஞ்சுளா கூற, விநாயகம் நிம்மதியானார்.

இரவு சுவாதி பேருக்காய் சாப்பிட்டுவிட்டு போய் படுக்கையில் சுருண்டாள்.

'இந்தக் கல்யாணத்தை நிறுத்த வேண்டும்! கனியை மணக்க வேண்டும்!' என்ற எண்ண அலைகளே அவளை அலைக்கழித்தது.

எத்தனை முறை முயன்றும் உபயோகத்தில் இல்லை என்று வர சோர்ந்து போனாள். பீரோவைத் திறந்து அவன் எழுதி கொடுத்த முகவரியைப் பார்த்தாள்.

உடனே ஒரு வெள்ளைப் பேப்பரை எடுத்து கடிதம் எழுதினாள்.

தன் நிலையை விளக்கினாள். அவன் மேல்கொண்ட காதலை உருக்கத்துடன் தெரிவித்தாள். அவன் இந்த கடிதம் கண்டு உடனே அவளைப் பார்க்க வரவில்லையென்றால்... தன் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று கடிதத்தை முடித்து... அதை உறையில் போட்டு... அட்ரஸ் எழுதி...தலையணைக்கு அடியில் வைத்தாள்.

பின் படுக்கையில் விழ... உணர்வுகளைக் கொட்டி கடிதம் எழுதியதன் விளைவாய், நெஞ்சிலிருந்த பாரமெல்லாம் இறங்கி, வடிந்து விட்டாற்போல தோன்றி, இதயம் முழுக்க ஒரு இதம் பரவ, நிம்மதியாய் இமை மூடினாள். நித்திராதேவி அவள் கைப்பற்றிக் கொண்டாள்.

நான்காம் நாள் கனியின் வருவதற்கு பதிலாய் சுவாதி எழுதிய லட்டரே திரும்பிவர... அதை மார்பில் அணைத்துக் கொண்டு விம்மி வெடித்தாள்.

நல்லவேளை கடிதம் திரும்பிவந்த போது... வீட்டில் யாரும் இல்லாததால்... அவள் தப்பினாள்.

கனியை இனி எவ்வாறு தொடர்பு கொள்வது எனத் தெரியாமல் விரக்தியுற்றாள்.

இரண்டு நாட்கள் கழித்து... ஒரு மாலை வேளையில் அத்தை செண்பகமும், கதிரவனும் வந்து நிற்க... விநாயகமும், மஞ்சுளாவும் பலமாய் வரவேற்றனர்.

ஹாலில் பேச்சு சப்தமும், சிரிப்பு சப்தமும் பெரிதாய் கேட்க... வெளியே வந்து பார்த்த சுவாதிக்கு மனதில் பெரும் நடுக்கம் ஏற்பட்டது.

"நானே வரணும்னு இருந்தேன்க்கா! அதுக்குள்ள நீயே வந்துட்டே!" செண்பகத்தைப் பார்த்து விநாயகம் சொல்ல...

"என்ன விஷயம், தம்பி?" செண்பகம் புன்னகையுடன் கேட்க...

"எல்லாம் நல்ல விஷயம்தான்! சுவாதிக்கு படிப்பு முடிஞ்சாச்சி! கதிரவனோ வீடு, வயல், தோட்டம்னு விவசாயத்தை கையில எடுத்து வெற்றிநடை போடறான்! காலாகாலத்துல இதுங்களுக்கு கல்யாணம் பண்ணிவச்சிட்டா என்னக்கா?" என்றார்.

அந்த கேள்வியால் செண்பகம் பூவாய் மலர... கதிரவனின் முகம் இருண்டு களையிழந்து போனது.

இன்னமும் சேலம், ஆத்தூர், கள்ளக்குறிச்சி என்று அங்கே வேலையாய் சென்றால்... சாலையின் இருமருங்கிலும் தென்றலைத் தேடுவான். தேடி அகப்படாத விழிகள் சோர்ந்து போகும்.

சமீபமாய் ஒரு நாள் விநாயகத்திடம் "மாமா... நம்மவீட்டு மாடியில சுவாதியோட ப்ரண்ட் தென்றலும், அவங்க குடும்பமும் குடியிருந்தாங்களே அவங்க எங்க இருக்காங்கன்னு தெரியுமா, மாமா!" என்றான்.

''சேலம் பக்கம் ஏதோ ஊர் சொன்னாங்க! கொஞ்ச நாள் கடித போக்குவரத்துகூட இருந்தது. அதுக்குப் பிறகு அவங்களும் அடிக்கடி போடறதில்லே! நானும் விட்டுட்டேன்! அந்த ஊரை விட்டு வேற ஊர் மாறி இருப்பாங்கன்னு நினைக்கிறேன்! நீ எதுக்கு கேட்கிறே?''

"அந்த தென்றல் ரொம்ப நல்ல பெண்! நம்ம சுவாதியோட பெண்ட்ஸ் ரெண்டும் கூட! என்ன செய்யறா? என்ன படிக்கறான்னு தெரிஞ்சுக்கலாம்னு கேட்டேன்! வேற எதுக்கும் இல்லே மாமா!" என்று மழுப்பி சமாளித்து இருக்கிறான், கதிரவன்.

"நானுமே இது விஷயமா உன்கிட்ட பேசணும்னு இருந்தேன், விநாயகம்! நீயே அதுபற்றி தொடங்கிட்டே!" என்று பூரிப்பில் செண்பகம் சிரிக்க...

"என்னக்கா... உனக்கு இஷ்டம்தானே?"

''என்னடா


இப்படி ஒரு கேள்வி கேட்கறே, விநாயகம்? இதுக்காகத்தானே நான் தவமா தவமிருந்தேன்! நான் வச்சிருக்கறது, ஒத்த பிள்ளை! ஊர் மெச்ச கல்யாணம் செய்யணும்! அவன் மகிழ்ச்சியா இருக்கணும்னு நான் ஆசைப்படாத நாட்களில்லை!"

"அம்மா என் திருமணத்திற்கு என்ன அவசரம்? இருபத்தஞ்சி முடிஞ்சி இருபத்தாறு தொடங்குது! அதுக்குள்ளே என்ன அவசரம்? நான் இன்னும் முன்னேறணும்! அதுக்கு பிறகுதான் திருமணம்!"

கதிரவன் அப்படி சொல்ல, சுவாதி மலர்ந்தாள். பெரியவர்கள் மூவரும் அதிர்ந்தார்கள்.

"என்ன கதிரவா பேசறே! நீ சம்பாதிக்கிற சம்பாத்தியம் போதும்! லட்ச லட்சமா சம்பாதிக்கறே! ஏர் உழற டிராக்டர், அறுவடைக்கு மெஷின்னு ரொம்ப முன்னேறிட்ட! திராட்சை தோட்டம் வேற கொத்து கொத்தா காய்ச்சி தொங்குது! இந்த வருஷம் இன்னும் வருமானம் அதிகரிக்கும்!... காலா காலத்துல பூவா இருந்தாலும்... ஆடவப் பூவைப்போல இருந்தாலும் பூக்கணும், காய்க்கணும்!'' செண்பகம் முடித்தார்.

"ஏன் சுவாதியை உனக்கு பிடிக்கலையா கதிரவா?'' விநாயகம் கூர்மையாக



குரலில் கூறினான், கதிரவன்.

ஒடிந்து, உருக்குலைந்து போனவனை பேசியே நிமிர்த்தி நோக்கினர் பெரியவர்கள் மூவரும்!

அவன் எழுந்து நின்றான். விண்ணுக்கும் மண்ணுக்குமாய் கம்பீரமாய் நின்றான். குழந்தை, உழைப்பை உயிர்மூச்சாய் கொண்டான்.

அதன் விளைவாய் இதயா ரெஸ்டாரெண்ட் இருபதுக்கு மேலான கிளைகளுடன் விரவி பரவி இயங்கிக் கொண்டிருக்கிறது! விவசாய நிலம் விரிந்து பரவியது. தற்போது ஐம்பது ஏக்கருக்கு மேல் உள்ளது. நகரை ஒட்டி புறநகர் பகுதியில் பத்து ஏக்கர் பரப்பளவில் சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் எழுப்பி... பெரிய கட்டிடம் எழுப்பி... அனாதை குழந்தை, முதியோர், நோயாளிகளுக்கான இல்லமும்... மறுபுறம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பள்ளியும் செயல்பட்டு வருகிறது.

அவன் தற்போது குடியிருக்கும் கடற்கரைப் பங்களாவை ஒரு கோடி ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறான். ரெஸ்டாரெண்ட் அனைத்தும் சொந்த இடங்களிலேயே செயல்பட்டு வருகிறது!

கதிரவன் அன்லிமிடெட் பிரபலமான தொழிலதிபர், இன்று!

பழைய நினைவுகள் தந்த வலியால் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடி கன்னப்பரப்பை நனைத்துக் கொண்டிருக்க... அவனோ விட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கொஞ்ச நேரத்தில் குழந்தை இதயா வந்து...

"டாடி... டாடி கடற்கரைக்கு போகலாம்!" என்று எழுப்பியது.

ஞாயிறு மட்டும்தான் குழந்தையோடு வெளியே செல்வான். குழந்தை அந்த நேரம் அதிக குதூகலத்துடன் இருப்பாள். அதைப் பார்க்கவே ஞாயிறு மாலை வராதா என்று ஏங்குவான், கதிரவன்.

குழந்தையை அழைத்துக் கொண்டு சென்றான். அங்கொன்றும், இங்கொன்றுமாய் ஆட்கள் தென்பட்டனர்.

இருவரும் மணற்பரப்பில் அமர்ந்து... மணலைக் குவித்து மணல் வீடு கட்டினர்! கிளிஞ்சல்களைப் பொறுக்கி வந்து ஆங்காங்கே சொருகி அழகுபடுத்தினர்!

மணல் வீடு அழகானது!

"டாடி... டாடி நான் தனியே வீடு கட்டறேன்!" என்று குழந்தை கூற... கொஞ்ச தூரம் தள்ளி போய் அமர்ந்து, தலைக்கு கையை வைத்து மல்லாந்து படுத்துக் கொண்டான், கதிரவன்.

இதயா தனக்கு தெரிந்தாற்போல வீடு கட்டினாள்! கிளிஞ்சல்களைத் தேடி பொறுக்கி வந்து சொருகினாள்! மீண்டும் கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கொண்டே கடலலை ஓரம் சென்று விட்டாள்.

தூரத்திலிருந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாள் ஒரு பெண். குழந்தை தண்ணீர் அருகே சென்றதும் ஒரு பெரிய அலை வந்து இதயாவை இழுத்து சென்றது.

இந்த காட்சியை கண்டதும் அந்த பெண் ஓடி வந்து நீச்சலடித்து... இதயாவின் முடியைப் பற்றி தூக்கி தோளில் போட்டுக் கொண்டு கரைக்கு வந்தாள்!

இதயா பயத்தில் அழுதாள்!

"ஒன்றுமில்லே... ஒன்றுமில்லே... செல்லக்குட்டி!" என்று குழந்தையைத் தட்ட... இதயாவின் அழுகல் கேட்டு நிலை மீறியவன் கலக்கமாய் எழுந்து ஓடிவந்தான், கதிரவன்.

"என்ன! என்னம்மா!" என்று நனைந்த குழந்தையைக் கண்டு பதறினான்...

"இது உங்க குழந்தையா? கிளிஞ்சல் பொறுக்கிட்டே கடல் கிட்ட போக, அலை வந்து இழுத்துட்டு போயிடிச்சி!"

"ஐயோ..." கதிரவன் அலற...

"அதான் நான் காப்பாத்திட்டேனே, சார்!" என்று அந்த பெண் கூறினாள்.

"என் உயிரையே மீட்டு கையில் கொடுத்திட்டீங்கம்மா! உங்களுக்கு நன்றி சொன்னால் மட்டும் பத்தாது! நான் என்ன செய்யணும்? எவ்வளவு பணம் வேணும்! லட்சம், பத்து லட்சம்... ம்? இல்ல டைமண்ட் நெக்லஸ் எது வேணுமோ கேளுங்க!"

"என்க குழந்தையோட உயிரின் மதிப்பு வெறும் லட்சம், பத்து லட்சம், டைமண்ட் நெக்லஸ் தானா? என் உயிரையே மீட்டு தந்துட்டீங்கன்னு சொன்னதெல்லாம் பொய்யா?" என்று அவள் சின்ன சிரிப்போடு கேட்க...

"ஸாரி... ஸாரிம்மா... நீங்க?" என்றவன் அவள் முகத்தை உற்றுப் பார்க்க... அவனுக்கு அவள் வதனமும், நீண்ட நயனங்களும், சிப்பி இதழ்களும் பரிச்சயமாய் தோன்ற...

"நீ... நீங்க தென்றல் தானே?" என்று கேட்டான்.

"நான் தென்றல்தான்! என்ன ஆச்சரியம்? என் பெயர் எப்படி உங்களுக்குத் தெரியும்! இதுக்கு முன்னே என்னைப் பார்த்திருக்கீங்களா?" என்று ஆச்சரியத்தோடு முகம் சுருக்கினாள்.

"நான் கதிரவன்! சின்ன வயசுல எங்க மாமா விநாயகம் வீட்டுலே குடியிருந்தீங்களே... நினைவில்லையா தென்றல்! அடுத்தது...." சுவாதியின் பிரிய தோழி என்று கூற வந்தவனால் முடியவில்லை.

"ஓ... சுவாதியோட அத்தைப் பிள்ளை! இப்போ ஞாபகம் வந்துடிச்சி! கதிர்.. நல்லாயிருக்கீங்களா? ஆமா சுவாதி, விநாயகம் அங்கிள், மஞ்சுளா, செண்பகம் ஆன்ட்டி எல்லோரும் நலம்தானா?"

"ம்" என்று தலையாட்டி வைத்தான்.

"இப்படியா கவனக்குறைவா இருப்பது? நான் பார்க்கலேன்னால் இந்நேரம் குழந்தையை உயிரோடு..."

"வேண்டாம் தென்றல்! அதை வார்த்தையால கூட கேட்கற சக்தி எனக்கில்லே!" அவன் தவித்துப் போனான்.

தென்றல் தன் கை குட்டையைக் கொண்டு தலை ஈரத்தை துடைத்தாள். குழந்தையின் உடலை சுற்றி ஈரத்தை பிழிந்தெடுத்தாள்.

கதிரவன் குழந்தையைத் தோளில் போட்டு தட்ட... அது கொஞ்சமாய் பயம் விலகி அழுகையை நிறுத்தியது.

"நான் இங்கே இதயா இல்லத்துல தங்கியிருக்கேன்! அங்கே இருக்க ஸ்கூல்ல வேலை பார்க்கிறேன்"

வெள்ளிக்கிழமை மாலை அதை நிர்வகிக்கும் வில்லிபுஷ்பத்திடம் மருதுல

"கதிர்... எனக்கு தெரிந்த மதரோட ரெக்கமெண்டேஷன்ல ஒரு பெண் வேலை கேட்டு வந்திருக்கா! பள்ளிநேரம் போக நம்ம இல்லத்துல தங்கி சேவை செய்ய விரும்பறா! பார்க்க, ரொம்ப நல்ல பெண்ணா தெரியறா! அவளை என்ன செய்யட்டும்?" என்று கேட்க...

அவளும் யார்? என்ன என்று கேட்காமல் "உங்க இஷ்டம் போல செய்யுங்க, மேடம்!" என்று சொல்லி வைத்தான். வில்லிபுஷ்பம் இருமணமாகாதவர். தன் குடும்பத்துக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர். அவர் மேல் அவனுக்கு அதிக அளவு மதிப்பும், மரியாதையும் உண்டு.

இதயா இல்லத்தை சிறப்பாக நிர்வாகம் செய்பவர், வில்லிபுஷ்பம்.

அந்த பெண் வேறு யாருமல்ல... இந்த தென்றல் தான்!

"வெல்கம் தென்றல்! உன் சேவை என் இல்லத்துக்கும்,



பனிக்கும் தேவை!'' என்றான் புன்னகையுடன்.

"என்ன? அந்த இல்லம் உங்களுடையதா, கதிர்?"

"ம்..."

"உங்களுக்குத்தான் எத்தனை பெரிய மனசு, கதிர்! ஆமா, இவ்வளவு தயாள குணம் கொண்ட நல்ல மனிதரை கட்டிக் கொண்ட புண்ணியவதி யார்? நான் உடனே பார்க்கணும், கதிர்!"

அந்த கேள்வியால் பட்டென்று உடைந்தாலும்.. உடனே அவன் தன்னை தேற்றி...

"அதோ... அது என் பங்கஜா! வா போகலாம்!" என்று அழைக்க மறுக்காமல் வந்தாள்.

வீட்டு பெரியவர்களை நலம் விசாரித்தனர்.

மஞ்சுளா ஒருபடி மேலே போய் தென்றலைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டாள்!

"சுவாதி எப்படி இருக்கா? அவளுக்கு திருமணமாயிடுச்சா? குழந்தை இருக்கா? நல்லாயிருக்காளா? சொல்லுங்க, ஆன்ட்டி?" என்று தென்றல் பாசத்தோடு கேட்க...

எல்லோரும் பேயறைந்தாற் போல நின்று விட... மஞ்சுளா மட்டும் வாயில்



முந்தானையை வைத்து விம்மிக் கொண்டிருந்தாள்.

"கதிர்... ஆன்ட்டி ஏன் அழுறாங்க? சரி... சுவாதியைப் பற்றி அப்புறம் தெரிஞ்சுக்கிறேன்! உங்க மனைவியைப் பற்றி சொல்லுங்க? இந்தக் குட்டி தேவதையோட அம்மா எங்கே?"

சமையலறை, பூஜையறை வரை சென்று திரும்பியவள் "காணலையே! அந்த அதிர்ஷ்டசாலியை நான் பார்க்கணும்! மாடியில இருக்காங்களா?" என்று பரபரத்த தென்றலைப் பிடித்தமர்த்தி... செண்பகம் சுவாதியைப் பற்றி சொல்ல... தென்றல் அதிர்ந்து ஆடிப்போனாள்.

"ஐயோ... என்ன இது அநியாயம்? நம்ம சுவாதியா... இப்படிப்பட்ட ஒரு நல்லவருக்கு களங்கத்தை ஏற்படுத்திட்டு ஓடிட்டாள்!" பதற்றத்தோடு கேட்டவள் கதிரவனுக்காகவும், குழந்தைக்காகவும் கண்ணீர் சொட்டி நின்றாள்.

கொஞ்ச நேரத்தில் அவ்விடம் சகஜநிலைக்கு வந்தது.

"உன் அம்மா, அப்பா எப்படியிருக்காங்கம்மா?"

"அவங்க ரெண்டு பேரும் விபத்தொன்றுல இறந்துட்டாங்க!" என்று தென்றல் கலங்க...

"ஐயோ பாவமே! அண்ணா எப்படி இருக்கார்?"

"அண்ணா நல்லாயிருக்கார்! மனைவி, ரெண்டு பெண் குழந்தைங்களோடு சவுக்கியமா வாழறார்! அவங்களுக்கு இடைஞ்சலா இருக்க விரும்பாமல் இங்கே வந்திருக்கிறேன்!"

"அம்மா... முதல் முதலா தென்றல் நம்ம வீட்டுக்கு வந்திருக்கா! அவளுக்கு சாப்பிட எதுவும் கொடுத்து உபசரிக்காமல்... இப்படியா சொந்தக் கதை, சோகக் கதை சொல்லி அவளைக் கஷ்டப்படுத்தணும்? போய் ஏதாவது சாப்பிட கொண்டு வாங்க!"

அவன் சொல்ல... செண்பகம் சமையலறையை நோக்கி சென்றாள்.

"உங்களைப் பார்த்ததிலே ரொம்ப சந்தோஷம், கதிர்! நாளைக்கு இதயாவை ஸ்கூலுக்கு வருவாயில்லையா... அப்போ நீங்களும் வருவீங்கல்ல கதிர்!"

"மாமாதான் கொண்டு வந்து விடுவார்! நான் வர முயற்சிக்கிறேன், தென்றல்!" என்று கதிரவன் சிரிக்க, இந்த நல்லவனை விட்டு ஓட... சுவாதிக்கு எப்படி மனசு வந்தது?

அந்தக் கேள்வி அவள் மனதில் எழுந்து... இதயத்தை தீயாய் சுட்டெரித்தது!

இழக்குவளரில் கதிரவன் உற்சாகமே உருவாய், தூங்கியெழுந்து... துள்ளி நடைப்போட்டுக் கொண்டிருந்தான். என்றும் இல்லாத அளவு சூரியன் பிரகாசமாகவும்... விடியல் அற்புதமாகவும்... பூமி உற்சாகமாகவும் இருப்பதுபோல தோன்றியது, கதிரவனுக்கு!

அவ்வாறு தோன்றுவதற்கு... அவன் உற்சாகமாக இருப்பது கூட காரணமாக இருக்கலாம்.

இதுநாள் வரை எழும்போதே உற்சாகமின்றி எழுவான். கடமைக்காக குளித்து, உடுத்தி, உண்டுவிட்டு உழைக்க தயாராகிவிடுவான், கதிரவன். ஆனால் இன்று எழும்போதே உற்சாகமாகவும், புத்துணர்ச்சியாகவும் இருந்தது. மனம் புதுஜனனம் எடுத்தது போல தோன்றியது.

தன் உணர்வுகளை, ரகசியங்களைக் கொட்டவும்... அதனை அக்கறையோடு கேட்கவும்... தென்றல் வந்து விட்டாள் என்ற நினைப்பு மேலோங்க... உடலும், மனமும் லகு கூடினாற்போல இருந்தது!

சாம்பல் வண்ண சட்டையும், கறுப்பு பேண்ட்டும் அணிந்து... ஷேவிங்கில் வழவழத்த கன்னத்துடன்... படிய வாரிய தலையுடன்... முகத்தில் சிறுநகை மலர வந்தவனைக் கண்ட மாமாவும், தாயும் விழிவிரித்து கதிரவனையே நோக்கிக் கொண்டிருந்தனர்.

"டிபன் ரெடியா, அத்தை?" என்று கேட்டுக் கொண்டு டைனிங் டேபிளின் முன்பு அமர்ந்தவனை... மஞ்சுளாவுமே ஆனந்தத்தோடு பார்த்துக் கொண்டு பொங்கல், பூரி என்று பரிமாறினாள்.

"இதயா குட்டி... டிபன் சாப்பிட்டியாடா?" என்று மகளைப் பார்த்து கேட்டான்.

"ஆமாம்... டாடி!" என்று இதயா கூற... அவன் உண்டு முடித்தான்.

இதயாவின் பள்ளிப் பையை தூக்க...

"கதிர்... தோட்டம் மேற்பார்வைக்கு போகலையா? வழக்கமா நான்தானே இதயாவைக் கொண்டு போய் விடுவேன்!" என்று விநாயகம் வந்து நின்றார்.

"நான் போய் குழந்தையை ஸ்கூலில் விட்டுட்டு... அப்படியே வேலையைப்

பார்க்கிறேன், மாமா!" என்று அவன் கூற... அந்த மூவரும் அர்த்தபுஷ்டியுடன் பார்வையைப் பரிமாறிக் கொண்டனர்.

சரியாய் ஒன்பது மணிக்கெல்லாம் கதிரவன் அங்கே வந்துவிட... லில்லிபுஷ்பம் மற்றும் வொர்க்கர்ஸ், குழந்தைகள், முதியவர்கள் என்று சூழ்ந்து கொண்டனர்.

அத்தனை பேரும் அவனிடம் நலம் விசாரித்து கலைந்து போயினர்.

கதிரவனுக்கு அங்கே அடிக்கடி வர நேரமிருக்காது! மாதம் ஒரு முறையோ, இரு முறையோதான் வருவான்!

அங்கே அவனுக்கு கிடைத்த மதிப்பு, மரியாதையை, அவன்மேல் அவர்கள் வைத்த பாசத்தைக் கண்டு விழி விரித்தாள், தென்றல்! இரவு லில்லிபுஷ்பம் மேடத்திடம் கதிரவன் சிறுவயதில் தெரிந்தவர் என்று கூற... அவரோ அவன் புகழை நீண்டநேரம் அவன் காதுகளில் பாடிவிட்டார்!

எல்லோரும் அகன்றுவிட அங்கே தென்றல், கதிரவன், இதயா மூவரும் தனித்திருந்தனர். தென்றல் குழந்தையை ஆசையாகத் தூக்கி முத்தமிட்டாள்!

"ஹவ் ஆர் யூ தென்றல்?"

"பைன், கதிர்!"

"உனக்கு இந்த இடம் பிடிச்சிருக்கா?"

"ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்குங்க, கதிர்! இங்க இருக்கறவங்களுக்கு பணி செய்யற போது கிடைக்கற உள்ளார்ந்த திருப்தி வேற எந்த சேவையிலும் கிடைக்காதுங்க! ஒவ்வொரு குழந்தைகளின், முதியவர்களின் வாழ்க்கையில் எத்தனை வேதனைகள்? கஷ்டங்கள்? அதையெல்லாம் கேட்ட பிறகு என் சோகங்கள் எல்லாம் ரொம்ப குறைச்சலா தெரியுது! நானெல்லாம் லக்கிகேர்ள்ன்னுகூட தோணுதுங்க, கதிர்! கதிர்... உங்க சேவைக்கு என் இதயப்பூர்வமான பாராட்டுகள்!" என்று சின்ன சிரிப்புடன் சொன்னாள்.

"உன் பாராட்டு மழையில நனைஞ்ச எனக்கு ரொம்ப குளிருது! போர்வையிருந்தா ஒண்ணு கொடு, தென்றல்! குளிர்தாங்கல..." அவன் குளிரில் நடுங்குவது போல நடிக்க... தென்றல் மல்லிகையாய் மலர்ந்தாள்.

"தென்றல்... என் குழந்தை விவரம் தெரிஞ்சி தாய் ஸ்பரிசத்தையே உணர்ந்தவனில்லை! தாயோட தாலாட்டும், அன்பும், பாசமும், பிரியமும், என் குழந்தைக்கு மட்டும் மறுக்கப்பட்டதேன், தென்றல்? என் குழந்தை என்ன பாவம் செய்தான்? எங்களுக்கு ஏன் இந்த சோதனை? அதையெல்லாம் நினைக்கும் போது தாங்கலே, தென்றல்! உன்னைப் பார்த்த பிறகு மனசுக்கு கொஞ்சம் ஆறுதல் கிடைத்ததுபோல இருக்கு! உன் நட்பும், அன்பும் என் மனப்புண்ணை ஆற்றும்னு நம்பறேன், தென்றல்!" கதிரவன் சோகத்தோடு சொல்ல...

"கண்டிப்பா உங்களுக்கு நான் நல்ல தோழியா இருப்பேன், கதிர்!"

"என் குழந்தை தாயன்பை அறிந்ததில்லே, தென்றல்! தாயிருந்து தாலாட்டியிருந்தால்... என் குழந்தையின் மனம் ஓரளவு வளர்ச்சி கண்டிருக்கும்! இவனுடைய வீண் பிடிவாதமும், கோபமும், குறும்பும், அடமும் நிறைய குறைஞ்சிருக்கும்! தாயன்புக்கு ஈடானது உண்டா, தென்றல்? அந்த புனிதமான அன்பு கிடைக்காமல் பரிதவிக்கிற... என் இதயாமேல நீ கொஞ்சம் பரிதாபப்பட்டு, இரக்கப்பட்டு அணைச்சிக்கணும், தென்றல்!" என்று பரிதாபமாய் சொல்ல..

''கதிர்... நீங்க சொல்ல வேண்டுமா? இதயாவுக்கு ஒரு நல்ல ஆசிரியையாகவும், தாயாகவும் பார்த்துக்குவேன். கவலைப்படாதீங்க, கதிர்! இதயாவைப் பண்படுத்தறது என் பொறுப்பு! ஊருக்கெல்லாம் நன்மை செய்யற உங்களுக்கு... நான் இதைக்கூட செய்யலேன்னால் எப்படி? இதயாவின் கவனிப்பு, முன்னேற்றம் இனி என் கையில்! இந்த வாரம் முழுக்க இதயாவின் நடவடிக்கை, குணம் எல்லாத்தையும் தெரிஞ்சிக்கிறேன்!

இந்த ஞாயிறு வீட்டுக்கு வரேன்! இதயாவுக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்கிற டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போங்க! அவர் இதயாவைப் பற்றி என்ன சொல்றார்னு கேட்டுக்கிறேன்! இனி உயிர் உள்ளவரை என்னுடைய இருப்பிடம் உங்களுடைய இந்த இதயா இல்லம்தான்! என் சொந்தங்கள் இங்க வாழறவங்கதான்!" தென்றல் முகம் வாடி சொல்லி முடித்தாள்.

"தென்றல்... ஏம்மா இப்படி விரக்தியா பேசறே? உன் சொந்தங்கள் என்ன ஆனார்கள்?"

கதிரவன் கேட்க, பதில் சொல்ல முடியாமல் தவித்தவளுக்கு... ஸ்கூல் பெல் கை கொடுத்தது.

"இதயா செல்லம்... டாடிக்கு டாட்டா காட்டுடா! ஸ்கூல் பெல் அடிச்சாச்சி! கிளம்பறேங்க, கதிர்!" என்று குழந்தையை கையில் பிடித்துக் கொண்டு நடந்தாள், தென்றல்.

கதிர் பதில் சொல்லாமல் போகும் தென்றலையே... நீண்டநேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த வாரம் ஞாயிறன்று இருவரும் இதயாவுக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டரிடம் சென்றனர்.

"இதயா அருமையான குழந்தம்மா! நல்ல சுட்டி! புத்திசாலியும் கூட! சொன்னதை அப்படியே புரிஞ்சிப்பா! மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளில் இவள் கொஞ்சம் ஸ்பெஷல்! என்ன குறைன்னா சரியா சாப்பிட மாட்டாள்! கொஞ்சம் அடமும், மூர்க்கத்தனமும் இருக்கு!...

கதிர் சாரும் குழந்தையோட நேரத்தை செலவிடறதில்லே! இவகூட பேசி, விளையாடி இவ வயசுக்கு இறங்கி வரணும்! வயசான அந்த பெரியவர்களுக்கு இவளை கையாள தெரியலே!

சேவை மனப்பான்மையும், திறமையும் கொண்ட பெண்கள் நிறைய பேர் இருக்காங்க! அப்படிப்பட்டவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து குழந்தைக்கு அம்மாவாக்கிடுங்க! அது குழந்தைக்கும் நிம்மதி! உங்க வாழ்க்கையில் இருட்டும் விலகிடும்னு சொல்றேன்! கதிர் கேட்கறதில்லேம்மா!"

மருத்துவமனையை விட்டு வெளியே வந்து காரில் பயணிக்கும்போது தென்றல் கேட்டாள்.

"கதிர்... நீங்க ஏன் இன்னொரு திருமணம் செய்துக்கக் கூடாது? உங்களுக்காக இல்லைன்னாலும்... உங்க குழந்தைக்காக மறுமணம் செய்துக்கலாமே கதிர்!"

கதிரவன் சோகமானான். பின்...

"தென்றல்... பெத்த தாயே தன் குழந்தையின் குறையைக் கண்டு, வெறுத்து ஒதுக்கிட்டு ஓடிப்போகும்போது... மாற்றாந்தாய் வந்து... இதயாவை கவனிச்சுக்குவான்னு நாம நம்பறது அறிவீனம் இல்லையா!"

"எல்லோரும் வைரியான அரக்ககுணம் கொண்டு இருக்க மாட்டாங்க, கதிர்! இரக்ககுணம் கொண்ட பெண்கள் ஏராளமாய் இருக்காங்க! அதில் ஒருத்தரைத் தேர்ந்தெடுத்து... திருமணம் செய்துக்கக் கூடாதா?"



"திருமணம், மனைவியின்னு பேச்ச வேண்டாம், தென்றல்! இப்படிப் பட்ட வார்த்தைகளைக் கேட்டாலே அருவருக்குது! மனம் புண்ணா வலிக்குது!"

அவன் நெஞ்சில் கை வைத்து சொல்ல... தென்றலுக்கு தாங்க முடியவில்லை. அவனின் மிதமிஞ்சிய சோகத்தைச் சொட்டும் முகத்தைப் பார்க்க முடியவில்லை.

தென்றலின் அன்பில் இதயா கட்டுண்டாள்! தென்றலைப் பிரிந்து வீட்டுக்கு வர அடம்பிடித்தாள்! தென்றலும் விநாயகத்தின் வேண்டுகோளின்படி வீடு வரை வந்து விட்டு விட்டு... மீண்டும் இல்லத்திற்கு செல்லுவாள்!

வார விடுமுறைகளில் தென்றல் கட்டாயமாக கதிரவனின் வீட்டிற்கு வந்துவிட வேண்டும்! இது கதிரவனின் அன்புக் கட்டளை! மீற முடியாமல் அவன் அனுப்பிய காரில் ஏறி வந்து விடுவாள்.

தென்றலோடு விளையாடி... கதிரின் வேலைகளை அக்கறையுடன் கேட்டு... அன்புடன் பேசிவிட்டு... பெரியவர்களின் பாசத்தில் கட்டுண்டு இல்லம் திரும்புவாள்.

அதன்பிறகு குழந்தையிடம் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டது! அவள் வேண்டாதது ஒன்றே ஒன்றுதான்! தென்றலைப் பிரிய மறுத்ததுதான்!

ஒரு நாள் விநாயகம் சொன்னார்.

"கதிர்... ஒரு பெண்ணோட பராமரிப்பில் நம்ம குழந்தை எவ்வளவு பக்குவப்பட்டுட்டாள்! இந்த மூன்று மாசத்திலே எவ்வளவு முன்னேற்றம் நம்ம இதயாகிட்ட நடந்திருக்கு! நம்ம வீட்டுக்கு நிலையா ஒரு பெண் வந்து உனக்கு

**அதிக எடை வித்தியாசத்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகள்!**

இங்கிலாந்தில் அபர்டீன்ஷயர் பகுதியைச் சேர்ந்தவர் பமீலா. இவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. ஒரு குழந்தை 3.6 கிலோவும், இன்னொன்று 2.45 கிலோவும் இருந்தன. உலகிலேயே இவ்வளவு

எடை வித்தியாசத்தில் இரட்டைக்குழந்தை பிறந்தது இதுவே முதல் தடவை என்கின்றனர் இங்கிலாந்து மருத்துவர்கள்.

இரட்டைக் குழந்தைகளில் மூத்தவள் டெய்சி. இளையவள் பாப்பி. இளையவளை விட மூத்தவள் இப்போதே நிறைய சாப்பிடுகிறாளாம். போகப் போக என்னாகுமோ என்று இப்போதே பயப்படத் தொடங்கிவிட்டார், மம்மி.

மனைவியாகவும், குழந்தைக்கு தாயாகவும் மாறிட்டா எவ்வளவு நல்லாயிருக்கும்? ம்?'

அன்றிரவு முழுக்க கதிரவனுக்கு தூக்கம் வரவில்லை!

மாமா சொன்னது போல ஒரு பெண் இங்கே வந்துவிட்டால் இந்த குடும்பம் மீண்டும் அமைதியுடன், மகிழ்வுடன் கோவிலாய் மாறிவிடுமா?

புதோ ஒரு பெண் வந்தால்... இப்படி கண்ணும், கருத்துமாய் இதயாவைப் பார்த்துக் கொள்வாளா?

அதற்கு தென்றலே என் குழந்தைக்கு தாயாகி விட்டால்...? நான் ஒரு காலத்தில் உள்ளுக்குள் பொத்தி பொத்தி, உருகி உருகி காதலித்த தென்றலே என் மனைவியாகிவிட்டால்... அந்த வாழ்க்கை சொர்க்கமல்லவா? தேனோடையாய், தென்றல் தீண்டலாய் என் வாழ்க்கை செல்லுமல்லவா?

அந்த நினைப்பே தேனாய் தித்தித்தது!

நாள் முழுக்க வேலையே ஓடவில்லை! மாலை நேரத்தோடு வீடு திரும்பினான். குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்த தென்றலிடம் "நான் உன்கிட்ட தனியா பேசணும் தென்றல்" என்று கூறி அருகில் உள்ள பூங்காவிற்கு அழைத்து வந்தான்.

அங்கு போடப்பட்டிருந்த பெஞ்சில் அமர்ந்து... இடைவெளிவிட்டு அவனும் அமர்ந்தான்.

"என்னவோ பேசணும்னீங்களே, கதிர்!" என்றாள் அவள்.

"தென்றல்... வீட்டுல திருமணத்துக்கு வற்புறுத்தறாங்க! நான் என்ன செய்யட்டும்?"

அவன் அப்படி கேட்க... அவள் சட்டென்று சொன்னாள்.

"அவங்க சொல்றது சரிதாங்க, கதிர்!"

அவன் அவளை விழிகளால் ஆழ்ந்து பெரித்துக் கொண்டிருந்தான்.

"இதயாவுக்கு ஒரு நல்ல தாய்! உங்களுக்கு ஒரு அன்பான மனைவி கட்டாயம் வேண்டும்! உங்களை இப்படிப் பார்க்கறதுக்கு எனக்கே கஷ்டமாயிருக்கு! உங்க வீட்டு பெரியவங்களுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்!...

வாலிப வயசுல தனிமை உங்களைக் கொல்லாது! இனிமையா கூட இருக்கலாம்! ஆனால் வயோதிகம் வந்த பிறகு தனிமை விஷமாய் கொல்லும்! நிம்மதியா சாய்ந்துக்க ஒரு தோள் இல்லையேன்னு உங்க மனசு துன்பப்படும்! துயரப்படும்! அதனால், நீங்க எதிர்கால வாழ்க்கையை நினைச்சி திருமணம் செய்துக்கிறதுதான் பெட்டர்!"

"அந்த தோளுக்கு சொந்தக்காரியா இந்த தென்றல் இருந்தால்.. நான் இந்த நிமிஷமே திருமணம் செய்துக்க ரெடி தான்!"

கதிரவன் அவ்வாறு சொல்லிவிட்டு... உதடுகளில் இளமுறுவல் புன்னகை தவழ... தென்றலின் முகத்தைக் கூர்ந்து நோக்க... அவள் முகம் இருண்டது. அடுத்த நொடி...

"என்ன? என்ன சொன்னீங்க? நானா? நானா?" தென்றல் பதற...

"ம்... நீ என் மனைவியானால் மகிழ்ந்து போவேன், தென்றல்!" கதிரவன் உயிர் உருக சொல்ல...

"ஆ...!" அலறினாள், தென்றல்.

முதுகு குலுங்க அழுதாள். அவளின் அழுகைக்கு காரணம் புரியாமல் தவித்தவன், "உன்னைத் தவிர வேறொருத்தி என் குழந்தைக்கு நல்ல தாயா இருக்க முடியுமா, தென்றல்? தென்றல்... எனக்கு நீ வேண்டும், தென்றல்!"

கதிரவன் காதலோடு கூறி.. நேசத்துடன் தென்றலின் கைபற்ற...

"வேண்டாம்... நான்... நான் வேண்டாம்! நான் அதுக்கான அருகதை இல்லாதவள்!"

"நீ எந்த விதத்திலும் குறைஞ்சவள் இல்லை! நீ எனக்கு மாசு மருவற்ற தங்கம்! என்னை நீ மணந்துக்கணும்!" என்று அன்புடன் கட்டளையிட...

"நா... நான்... ஏற்கனவே ... கதிர்... கதிர்... நான்... நான் ஒரு வி... விதவை, கதிர்!"

தென்றல் தாக்குறை அந்த வார்த்தைகளை சொல்லி முடிக்க... அங்கே பூகம்பம் வந்தது போல் அதிர்ந்து நின்றான் கதிரவன்!

தென்றல் விம்மலோடு அவள் வாழ்க்கை ஏடுகளைப் புரட்ட... கதிர் துடித்துப் போனான், கரைமணலில் விழுந்த மீனாய்!

# 10

தென்றல் இளங்கலைப் பட்டம் பெற்று பி.எட். படித்தவள். ஒரு தனியார் பள்ளியில் கணித ஆசிரியையாக பணிபுரிந்தாள்!

தாய், தகப்பனற்ற தென்றலுக்கு அண்ணன் இருந்தானே தான் எல்லாமே! அண்ணன் தனியார் கம்பெனியில் சாதாரண கிளார்க்! அவன் கொண்டு வரும் சொற்ப சம்பளத்தில் அவள், அண்ணன், அண்ணி ரம்யா, குழந்தைகள் இருவர் என்று கஷ்ட ஜீவனம் தான் நடத்தினர்.

இவ்வளவு கஷ்டத்திலும் அண்ணியை மீறிக் கொண்டு... அண்ணன் அவளை படிக்க வைத்ததுதான் தென்றலுக்கு சந்தோஷம்! அண்ணனின் கஷ்டம் உணர்ந்து நன்கு படித்து... முதல் வகுப்பில் தேறியவளுக்கு... எளிதாய்... அந்த தனியார் பள்ளியில் வேலை கிடைத்தது!

தென்றலைப் பெண்கேட்டு வந்தவர்கள் அவளின் அழகையோ... உள்ளத்தின் மேன்மையையோ புரிந்து கொள்ளாமல் நிறைய வரதட்சணை கேட்டனர்.

ஓரளவு சேமித்து... அவளுக்கு முப்பது பவுன் நகையும், ஐம்பதாயிரம் ரொக்கமும் என்று உருவாக்கிய போது தென்றலுக்கு இருபத்தைந்து வயதுக்கு மேல் சென்று விட்டது.

எல்லோரும் கலங்கிக் கொண்டிருந்த போது... கலங்கரை விளக்கின் ஒளியாய்... ஒரு நல்ல வரன் வந்தது.

அரசு வங்கியில்... அசிஸ்டெண்ட் மேனேஜராய் பணிபுரிந்த சுதாகர்... பெண் பார்க்க பெற்றோரோடு வந்தான்.

நல்ல சிவந்த நிறத்தில்... நல்ல உயரத்தில் களைச்சிதமாய், மிகையான அழகோடு இருந்தான், சுதாகர்.

அவன் சேலம்! அவள் ஆத்தூர்! பக்கத்து பக்கத்து நகரம்! நல்ல சம்பளத்தில் உள்ளவன்!

அவர்கள் வீட்டில் சம்மதம் சொல்ல... அரசு பணியிலுள்ள மணமகன் மன்மதனாய் வந்து நின்றால்... அவனைக் கட்டிக் கொள்ள தென்றலுக்கு கசக்குமா என்ன?

அவனைப் பார்த்த உடனே மயங்கி விட்டாள், தென்றல்! அண்ணன் அவள் சம்மதம் கேட்க... சட்டென்று மகிழ்ச்சியுடன் தலையாட்டினாள்.

திருமணத்திற்கு நாள் குறித்தனர். மண்டபம், கச்சேரி என செலவிலேயே புக் செய்தனர்.

தென்றல் சுதாகரின் போனுக்காக தவமிருந்தாள். அவள் செல்போன் ஒலிக்கும் போதெல்லாம்... செல்திரையைப் பார்த்து... சுதாகரின் எண்களைக் காணாது தவித்துப் போவாள்.

தாலி, பிற நகைகள், பட்டுப்புடவை எடுக்கும் போதும் அவன் வரவில்லை!

அவனுக்கு டூவீலர் வாங்கப் போகும் போது வருவான் என்று எதிர்பார்த்தால் 'உங்களுக்கு பிடித்த வண்டியை, பிடித்த நிறத்தில் வாங்கி விடுங்கள்' என்று அண்ணனுக்கு போன் வந்தது.

சுதாகர் மேல் தென்றலுக்கு கோபம் கோபமாய் வந்தது.

ஒரு மாலை வேளையில் பெற்றோர்களோடு பத்திரிகை கொடுக்க வந்தான், சுதாகர். தென்றலைப் பார்த்து ஒரு மோகனப் புன்னகை, ஒரு ஒற்றை சொல்... ம்கூம்... அவள் ஏங்கியதுதான் மிச்சம்!

பெற்றவர்கள் முன்பு அதெல்லாம் ஒழுக்கம் கெட்ட செயல் என்று நினைக்கிறாரோ? இருக்கலாம்! சுதாகர் அவளை இப்போது சுற்றி வரத் தேவையில்லை! திருமணத்துக்கு பிறகு சுற்றி வரட்டும்! அதுதான் ஒரு பெண்ணுக்கு பெருமை! பெரும் மகிழ்ச்சி!

திருமணத்திற்கு முந்தைய நாளில் மாப்பிள்ளை ஊர்வலத்தில்... அழகு பதுமையாய் அமர்ந்திருந்த தென்றலை விட... அவனைத்தான் கண்ணெடுக்காமல் அனைவரும் பார்த்தனர்.

"ஏய் தென்றல்... உனக்கு ஏதோ மச்சம் இருக்குடி! அதான் இத்தனை அழகான மன்மதனுக்கு மாலைச் சூட்ட போற!"

"உன் ஆளை ஜாக்கிரதையா பார்த்துக்கோ! எவளாவது இவர் அழகு கண்டு வாரி சுருட்டி முடிஞ்சிக்கப் போறா!"

"முதலிரவுல எதுக்கும் கேட்டு வையடி! எத்தனை பொண்ணுங்க உங்களுக்கு லவ் லெட்டர் கொடுத்தாங்க? நீங்க அதில் யாரைக் காதலிச்சீங்கன்னு! அப்படி ஒருத்தியை காதலிச்சேன்னு சொன்னால்... அவளை சுத்தமா மறந்துடுங்க! இனி எனக்கு மட்டுமேதான் கணவனா இருக்கணும்னு மிரட்டி வை!"

"மன்மதனை ஜாக்கிரதையா பார்த்துக்கோ, தென்றல்! வேற எதாவது ரதியைத் தேடி போயிடப் போறார்!"

திருமணத்திற்கு வந்த அவளின் தோழிகள் கிண்டலடிக்க... தென்றலுக்கு பெருமையாக

## 10

தென்றல் இளங்கலைப் பட்டம் பெற்று, பி.எட். படித்தவள். ஒரு தனியார் பள்ளியில் கணித ஆசிரியையாக பணிபுரிந்தாள்!

தாய், தகப்பனற்ற தென்றலுக்கு அண்ணன் ஒருவன்தான் எல்லாமே! அண்ணன் தனியார் கம்பெனியில் சாதாரண கிளார்க்! அவன் கொண்டு வரும் சொற்ப சம்பளத்தில் அவள், அண்ணன், அண்ணி ரம்யா, குழந்தைகள் இருவர் என்று கஷ்ட ஜீவனம் தான் நடத்தினர்.

இவ்வளவு கஷ்டத்திலும் அண்ணியை மீறி கொண்டு... அண்ணன் அவளை படிக்க வைத்ததுதான் தென்றலுக்கு சந்தோஷம்! அண்ணனின் கஷ்டம் உணர்ந்து நன்கு படித்து... முதல் வகுப்பில் தேறியவளுக்கு... எளிதாய்... அந்த தனியார் பள்ளியில் வேலை கிடைத்தது!

தென்றலைப் பெண்கேட்டு வந்தவர்கள் அவளின் அழகையோ... உள்ளத்தின் மேன்மையையோ புரிந்து கொள்ளாமல் நிறைய வரதட்சணை கேட்டனர்.

ஓரளவு சேமித்து... அவளுக்கு முப்பது பவுன் நகையும், ஐம்பதாயிரம் ரொக்கமும் என்று உருவாக்கிய போது தென்றலுக்கு இருபத்தைந்து வயதுக்கு மேல் சென்று விட்டது.

எல்லோரும் கலங்கிக் கொண்டிருந்த போது... கலங்கரை விளக்கின் ஒளியாய்... ஒரு நல்ல வரன் வந்தது.

அரசு வங்கியில்... அசிஸ்டண்ட் மேனேஜராய் பணிபுரிந்த சுதாகர்... பெண் பார்க்க பெற்றோரோடு வந்தான்.

நல்ல சிவந்த நிறத்தில்... நல்ல உயரத்தில் கனகச்சிதமாய், மிகையான அழகோடு இருந்தான், சுதாகர்.

அவன் சேலம்! அவள் ஆத்தூர்! பக்கத்து பக்கத்து நகரம்! நல்ல சம்பாத்தியம் உள்ளவன்!

அவர்கள் வீட்டில் சம்மதம் சொல்ல... அரசு பணியிலுள்ள மணமகன் மன்மதனாய் வந்து நின்றால்... அவனைக் கட்டிக் கொள்ள தென்றலுக்கு கசக்குமா என்ன?

அவனைப் பார்த்த உடனே மயங்கி விட்டாள், தென்றல்! அண்ணன் அவள் சம்மதம் கேட்க... சட்டென்று மகிழ்ச்சியுடன் தலையாட்டினாள்.

திருமணத்திற்கு நாள் குறித்தனர். மண்டபம், கச்சேரி என செலவழித்தே புக் செய்தனர்.

தென்றல் சுதாகரின் போனுக்காக தவமிருந்தாள். அவள் செல்போன் ஒலிக்கும் போதெல்லாம்... செல்திரையைப் பார்த்து... சுதாகரின் எண்களைக் காணாது தவித்துப் போவாள்.

தாலி, பிற நகைகள், பட்டுப்புடவை எடுக்கும் போதும் அவன் வரவில்லை!

அவனுக்கு டூவீலர் வாங்கப் போகும் போது வருவான் என்று எதிர்பார்த்தால் 'உங்களுக்கு பிடித்த வண்டியை, பிடித்த நிறத்தில் வாங்கி விடுங்கள்' என்று அண்ணனுக்கு போன் வந்தது.

சுதாகர் மேல் தென்றலுக்கு கோபம் கோபமாய் வந்தது.

ஒரு மாலை வேளையில் பெற்றோர்களோடு பத்திரிகை கொடுக்க வந்தான், சுதாகர். தென்றலைப் பார்த்து ஒரு மோகனப் புன்னகை, ஒரு ஒற்றை சொல்... ம்கூம்... அவள் ஏங்கியதுதான் மிச்சம்!

பெற்றவர்கள் முன்பு அதெல்லாம் ஒழுக்கம் கெட்ட செயல் என்று நினைக்கிறாரோ? இருக்கலாம்! சுதாகர் அவளை இப்போது சுற்றி வரத் தேவையில்லை! திருமணத்துக்கு பிறகு சுற்றி வரட்டும்! அதுதான் ஒரு பெண்ணுக்கு பெருமை! பெரும் மகிழ்ச்சி!

திருமணத்திற்கு முந்தைய நாளில் மாப்பிள்ளை ஊர்வலத்தில்... அழகு பதுமையாய் அமர்ந்திருந்த தென்றலை விட... அவனைத்தான் கண்ணெடுக்காமல் அனைவரும் பார்த்தனர்.

"ஏய் தென்றல்... உனக்கு ஏதோ மச்சம் இருக்குடி! அதான் இத்தனை அழகான மன்மதனுக்கு மாலைச் சூட்டப் போற!"

''உன் ஆளை ஜாக்கிரதையா பார்த்துக்கோ! எவளாவது இவர் அழகு கண்டு வாரி சுருட்டி முடிஞ்சிக்கப் போறா!"

"முதலிரவுல எதுக்கும் கேட்டு வையுடி! எத்தனை பொண்ணுங்க உங்களுக்கு லவ் லட்டர் கொடுத்தாங்க? நீங்க அதில் யாரைக் காதலிச்சீங்கன்னு! அப்படி ஒருத்தியை காதலிச்சேன்னு சொன்னால்... அவளை சுத்தமா மறந்துடுங்க! இனி எனக்கு மட்டுமேதான் கணவனா இருக்கணும்னு மிரட்டி வை!"

''மன்மதனை ஜாக்கிரதையா பார்த்துக்கோ, தென்றல்! வேற ஏதாவது ரதியைத் தேடி போயிடப் போறார்!"

திருமணத்திற்கு வந்த அவளின் தோழிகள் கிண்டலடிக்க... தென்றலுக்கு பெருமையாக

இருந்தது.

மணவறையில் அமர்ந்து மகிழ்ச்சியோடு அவள் தாலியை வாங்கிக் கொண்டாள், தென்றல். தாலிகட்டும்போது மலர்ந்தாய் அவன் கைப்பட்ட போது இறுகித்தான் போனாள்.

நாள் முழுக்க தவிர்க்க முடியாத போது அதுவும் ஒன்று. இரண்டு வார்த்தைகளை மட்டும் பேசினான், சுதாகர்.

முதலிரவு அறை!

தங்கரதமாய், வைர சிற்பமாய் ஜொலித்த தென்றலை ஒரு சுவாரசியமான பார்வையால் தீண்ட வேண்டாமா, இந்த சுதான் இடியட்! தென்றலுக்கு அவனுடைய சாதாரணப் பார்வையால் அடி நெஞ்சில் சுள்ளென்று கோபம் பொங்கியது!

தென்றல் தன்னை அடக்கி... அவன் காலில் விழுந்து வணங்க... அந்த மட்டி சுதாகர் அவளைத் தூக்கி அணைத்துக் கொள்ளவில்லை! ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு... வெள்ளி சொம்பிலிருந்த பாலை நீட்ட... வாங்கி இரண்டு மிடறு குடித்தவன் அதை ஸ்டூலின் மேல் வைக்க... அடுத்த நொடி தென்றல் ஆசையாசையாக எடுத்து அவன் குடித்து வைத்த பாலை குடித்து முடித்தாள்.

அவன் அவளை அமர வைத்து, அணைத்துக் கொள்ளுவான் என்று எதிர்பார்த்தாள்! அவளுக்கு ஏமாற்றம்தான் முற்றுப்புள்ளி வைத்தது!

இளம் உதட்டில் புன்னகையை தவழவிட்டவாறே அவன் பக்கத்தில் உட்கார்ந்து, "சுதாகர்" என்று ஆசையோடு அவன் மார்பில் அவள் முகம் புதைக்க... அடுத்த விநாடி அவளை, அவனுமே சேர்த்து அணைத்தான்.

அவள் உதடுகள் அவன் முத்தத்திற்காக யாசிக்க... நெற்றி, கன்னம் என்று முத்தமிட்டவன் அவள் உதடுகளில் முத்தமிட்ட அடுத்த நொடி... தென்றல் அதை உணர்ந்தாள்.

அவன் கை, கால், உடல் மொத்தமுமே நடுங்கியது! சுதாகருக்கு ஏசியிலும் குப்பென்று வியர்த்து கொட்டியது. அவளை அணைத்திருந்த கையை விலக்கினான்.

"ஸாரி... ஸாரி தென்றல்! எனக்கு இப்போ உடம்பு சரியில்லாதது போல இருக்கு! நான் படுத்துக்கவா?"

அவன் வெடவெடவென நடுங்கிக் கொண்டு கேட்க... அவன் மேல் பரிதாபப்பட்டவள் அவனைப் படுக்க வைத்து... நெஞ்சு நீவி... நெஞ்சில் மெல்ல தட்ட... நடுக்கம் குறைந்தது. அவன் இமைமூடி சிறு குழந்தையாய் உறங்கினான்.

தென்றல் கொட்ட கொட்ட விழித்து... விடியாத இரவை சபித்துக் கொண்டே... விடியற்காலையில் உறங்கிப் போனாள்.

சூரியக்கதிர்கள் கண்ணாடி ஜன்னல் மீறி உள்ளே வந்து ஆசையோடு தென்றலின் கன்னத்தை வருடி... விடிந்து விட்டது என அறிவிக்க... மல்லாந்து படுத்திருந்த தென்றலின் கண்களுக்கு அந்தக் கோரக் காட்சி தென்பட்டது.

சுதாகர் மின்விசிறியில் தூக்குமாட்டி தொங்கிக் கொண்டிருந்தான்.

"ஐய்யோ..." என்று அலறி எழுந்தவள் அருகில், மடித்து வைத்திருந்த வெள்ளைத்தாள் கண்ணில் பட்டது. சுதாகர்தான் எழுதியிருந்தான்.

'அன்புள்ள தென்றலுக்கு,

நீ என்னை முதலில் மன்னிக்க வேண்டுகிறேன்!

நான் என் நிலையை எப்படி உனக்கு உணர்த்துவேன்? ஆனால், நான் என்னைப் பற்றி உன்னிடம் சொல்ல வேண்டும்.

நான் எல்லோரின் பார்வைக்கு ஒரு கம்பீரமான, அழகான ஆண்! ஆனால் நான் உள்ளுக்குள்ளே வெட்கமும், நாணமும், நளினமும், மென்மையும், அச்சமும், பயிர்ப்பும் நிறைந்த பெண்! ஆண் உடலும், பெண் மனதோடும் வாழும் நான் ஒரு திருநங்கை!

எனக்கு பெண்ணைப்போல நடையில்லாமல் இருக்கலாம்...! நளினமான குரலில் பேசாமல் இருக்கலாம்! எனக்கும் நளினமாய் நடக்க வேண்டும்... பெண்ணைப்போல கொஞ்சி கொஞ்சி பேச வேண்டும்... சிரிக்க வேண்டும் என்றெல்லாம் ஆசைதான்! ஆனால் அதையெல்லாம் அடக்கிக் கொண்டேன். என் ஆசைகளுக்கு விலங்கிட்டு கட்டுக்குள் வைத்துக் கொண்டேன்!

ஆனால் பெற்றோர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி... உன் கழுத்தில் தாலி கட்டியது தவறுதான்! ஒரு பெண் இன்னொரு பெண்ணை தாம்பத்தியத்தில் எவ்வாறு சந்தோஷப்படுத்த முடியும்? அதனால்தான் உன்னைத் தொட்டவுடன் எனக்கு நடுக்கமும், பயமும் ஏற்பட்டது.

எங்களைப் போன்றவர்களை... எங்கள் பெற்றோர்களே ஏற்றுக் கொள்வதில்லை!

ஆண் உடலில் பெண்ணாய் வாழும்

கலையைக் கற்று... சந்தோஷமாய் இருந்த என்னை... இப்படி திருமண சிக்கலில் ஈடுபடுத்திவிட்டார்கள்!

தென்றல்... உனக்கு என்னால் எந்த சுகத்தையும் கொடுக்க முடியாது! உனக்கு எந்த சுகத்தையும் கொடுக்க முடியாத இந்த உடலும், உயிரும் வேண்டாம் என்று நினைத்துதான் இதோ உன் முன்பு... உன்னை தவிக்க விட்டுவிட்டு சுதாகர் என்கிற சுதா விண்ணுலகுக்கு செல்கிறேன்!

தென்றல்... என் மன உணர்வுகளை, ரகசியங்களை உன்னிடம் மட்டுமே தெரிவிக்கிறேன்! என்னை அவமானப்படுத்திவிடாதே, தென்றல்! ப்ளீஸ் தென்றல்...

என்னைக் [illegible] ஒரு கம்பீரமான ஆணாகவே அனுப்பி வைத்துவிடு, தென்றல்!

அடுத்த பிறவி என்று ஒன்றிருந்தால் நான் முழு ஆணாய் பிறந்து... உன்னையே அடைய விரும்புகிறேன், தென்றல்!

தென்றல்... நீ என் பூ, தென்றல்! ஐ ஆம் ஸாரி, தென்றல்!

பிரியமுடன்,

சுதாகர் என்கிற சுதா.'

ஒரே மூச்சில் படித்தவள் சுக்கு நூறாய் கடிதத்தைக் கிழித்து குப்பை தொட்டியில் போட்டு விட்டு கதறி அழுதுகொண்டே... கதவு திறந்து ஓடினாள்.

## 11

கல்யாண வீடு இழவு வீடானது!

தென்றலின், சுதாகரின் உறவினர்கள் அத்தனை பேரும் அடித்து புரண்டு கொண்டு ஓடி வந்தனர்.

எவ்வளவு அழுது புரண்டாலும்... ஆர்ப்பாட்டம் செய்தாலும்... அந்த மணமகன் சுதாகர் எழுந்து வரப்போகிறானா?

அநியாயமாய் ஒரு பெண்ணின் வாழ்க்கையை நாசப்படுத்தி... சீரழித்துவிட்டான்! உண்மையைச் சொல்லி... திருமணம் செய்து கொள்ளாமல் இருந்திருக்கலாம்! தென்றலின் வாழ்க்கையில் விதி சுதாகர் ரூபத்தில் வந்து விளையாடிவிட்டது!

"இவ கழுத்துல தாலிகட்டின நேரம்தான் என் பிள்ளை செத்துப் போயிட்டான்! இவ கேடு கெட்ட ராசியால என் குழந்தையை முழுங்கிட்டா! நானும் ஆம்பளைப்பிள்ளையா பொறந்துடிச்சேன்னு கவலைப்பட்டு... கடைசியா பொறந்த என் பிள்ளையை பொட்டப்பிள்ளையா நினைச்சி பொத்தி, பொத்தி வளர்த்தேனே! என் வீட்டு அழகன் இப்படி கல்யாணமான மறுநாளே பிணக்கோலத்துல இருக்கானே!" அவன் அம்மா சொல்லிவிட்டு கதறினாள்.

"கல்யாணம் வேண்டாம்னு சொன்னான். வற்புறுத்தி பண்ணி வச்சோம்! பாவி... இப்படி பாதியில போவான்னு தெரிஞ்சிருந்தா... அவன் விருப்பத்துக்கே விட்டிருப்போமே!" அவனுடைய அப்பா துண்டால் வாய் பொத்தி கதறினார்.

"ஐய்யோ... நாலு புள்ளைங்களும் ஆம்பளைப் புள்ளைங்க... அரசு வேலையில இருக்காங்கன்னு நான் பூரிச்சிப் போனேனே! என் பூரிப்புல பூகம்பம் வந்துடிச்சே! ஐய்யோ... என் தங்கமே... என் வைரமே... இந்த எழவெடுத்தவளைக் கட்டி வச்ச ராசியாலதான்... நீ செத்துப்போனியா, என் மன்மதனே..."

சுதாகரைப் பெற்றவள் அவன் உடல் மீது விழுந்து அழுதாள்.

அவனுடைய அண்ணிகள் மூவரும் தென்றலின் தோஷம்தான் தன் கொழுந்தனை சாகடித்துவிட்டது எனப் புலம்ப... தென்றலின் அண்ணன் இருவரால் இதைத் தாங்க முடியவில்லை!

"எல்லோரும் என்ன நினைச்சிட்டு இருக்கீங்க? என் தங்கச்சி மேலேயே குற்றம் சுமத்துறீங்களே? இவனை கட்டின ராசியால்தான் கல்யாணமான மறுநாளே என் தங்கை புருஷனை இழந்து விதவையா நிக்கறா! கல்யாணம் வேண்டாம்னு

### மனிதர்களுக்குள் 14 விதமான மூக்குகள்!

முகத்துக்கு அழகு சேர்ப்பது மூக்கு. மனிதர்களின் முக்கிய உறுப்புகளில் மூக்கும் ஒன்று. மனிதர்களுக்குள் 14 விதமான மூக்குகள் உள்ளன என்பதை இஸ்ரேலில் உள்ள பென்குரியன் பல்கலைக்கழக பேராசிரியர் ஆபிரகாம் தமிர் கண்டுபிடித்துள்ளார். பிறைவடிவிலான மெல்லிய மூக்கு, சதைப் பிடிப்பு மூக்கு, உருண்டை மூக்கு, ரோமன் மூக்கு என மொத்தம் 14 விதமான மூக்குகளை அவர் பட்டியலிட்டுள்ளார்.

சதைப்பிடிப்புள்ள மூக்குகள் ஆண்களிடம்தான் அதிகமாக காணப்படுகிறது என்கிறார், இவர். மூக்கு

சொன்னவனை வற்புறுத்தி பண்ணி வச்சோம்னு சொல்றீங்களே... அதுக்கு என்னய்யா அர்த்தம்? இவன் எவளையாவது காதலிச்சானா? கட்டி வைக்க மறுத்தியனா? இல்லே இவனுக்கு ஏதாவது பெரிய நோய் இருக்கா? அதை மறைச்சி என் தங்கையை கட்டிக்கிட்டானா?...

போலீஸ்லே கேஸ் கொடுத்தா... போஸ்ட் மார்ட்டம் செய்வாங்க! அதில் தெரிஞ்சிடும் இவனுக்கு என்ன நோய் இருக்குன்னு! உங்களை எல்லாம் கண்டோட கம்பி எண்ண வைக்கிறேன் பார்!'' என்று இருந்னா கத்த...

தென்றலின் செவிகளில் அண்ணனின் சொற்கள் விழ... அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

''தென்றல் நான் இவனுங்களை சும்மா விட மாட்டேன்! எதையோ மறைச்சிதான் இவனை உன் தலையில கட்டி வச்சிட்டானுங்க! இவனுங்க சாயத்தை வெளுக்க வைக்கிறேன் பார்''

''போய்யா... இதுக்கெல்லாம் பயப்படறவங்க நாங்க இல்லை! என் தம்பிக்கு எந்த குறையுமில்லை... எந்த கெட்ட பழக்கமும் இல்லை! உன் தங்கச்சி ஏதாவது கெட்ட நடவடிக்கைகாரியா இருந்திருப்பா! அதைக் கேள்விப்பட்ட என் தம்பி தாங்க முடியாத துக்கத்துல அக்குல



விஷயம் சாதாரணமானது அல்ல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உணர்வுகளை வெளிப்படுத்துகிறதாம். பிறைவடிவிலான மெல்லிய மூக்கைத்தான் அதிகம் பேர் விரும்புகிறார்கள் என்பது கருத்துக்கணிப்பில் தெரிய வந்துள்ளது.

நீண்ட மூக்கை பெரும்பாலானோர் விரும்புவதில்லை. தடிமனான மூக்குக்கு 5 சதவீதம் பேர் மட்டுமே ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மூக்குக்கும் இப்படியொரு ஆய்வா? ஆச்சர்யம்தான்.

தொங்கியிருக்கலாம்!'' சுதாகரின் பெரிய அண்ணன் இப்படி கூற...

அவனுக்கும், இருஷ்ணாவுக்கும் வாய் பேச்சில் ஆரம்பித்த சண்டை... கைகலப்பில் முடிந்து... இரண்டு வீடும் போலீசுக்கு போக இருந்த சமயம்...

'போலீசுக்கு போய்... போஸ்ட் மார்ட்டம் செய்து அவன் குறை வெளிப்பட்டு விட்டால்... ஐயோ... வேண்டாம்... சுதாகர் கேட்டுக் கொண்டது போல சம்பிரமமா அணாசவே அவனை சுடுகாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும்! பெற்றவர்களிடம் கூட மறைத்த உண்மையை... என்னிடம் மறைக்காமல் சொன்னதிற்காகவாவது அவனை நல்ல முறையில் அனுப்பி வைக்க வேண்டும்!' என்று எண்ணிய தென்றல்...

''அண்ணா வேண்டாம்ண்ணா... போலீஸ், கேஸ்னு போனால்... என் கணவரோட உடலை கத்தி கொண்டு கூறு போட்டுடுவாங்க! என் கணவன் உடலை காயம் ஏற்படுத்தாமல்... அவரை நல்லபடியா சுடுகாட்டுக்கு அனுப்பி வையுங்கண்ணா! உங்களைக் கெஞ்சி கேட்டுக்கிறேன், என் சுதாகர் சுடுகாட்டுக்காவது நிம்மதியா போய் சேரட்டும்!''

இருஷ்ணாவின் காலில் தென்றல் விழுந்து கதறியழ... அதன் பிறகு இருதரப்பும் சமாதானமாய் போக... மதியத்திற்குள்ளேயே அவனை சுடுகாட்டிற்கு தூக்கிப்போய் பிடி சாம்பலாக்கி விட்டனர்!

தாலிகட்டிய ஒரே காரணத்திற்காக... கன்னித்தன்மையைக் கூட இழக்காத கற்புள்ள தென்றல் சுதாகரின் விதவை மனைவியானாள்!

அதாகர் என்ற சுதாலிற்காக பிறந்திலிருந்து சூடிய பொட்டு, பூ வளையலை இழந்து வாழாவெட்டியானாள்!

காரியம் முடிந்ததும்... எங்கே தனக்கு மீண்டும் பாரமாகிவிடுவாளோ தென்றல் என்றுணர்ந்த அண்ணி ரம்யா...

''தாலிகட்டி ஒருநாள் வாழ்ந்தாலும் அவள் இனி உங்களுக்கு சொந்தமில்லை! ஒருத்தன் கையில் பிடிச்சி கொடுக்கறவரைதான் அவள் உங்களுக்கு சொந்தம்! இப்போ அவளை யார்னு சொல்லுவாங்க... சுதாகரோட விதவை மனைவின்னு தானே? இனி தென்றல் சுதாகர் வீட்டாருக்குத்தான் சொந்தம்... அவளைப் பாதுகாப்பது அவர்களின் கடமை! அவள் பங்கு சொத்தெல்லாம் அவளுக்குத்தான் கிடைக்கும்! அதை வச்சிட்டு... அவளையே நினைச்சிட்டு வாழட்டும்!''

அண்ணியின் சொல்லுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்த இருஞ்னாவும்... தென்றலை அங்கேயே விட்டுவிட்டு சென்று விட்டாள்.

சுதாகர் வீட்டின் வேறொரு அங்கத்தினர்... அவளை வெள்ளைப்புடவை உடுத்தச் சொல்லி அழகு பார்த்தனர். மாமனார் சுந்தரத்தைத் தவிர!

"அவனுக்கும் சொத்து மனை, வீடு, பணம் என்று சமமாய் பிரித்து கொடுக்கவேண்டுமே என்ற பொறாமையில்... தென்றலை அண்ணிமார்கள் துரத்தப் பார்த்தனர்.

தென்றலை சின்னவீட்டாய் யார் வைத்துக் கொள்வது என முப்முனைப் போட்டியில் இறங்கினர், சுதாகரின் அண்ணன்கள்!

ஒரு காலகட்டத்தில் அவர்களின் அராஜகம் அதிகமாகிவிட... மாமனார்தான் இதமாய் சொன்னார்.

"தென்றல்... நீ இங்கே இருக்க வேண்டாம்மா! உன் அண்ணன் வீட்டுக்கு போயிடு! உனக்கான பங்கு சொத்தை, பணத்தை எல்லோருக்கும் பிரிக்கும்போது... உன்னுடையதை கொண்டு வந்து தரேம்மா! அடிக்கடி நான் வந்து பார்க்கிறேன். நீ படிச்ச படிப்புக்கு மூலையில முடங்கிடாதே! நீ வேலைப் பார்த்த பள்ளியிலேயே மீண்டும் வேலைக் கேட்டு போம்மா! அப்புறமா நீ பொட்டு வச்சிக்கோ! பூ வச்சிக்கோ! கலர் புடவை கட்டிக்கம்மா!" மாமனார் சுந்தரம் சொல்ல தென்றல் கதறி அழுது விட்டாள்.

"மாமா... மாமா... இல்லை! நீங்க என் அப்பா..."

யாருக்கும் தெரியாமல் அவளைப் பஸ் ஏற்றி விட்டார்.

"ஒடுகாலி ஒழுங்கா எனக்கும், இந்த வீட்டிற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று கையெழுத்து போட்டுட்டு போயிருந்தா... எவ்வளவு நல்லாயிருக்கும்? ச்சே... இத்தனை பேர் இருந்து... அந்த விஷயத்தை செய்யாமல் விட்டுட்டீங்களே...!" தென்றலின் மாமியார் அங்கே புலம்பிக் கொண்டிருந்தாள்.

தென்றலின் அப்போதைய மனநிலையில் வேலைக்கு போக முடியாமல் அண்ணனின் வீட்டில் முடங்கிவிட... அண்ணி ரம்பா அவளை இருத்து புடைத்து தான் சாப்பாடு போட்டாள்.

"இவ முகத்துல விழிச்சுட்டு போனா ஒரு காரியமும் உருப்படலே! எப்படி உருப்படும்? இவள் அறுத்துப் போட்ட நேரம் அப்படியில்லே!"

"இவ பார்வை பட்டாலே நாமும் அந்த சுதாகர் போலத்தான் போய் சேருவோம். அப்படி ஒரு நேரம்... இருக்கும் போல!"

அண்ணி ரம்பா புலம்புவாள், இருஞ்னா இருந்தாலும் அடித்தாலும்! எவ்வளவு அதட்டினாலும் அடித்தாலும்!

ஒருநாள் இருஞ்னாவிற்கு சின்ன ஆக்ஸிடெண்ட் ஏற்பட்டுவிட... அதற்கும் தென்றல்தான் காரணம். அவள் முகத்தில் முழித்துவிட்டு போனதுதான் காரணம் என்று கத்தினாள் ரம்பா.

அதன் பிறகு... ரம்பாவின் சித்தப்பா ஒருத்தர் மனைவி இறந்து, மகன்களும் வெளிநாட்டில் செட்டிலாகிவிட... தனியே சமைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அந்த ஐம்பத்தைந்து வயது முதியவருக்கு தென்றலை மணமுடிக்க ரம்பா ஏற்பாடு செய்துக் கொண்டிருக்க... அண்ணனும் எதிர்ப்பு தெரிவிக்காமல் மனைவியோடு சேர்ந்துக் கொண்டு நாள், நட்சத்திரம் பார்க்க...

அந்த சமயம்... அவளைப் பார்க்க வந்த மாமனாரிடம் அத்தனையும் கொட்டிவிட்டு அழ...

"இவ்வளவு உனக்கு வயசோடுதான் திருமணம் செய்ய ஏற்பாடாய்யா நடந்துட்டு இருக்கு! ஆனால் அங்கே எல்லோரும்... நான் உன்னை திருட்டுத்தனமா அனுப்பி குடும்பம் நடத்தறதா வதந்தியை கிளப்பி விட்டுட்டாங்கம்மா! தகப்பன் போல பாசம் காட்டற என்னை உன் கள்ளக்காதலனா ஆக்கிட்டாங்கம்மா! சொந்த பந்தம் அத்தனையும் இழிவா பார்க்கவும், என்கிட்ட பேசவும் ஆரம்பிச்சிட்டாங்க!"

"ஐய்யோ அப்பா...!" வீறிட்டாள், தென்றல்.

"தென்றல் நான் சொல்றதைக் கேளும்மா. எனக்கு தெரிஞ்ச மதர் மூலமா ஒரு ரெக்கமெண்டேஷன் லட்டர் வாங்கி வந்திருக்கேன்! கன்னியாகுமரியில இருக்கற அந்த இல்லத்துக்கு போயிடு! பாதுகாப்புக்கும் பாதுகாப்பும்மா! அப்படியே அங்க இருக்கற இல்லத்துல சேவை செய்துட்டு, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பள்ளியில டீச்சர் வேலையும் பார்த்துக்கலாம்!"

"கல்யாணமா போறேம்மா!"

"அங்கே யாராவது உன்னை மணக்க விருப்பப்பட்டால் மறுக்காம கல்யாணம் செய்துகிட்டு இன்பமா வாழும்மா, தென்றல்."

கண்கள் கலங்க சொன்ன சுந்தரம், பணம் பத்தாயிரமும், கடிதமும் கொடுத்துவிட்டு சென்றார்.

கன்னியாகுமரி என்றதும் அவனுக்கு கதிரவனின் ஞாபகம் வந்தது. ஆனால் அவன் இருப்பிடத்திற்கே வந்து சேருவாள் என்று கனவிலும் நினைக்கவில்லை.

தென்றல் அத்தனையும் கொட்டிவிட்டு கதிரவன் முன்பு விசித்தழுதாள்.

அவளின் கண்களைத் துடைத்து, ஆதரவாய் மார்பில் சாய்த்து "உனக்கு நான் இருக்கிறேன், கண்மணி!" என்று கூறத் தோன்றிய எண்ணத்தையும், ஆறுதல்படுத்த நீண்ட கைகளையும்... பெரும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான், கதிரவன்.

"இந்த ரகசியத்தை யாராவது நெருக்கமானவங்ககிட்ட, என்மேல அன்பு காட்டறவங்ககிட்ட சொல்லணும்னு நினைச்சேன், கதிர்! உங்ககிட்ட என் மனபாரத்தை இறக்கி வச்சதும்... என் மனமே லேசானது போல இருக்கு!" என்றவளின் கண்களில் மீண்டும் ஒரு கங்கைநதி உருவானது.

"தென்றல் அழாதம்மா! உன்னோட காயத்தின் வலி எனக்கு புரியுது, தென்றல்! ஏன்னா நானுமே காயம்பட்டு ரணமா இருப்பவன்தானே? கலங்காதே, தென்றல்! இப்படியெல்லாம் நடக்கணும்ங்கிறது விதியின் விளையாட்டு, தென்றல்!"

அவன் வார்த்தைகள்... அவள் மனக்காயத்திற்கு மயிலிறகால் மருந்து தடவியது போல இருந்தது.

"தென்றல்... நாம இரண்டுபேருமே இன்னொருத்தரால ஏமாற்றப்பட்டவங்க! அந்த ஏமாற்றத்தின் வீரியம்... அனுபவிச்ச நமக்குத்தான் தெரியும்! நீயும் காயமான இதயத்தோட கலங்கிட்டு இருக்க! நானும் ஆறாத ரணத்தோடு வாழ்ந்துட்டு இருக்கேன். கையில வேற மனைவாச்சி இல்லாத பெண் குழந்தை! காயம்பட்ட இரண்டு பேரும்... உன் காயத்திற்கு நான் மருந்தாகவும்... என் காயத்திற்கு நீ மருந்தாகவும் இருந்தா என்ன தென்றல்? தென்றல் நீ மறுக்கக் கூடாதும்மா! இல்லேன்னா வீட்டுல வேற ஒரு பெண்ணை என் தலைவிதி கட்டி வச்சிடுவாங்க! மீண்டும் அவளால் என் வாழ்க்கை சிதைந்து சின்னாபின்னமாகுமா என்பது கடவுளுக்குத்தான் தெரியும்! என்னை மணந்துக்க சம்மதமா, தென்றல்?"

"இல்ல... இல்ல கதிர்! என்னால முடியாதுங்க, கதிர்!"

தென்றல் சொல்லிவிட்டு குலுங்கியழ... கதிரவன் தேற்ற வழி தெரியாமல்... ஒரு ஆழமான பார்வையுடன் நின்று விட்டான்.

## 12

நாட்கள் காலில் சக்கரம் கட்டி உருண்டோடியது!

அதன் பிறகு தென்றலைத் திருமணத்திற்கு வற்புறுத்தவில்லை, கதிர்!

தென்றலும் எப்போதும்போல பழகினாள். வீட்டிற்கு வந்தாள். குழந்தையைப் பாசத்தோடு கவனித்துக் கொண்டாள். இருவரின் நட்பும் இறுகியது! இதயா தென்றலையே சுவாசிக்கத் துவங்கினாள்.

ஒரு நாள் தாயிடம் 'கல்யாணமான அன்றே விதவையானவள், தென்றல்' என்று மட்டும் சொல்லி வைக்க... அந்தச் செய்தி விநாயகம் காதிற்கு சென்றது.

தென்றலை கண்டுவிட்டால் அவன் முகத்தில் ஒளிரும் வெளிச்சம்... அவளை ஆழ்ந்த பார்வையுடன் நோக்கும் அவன் விழிகளும் அவர்களுக்கு அந்த செய்தியைச் சொல்ல...

"கதிர்... தென்றலை உனக்கு பிடிச்சிருக்குன்னு தெரியுது! இல்லேன்னு மட்டும் சொல்லிடாதே! உன் இதமான பேச்சு... வருடலான பார்வை... அத்தனையும் நீ தென்றலை விரும்பற செய்தியைச் சொல்லுது! தென்றல்கிட்ட இது விஷயமா நீ பேசினியா? இல்ல நாங்க பேசட்டுமா?" என்று விநாயகம் கேட்க...

"நானே கேட்கறேன், மாமா!" என்று கூறிவிட்டான்.

அதன்பிறகு தினம் தினம் "தென்றல்கிட்ட கேட்டியா, கதிர்? தென்றலோட நீ சந்தோஷமா வாழுறதை நாங்க பார்க்கணும், கதிர்!" என்றார்.

செண்பகத்தின் நச்சரிப்பு... மாமா, அத்தையின் நுழைவிட்டு என எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைக்க... ஒரு நாள் மாலை... வீட்டிற்கு வந்த தென்றலைக் கடற்கரைக்கு அழைத்துப் போனான், கதிர்.

எதிரும் புதிருமாய் அமர்ந்த இருவரும் ஆழமான பார்வையைப் பரிமாறிக் கொண்டனர். பின்...

"தென்றல்... அம்மாகிட்ட ஒருநாள் திருமணமான அன்றே விதவையானவள் நீன்னு சொல்லி வச்சேன். அதிலிருந்து நம்ம இரண்டு பேருக்கும் திருமணம் செய்ய விரும்பறாங்க! நீ கேட்கறியா? இல்ல, நாங்க கேட்கட்டுமான்னு தினமும் கேட்டு நச்சரிக்கிறாங்க! உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு, தென்றல்! அடுத்தது நீ என்

குழந்தைபோல உயிரையே வச்சிருக்க! என்ன சொல்றே, தென்றல்!" என்று ஆசையோடு கேட்டான்.

"இல்ல கதிர்! அதெல்லாம் சரிப்படாதுங்க" தென்றல் வாடிய முகத்துடன் மறுப்பு சொல்ல...

"நான் மணமானவன் என்பதாலும்... மனவளர்ச்சி குன்றிய குழந்தையை எதுக்கு தலையில கட்டிட்டு அவதிப்படணும்னு நினைக்கறியா, தென்றல்!" என்றான்.

"ஐய்யோ... என்ன பேசறீங்க, கதிர்! குழந்தையை விட்டு நீங்களே பிரியச் சொன்னாலும்... என்னால பிரிய முடியாது கதிர்! அந்த அளவு நாங்க இரண்டு பேரும் அன்பால இணைஞ்சி இருக்கோம்!" கண்களில் கண்ணீர் எட்டிப் பார்க்க கூறினாள்.

"நான் உங்களை(!) பிரிக்கமாட்டேன் தென்றல்! அதான் அந்தக் குழந்தைக்கு நிஜ அம்மாவா ஆயிடுன்னு சொல்றேன்!"

"நாம இதேபோல எப்போதும் நட்போட இருந்துடலாம்! நமக்குள்ள திருமணம் என்ற பந்தம்மட்டும் வேண்டாங்க, கதிர்!"

"அதான் ஏன்னு கேட்கறேன்! இல்ல, இவனிடம் எதுவும் குறையில்லாமலா சுவாதி இவனை விட்டு ஓடியிருப்பான்னு நினைக்கறியா, தென்றல்?" என்றதும் சட்டென்று கோபமானாள் தென்றல்.

"என்ன பேசறோம்னு யோசிச்சி பேசுங்க, கதிர்! இதுபோல எல்லாம் பேசி... நீங்க உங்களையே தாழ்த்திக்க வேண்டாம்! மனசுக்கு கஷ்டமாயிருக்கு!"

"அப்போ நீ மறுக்க சரியான காரணத்தைச் சொல்லு? அதன் பிறகு இது தொடர்பா பேசவே மாட்டேன்"

"அதான் என்கிட்ட பிரிச்சி பேசலே! பிரிவா நடந்துக்கல! ஆசையா ஒரு



பார்வை கூட பார்த்ததில்லே! ஆனாலும்... ஆனாலும்... அவர் மேல ரொம்ப ஆசைப்பட்டு, நேசம் வச்சிட்டேன்! அந்த நேசம் நெஞ்சத்துல இன்னும் வானத்து மேகங்களா சுற்றி சுழன்னுட்டு இருக்கு! அவர் ஏற்படுத்தின நேசம், பாதிப்பு... சுற்றத்தினரும், உறவினரும் ஏற்படுத்தின ரணம்னு மனசெல்லாம் வலியோட இருக்க நான் எப்படி உங்களுக்கு மனைவியா நடந்துக்க முடியும், கதிர்?"

"என் அன்பென்ற காற்று வேகமா, உன் மனவானில் வீசினால்... மேகங்களா சுற்றி சுழன்னுட்டு இருக்க அந்த நேசம் காணாமல் போயிடும், தென்றல்! ஒரு நிழலுக்கு இந்த அளவு மதிப்பு கொடுத்து... நிஜத்தை மறுக்கலாமா, தென்றல்?... நீ எங்க இரண்டு பேருக்கும் நிழல் தரும் மரமா இரு, தென்றல்! நாங்க இரண்டு பேரும்



அந்த நிழலில் இளைப்பாறறோம்!"

"மனைவிங்கிறவ கணவனை எல்லாவிதத்திலும் திருப்திப் படுத்தறவளாயிருக்கணும்! உங்க வயிற்றுப்பசிக்கு உணவிட முடியும்! உங்க உள்ளப்பசிக்கு பிரியமான நட்பை வழங்க முடியும்! ஆனால் உங்க உடற்பசிக்கு... என்னால்... என்னால்... அதை நினைச்சுகூட பார்க்க முடியாதுங்க, கதிர்! ப்ளீஸ் என்னைப் புரிஞ்சுக்கங்க, கதிர்!" என்று நெஞ்சம் வலிக்க வார்த்தைகளால் கதிரவனிடம் மன்றாடினாள்.

"தென்றல்... நீ என் வீட்டு பெரியவர்களுக்காக கல்யாணம் செய்துக் கொண்டு... மத்தவங்க கண்ணுக்கு மனைவியா இரு! என் மனைவியாயிட்ட ஒரே காரணத்துக்காக... நீ என்னைக் காதலிச்சுதான் ஆகணும்னு கட்டாயப்படுத்த மாட்டேன்!"

தென்றல் அவன் பேசுவதை கண்கள் விரித்து ஆச்சரியத்துடன் நோக்கிக் கொண்டிருக்க... மீண்டும் தொடர்ந்தான்.

"நீ... என் மகளுக்கு நல்ல தாயாய் மட்டும் அந்த வீட்டில் இருந்தாப் போதும்! அதன் பிறகு சுதாகரோட நினைவுகள் அகன்று... உன் மனக்காயம் ஆறி... அப்போது உனக்கு பிடிச்சிருந்தால்... என்னை நீ கணவனா ஏத்துக்கலாம்!... அதுவரை உனக்கு என்னால் சிறு தீங்கு கூட ஏற்படாது! என்னை நீ நம்பலாம், தென்றல்! உன் மனசுக்கு பிடிக்காத செயல் அங்கே என் மூலமா நடந்தால்... அந்த நிமிஷமே நீ என்னை விட்டு பிரியவும் செய்யலாம், தென்றல்!...

குழந்தை நான் முழுக்க உன்னோட இருந்துட்டு... இரவு உன்னைப் பிரிய தினமும் கஷ்டப்படறா! அதைக் கண்கொண்டு காணப் பொறுக்கல! இரவு திடீர் திடீர்னு எழுந்து உட்கார்ந்துட்டு உன்கிட்ட போகணும்னு அழுது அடம் பிடிக்கிறா! அவளைச் சமாதானப்படுத்தி தூங்க வைக்கறதுக்குள்ளே போதும் போதும்னு ஆகிடுது!...

அடுத்தவங்க யாராவது என் அன்பைக் கொஞ்சம் பகிர்ந்துக்க மாட்டாங்களா, அதுவும் பிரியமானவங்க வந்துன்னு ஏங்கறேன், தென்றல்!...

என் பள்ளிக்கு தன்னலம் பாராமல் உழைக்கக்கூடிய உன்னைப்போல ஆயிரம் டீச்சர் கிடைப்பாங்க! ஆனால், இதயாவுக்கு இப்படி தன்னலம் பாராத தாய் கிடைக்கவே மாட்டாங்க! நீ நல்ல பதில் சொன்னால் மகிழ்ந்து போவேன்!

இல்லேன்னு சொன்னால் உடைஞ்சிடுவேன் போவேன், தென்றல்! இதுக்குமேலே என் மனசை விளக்கிச் சொல்ல தெரியலே, தென்றல்!"

கதிரவன் சோகத்தோடு சொல்லி முடித்து... அவளின் இதழ்களில் இருந்து உதிரப்போகும் வார்த்தைக்காக அதிர்ச்சியோடு காத்திருந்தான்.

'காலமெல்லாம் உனக்கு நானிருக்கிறேன்! அதற்காக காதலை நிர்ப்பந்திக்க மாட்டேன்' என்று பாதுகாப்பைக் கொடுக்க வரும் கதிரவனை எந்த காரணத்தையும் காட்டி மறுக்க முடியவில்லை!

கதிரவன் கொஞ்சம் அச்சத்தோடே பார்த்துக் கொண்டிருக்க... தென்றல் சம்மதமாய் தலையசைக்க...

"நன்றி... நன்றி... தென்றல்ம்மா!" என்று மகிழ்ந்தான்.

அவனுடைய நெஞ்சம் சிறகு முளைத்து சந்தோஷ வானில் பறந்தது!

## 13

ராமநாத சுவாமி கோவிலில் தாலியைக் கட்டி... மாலை மாற்றி... தென்றலை மனைவியாக்கிக் கொண்டான், கதிரவன்.

விநாயகத்தின் ஏற்பாடு இது!

இறைவன் முன்பு பிணைக்கப்படும் புனிதமான உறவு என்றுமே கடைசிவரை நீடிக்கும் என்று விநாயகம் கூற... கதிரவன் மறுத்து பேசவில்லை!

முகூர்த்தம் முடிந்து... அருகிலுள்ள மண்டபத்தில் விருந்து கொடுத்தான்!

இரவு... செண்பகமும், விநாயகமும் சேர்ந்து... குதூகலத்துடன் மலர்த்தூவி... கட்டிலை அலங்கரித்தனர்!

மஞ்சுளா தென்றலுக்கு அலங்காரம் செய்தாள். நெருக்க கட்டிய மல்லிகையை சரம் சரமாய் தொங்கவிட்டாள், தலையில்! எளிய நகைகளை அணிவித்தாள். தென்றலின் அலங்காரம் முடிந்து... அவளின் அழகைக் கண்குளிர பார்த்தாள்.

"என் கண்ணே பட்டுடும்போல இருக்கு தென்றல்!" என்றவள் ஓடிப்போய் கைப்பிடி உப்பு எடுத்து வந்து தலையைச் சுற்றி, "உப்பு கரையறாப்போல உன் மேலுள்ள கண்ணாறும் கரைஞ்சுடும் பாரேன்!" என்று சொல்லிவிட்டு போய்... பக்கெட் தண்ணீரில் உப்பைப் போட்டுவிட்டு வந்தாள்.

தென்றலுக்கு ஒருவித படபடப்புடன் [illegible] உணர்வும் கூடியது!

இத்தனை பேரின் ஆசையை, பாசத்தை ஏமாற்றப் போகிறோமே என்று கலங்கினாள்.

பால் சொம்பை நீட்ட... தென்றல் பெற்றுக் கொண்டாள்.

'எவ்வளவு ஆசையோடும், நேசத்தோடும் சுதாகரின் அறைக்கு சென்றேன்!' அதை நினைத்தவுடன் கண்களில் நீர் முட்டிக் கொண்டது.

பால் சொம்போடு நடந்தவளின் கால்களை இதயா கட்டிக் கொள்ள...

"இதென்ன வம்பா போச்சி! தாத்தா, பாட்டியோட படுத்துக்குவியாம்!" செண்பகம் சொல்ல...

"ம்கூம்... மம்மி, டாடியோடதான் படுத்துப்பேன்!" என்ற குழந்தையை தென்றல் தூக்க...

"தென்றல்... அவளை எங்கிட்ட விட்டுட்டு போம்மா! கதிரவன் பாவம்! ஆசையோடு காத்திருப்பான்! குழந்தையைத் தூக்கிட்டு போனால்... உங்களுக்குள்ளே எந்த சடங்கும் நடக்காது!"

செண்பகம் சொல்ல... "தூங்க வச்சிட்டு போறேன், அத்தை!" என்ற தென்றல் அவளைத் தோளில் போட்டு உள்ளுக்கும், வாசலுக்கும் நடக்க... கொஞ்ச நேரத்தில் உறங்கி விட்டாள், இதயா!

இதயாவை அவர்களிடம் கொடுத்த உடனே... தென்றலை மாடிக்கு விரட்டினர்.

பட்டுவேட்டி, சட்டை அணிந்திருந்த கதிர் ரொம்ப அழகாக இருந்தான். தென்றல் கொடுத்த பால் செம்பை வாங்கி ஸ்டூலின் மீது வைத்து விட்டு...

"தென்றல் இப்படி உட்கார்!" என்று கட்டிலைக் காட்ட... தென்றலுக்கு கண்ணீர் பொங்கியது. அதை மறைக்க தலை குனிந்து அமர்ந்தாள்.

"தென்றல் உனக்கு பயமா இருக்கா?"

"இல்ல... ஆமாம்!" என்று குழற....

"தென்றல்... நான் சொன்ன சொல் மீறமாட்டேன்! நம்மிடையே உள்ள ஒப்பந்தம் அவங்களுக்கு தெரியாது! எதுக்கு இந்த அலங்காரம்னு கேட்டால் நம்ம மேல அவங்களுக்கு சந்தேகம் வரும்! அவங்க நம்மை கவனிக்க ஆரம்பிச்சிடுவாங்க! அதெல்லாம் எழாமல் இருக்கத்தான் அவங்க விருப்பத்துக்கு விட்டுட்டேன்! மூடிய அறைக்குள்ளே நாம தனித்தனியா படுத்து எழுந்து போனாலும்... சந்தோஷமா வாழறோம்னு நினைப்பாங்க! அந்த

சந்தோஷத்தையாவது அவங்களுக்கு கொடுக்கலாமே, தென்றல்! நீ என்ன நினைக்கறே?"

"ம்..." என்று தலையசைத்தவள், "கதிர்... என் வாழ்க்கையில திருமணத்துக்கு பிறகு நடந்த துக்கத்துக்கு பிறகு நான் இதுநாள் வரை ஒருநாளும் நிம்மதியா தூங்கினதில்லேங்க! இந்த வீடு எனக்கு பெரும் பாதுகாப்பா இருக்கு! நிம்மதியா படுத்து தூங்கணும்போல ஆசையா இருக்குங்க, கதிர்! நான் படுத்துக்கட்டுமா?" என்று கேட்டாள்.

அவன் புன்னகையுடன் தலையசைக்க... ஒரு போர்வையைக் கீழே விரித்து படுத்துக் கொண்டாள். உடனே உறங்கியும் விட்டாள், தென்றல்.

ஆனால் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தான் கதிரவன். விடியற்காலையில் உறக்கம் வந்து அவன் இமைகளைத் தழுவியது.

கண்விழித்த தென்றலுக்கு கடிகாரம் எட்டு என்று அறிவிக்க... அரக்க பரக்க எழுந்து ஓடினாள்.

"வாடாம்மா, தென்றல்! கதிரோட சந்தோஷமா இருந்தியா?" செண்பகம் கேட்க..

"ம்..." என்றவளுக்கு குற்ற உணர்ச்சி மேலிட்டது.

"தென்றல்... நீ என்ன செய்வியோ... ஏது செய்வியோ தெரியாதும்மா! அடுத்த வருஷத்துக்குள்ள இதயா குட்டியோட தம்பியையோ, தங்கச்சியையோ எங்க மடியில தவழவிடணும்!" விநாயகம் சொன்னார்.

"ஹீட்டால வெந்நீர் போட்டிருக்கேன்! கொஞ்சம் சூடான நீர்லே குளிம்மா!" மஞ்சுளா சொல்ல...

மூவரையும் ஆச்சரியமாகவே பார்த்தாள், தென்றல்.

எவ்வளவு நல்ல உள்ளம் கொண்டவர்கள்! என்னைத் தன் வயிற்று பிள்ளையாய் பாவித்து பிரியம் காட்டுகிறார்கள்! இவர்களுக்கு நான் என்ன கைமாறு செய்வேன்! இவ்வளவு நல்ல இதயம் படைத்த சொந்தபந்தங்கள் கிடைக்கத்தான்... பெரிய துக்கத்தையும், அவ்வளவு துயரத்தையும் கொடுத்தாயா, கடவுளே?

குளித்துவிட்டு வெளியே வந்தவளை செண்பகம் டவலோடு வரவேற்று தலையை துவட்டிவிட்டார்.

"உன் நீண்ட பட்டுக் கூந்தலை பராமரிக்கும் பொறுப்பை என்கிட்ட விட்டுடு, தென்றல்!"

"இந்த காபியைக் குடிம்மா!" என்று மஞ்சுளா நீட்ட வாங்கி பருகினாள்.

"மாப்பிள்ளை எழுந்துட்டார்! இந்த காபியைக் கொடும்மா! மாப்பிள்ளை உனக்காக காத்துட்டு இருப்பார்! அவர் தேவையைப் போய் நிறைவேற்று!" என்று மஞ்சுளா அவளை கதிரவனிடம் போகச் சொல்லி விரட்டினாள்.

"அம்மா... குழந்தையைக் கவனிக்கலேன்!"

"மூச்... அதெல்லாம் அவள் சமத்தா குளிச்சி, காபி குடிச்சிட்டு தாத்தாவோட விளையாடிட்டு இருக்கா! நீயே பாரேன்!" என்று கைகாட்டிய திசையில் விநாயகமும், இதயாவும் விளையாடிக் கொண்டிருந்தனர்.

"என்னைக் கேட்கலையாம்மா?"

"கேட்கலையா! அழுதாளாக்கும்! அப்பாவோட அம்மா இருந்தாதான்... பக்கத்து வீட்டு ரோஜினிபோல உனக்கும் தம்பி பாப்பா கிடைக்கும்னு சொல்ல... அழுகையை நிறுத்திட்டு அவர் கூட விளையாடறா!" என்று சின்ன சிரிப்போடு மஞ்சுளா சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

எனக்கும், கதிரவனுக்கும் பிறக்கப் போகும் குழந்தைக்காக இவர்கள் பெரிய மனக்கோட்டையே கட்டி வைத்து காத்திருக்கிறார்களே... ஒரு நாள் உண்மை தெரிய வந்தால் இவர்களின் மனக்கோட்டை மண்கோட்டையாய் இடிந்து விழுந்து விடுமே! இவர்களால் அதைத் தாங்க முடியுமா?

தென்றல் உள்ளுக்குள்ளே அழுதாள்.

## 14

மறுநாள்... மலர்ந்தும், மலராத விடியற்காலையிலேயே அந்தவீடு விழித்துக் கொண்டது!

எல்லோரும் கிளம்பி திருநெல்வேலிக்கு பயணப்பட்டனர். திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் சுவாமிதான் அவர்களின் குலதெய்வம்!

காரில் போகும் போது பெரியவர்களின் முன்னிலையில் பிரிந்து அமர முடியாததால் ஒரே சீட்டில் கதிரவன், தென்றல், குழந்தை என்று பயணப்பட்டனர்.

இதயா இருவரிடமும் தாவும் போதும்... தூக்கிக் கொள்ள சொல்லும் போதும்...

அவனுடைய கை அவன்மேல் பட்டது. அவனுக்கு மட்டும் கேட்கும்படி நிறைய முறை 'ஸாரி' சொல்லி வந்தான்.

ஓட்டலில் காலை உணவு உண்டுவிட்டு... மீண்டும் பயணம் தொடர்ந்தது. மதியம் வாக்கில் போய் சேர்ந்தனர்.

பொங்கல் வைத்து கவாமிக்கு படையல் போட்டனர்.

கருவறையில்... எதிரே பெண்கள் பகுதியில்... இதயப்பூர்வமான வேண்டுதலோடு... விழிகளை மூடி... இதழ்கள் முணுமுணுக்க... சாமியை தரிசித்த தென்றலையே வைத்தவிழி எடுக்காமல்... விழிகள் படபடக்க நோக்கிக் கொண்டிருந்தான், கதிரவன்!

வேண்டுதல் முடிந்து... விழிகளைத் திறந்த தென்றலினுள் அவனின் பார்வை மழைச் சாரலாய் ஊடுருவி சிலிர்க்க வைத்தது!

வழிபாடு முடிந்து மீண்டும் பயணப்பட்டனர். ஒரு இருந்து கிலோ மீட்டர் கூட பயணப்பட்டிருக்க மாட்டார்கள்... அப்போது மதியம் உண்ட உணவோ, எதுவோ ஒத்துக்கொள்ளாமல் போக... தென்றலுக்கு வயிற்றைப் புரட்டியது. அவனின் முகம் போன போக்கை கவனித்தவன்...

"தென்றல்... என்னம்மா செய்யுது?" என்று பதற...

"வயிற்றைப் புரட்டுதுங்க" என்று கூற... டிரைவரிடம் சொல்லி காரை நிறுத்தினான்.

கதவைத் திறந்துக் கொண்டு சாலையின் ஓரம் ஓடியவள் உடனே உமட்டி வாந்தி எடுத்தாள். கதிரவன் தண்ணீர் பாட்டிலோடு பின்னாடியே ஓடி வந்து விட்டான். ஓங்காரமாய் உமட்டி உமட்டி வாந்தி எடுத்தவளின் தலையை ஆதரவாய் பற்றிக் கொண்டான்.

எல்லாம் முடிந்து எழுந்தவளுக்கு நீர் கொடுத்து வாயைக் கொப்பளிக்க வைத்தான். சிறு குழந்தைக்கு புகட்டுவது போல நீரைப் புகட்டினான். கைக்குட்டை எடுத்து வாயைத் துடைத்து விட்டான்.

தென்றலுக்கு தலை சுற்றியது! மயக்கமாய் இருந்தது! அவன் கைப்பற்றி காருக்கு அழைத்து வந்தான். மீண்டும் கார் கிளம்பியது.

மயக்க கலக்கத்தில் கதிரவனைப் பற்று கொடியாய் சுற்றி தோளில் சாய்ந்து உறங்கி வந்தவள்... தூக்கம், மயக்கம் தெளிந்ததும்... துள்ளி அவனிடமிருந்து விலகினாள்,

## சீனாவில் 480 கோடி ஆண்டுக்கு முந்தைய அதிசய விண்கல்!

பூமியில் சில நேரங்களில் விண்வெளி கற்கள் விழுவது உண்டு. அவ்வாறு விழுந்த அதிசய விண்வெளி கல் ஒன்று சீன நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனா மற்றும் மங்கோலியாவை பிரிக்கும் அல்டாய் மலைப்பகுதியில் இந்த விண்வெளி



தென்றல்.

அதற்கு அடுத்தநாள் தேனிலவுக்கு ஊட்டிக்கு கிளம்பவேண்டும் என்று பெரியவர்கள் வற்புறுத்த...

"பிஸினஸ் பாதிக்கப்படும், மாமா!" என்ற கதிரின் மறுப்பை காதில் வாங்கிக் கொள்ளாமல் இருவரையும் அனுப்பி வைத்துவிட்டனர்.

"குழந்தை பத்திரம், அத்தை!" என்ற தென்றலை இழுத்து செண்பகம் வகிட்டில் முத்தமிட்டு "அதெல்லாம் நாங்க பார்த்துக்குவோம்! நீ எங்க கதிரை பத்திரமா பார்த்துக்கோடிம்மா!" என்று புன்னகைத்தாள்.

மறுநாள் அதிகாலை மூன்று மணிவாக்கில் ஊட்டி போய் சேர்ந்து... அறையெடுத்து ஒரு குட்டி தூக்கம் போட்டுவிட்டு... குளித்து எட்டு மணிவாக்கில் கிளம்பினர்.

முதலில் நீலகிரியின் மணிமகுடமான தொட்டபெட்டா சென்றனர். தொட்டபெட்டாவின் அழகிலும், கம்பீரத்திலும் தென்றல் மனதைப் பறி கொடுத்தாள்.

பிரஷ்ஷான கேரட்டும், அனலில் வாட்டிய முத்துச்சோளத்தையும் ஆசையாய் வாங்கி தென்றல் சாப்பிட... கதிரவன் அதை ரசிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அங்கங்கே நிற்க வைத்து போட்டோ பிடித்தான்.

மீண்டும் ஊட்டிக்கு கிளம்பினர்.

அவனுடைய கை அவன்மேல் பட்டது. அவனுக்கு மட்டும் கேட்கும்படி நிறைய முறை 'ஸாரி' சொல்லி வந்தாள்.

ஓட்டலில் காலை உணவு உண்டுவிட்டு... மீண்டும் பயணம் தொடர்ந்தது. மதியம் வாக்கில் போய் சேர்ந்தனர்.

பொங்கல் வைத்து சுவாமிக்கு படையல் போட்டனர்.

கருவறையில்... எதிரே பெண்கள் பகுதியில்... இதயப்பூர்வமான வேண்டுதலோடு... விழிகளை மூடி... இதழ்கள் முணுமுணுக்க...சாமியை தரிசித்த தென்றலையே வைத்தவிழி எடுக்காமல்... விழிகள் பளபளக்க நோக்கிக் கொண்டிருந்தான், கதிரவன்!

வேண்டுதல் முடித்து... விழிகளைத் திறந்த தென்றலினுள் அவனின் பார்வை மழைச் சாரலாய் ஊடுருவி சிலிர்க்க வைத்தது!

வழிபாடு முடிந்து மீண்டும் பயணப்பட்டனர். ஒரு நூறு கிலோ மீட்டர் கூட பயணப்பட்டிருக்க மாட்டார்கள்... அப்போது மதியம் உண்ட உணவோ, எதுவோ ஒத்துக்கொள்ளாமல் போக... தென்றலுக்கு வயிற்றைப் புரட்டியது. அவளின் முகம் போன போக்கை கவனித்தவன்...

"தென்றல்... என்னம்மா செய்யுது?" என்று பதற...

"வயிற்றைப் புரட்டுதுங்க" என்று கூற... டிரைவரிடம் சொல்லி காரை நிறுத்தினான்.

கதவைத் திறந்துக் கொண்டு சாலையின் ஓரம் ஓடியவள் உடனே உமட்டி வாந்தி எடுத்தாள். கதிரவன் தண்ணீர் பாட்டிலோடு பின்னாடியே ஓடி வந்து விட்டான். ஓங்காரமாய் உமட்டி உமட்டி வாந்தி எடுத்தவளின் தலையை ஆதரவாய் பற்றிக் கொண்டான்.

எல்லாம் முடிந்து எழுந்தவளுக்கு நீர் கொடுத்து வாயைக் கொப்பளிக்க வைத்தான். சிறு குழந்தைக்கு புகட்டுவது போல நீரைப் புகட்டினான். கைக்குட்டை எடுத்து வாயைத் துடைத்து விட்டான்.

தென்றலுக்கு தலை சுற்றியது! மயக்கமாய் இருந்தது! அவள் கைப்பற்றி காருக்கு அழைத்து வந்தான். மீண்டும் கார் கிளம்பியது.

மயக்க கலக்கத்தில் கதிரவனைப் பற்று கொடியாய் சுற்றி தோளில் சாய்ந்து உறங்கி வந்தவள்... தூக்கம், மயக்கம் தெளிந்ததும்... துள்ளி அவனிடமிருந்து விலகினாள்,

## சீனாவில் 450 கோடி ஆண்டுக்கு முந்தைய அதிசய விண்கல்!

பூமியில் சில நேரங்களில் விண்வெளி கற்கள் விழுவது உண்டு. அவ்வாறு விழுந்த அதிசய விண்வெளி கல் ஒன்று சீன நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனா மற்றும் மங்கோலியாவை பிரிக்கும் அல்டாய் மலைப்பகுதியில் இந்த விண்வெளி



தென்றல்.

அதற்கு அடுத்ததான் தேனிலவுக்கு ஊட்டிக்கு கிளம்பவேண்டும் என்று பெரியவர்கள் வற்புறுத்த...

"பின்னால் பார்க்கலாம், யாமா!" என்ற கதிரின் மறுப்பை காதில் வாங்கிக் கொள்ளாமல் இருவரையும் அனுப்பி வைத்துவிட்டனர்.

''குழந்தை பத்திரம், அத்தை!'' என்ற தென்றலை இழுத்து செண்பகம் கன்னத்தில் முத்தமிட்டு ''அதெல்லாம் நாங்க பார்த்துக்குவோம்! நீ எங்க கதிரை பத்திரமா பார்த்துக்கோடிம்மா!'' என்று புன்னகைத்தாள்.

மறுநாள் அதிகாலை மூன்று மணிவாக்கில் ஊட்டி போய் சேர்ந்து... அறையெடுத்து ஒரு குட்டி தூக்கம் போட்டுவிட்டு... குளித்து எட்டு மணிவாக்கில் கிளம்பினர்.

முதலில் நீலகிரியின் மணிமகுடமான தொட்டபெட்டா சென்றனர். தொட்டபெட்டாவின் அழகிலும், கம்பீரத்திலும் தென்றல் மனதைப் பறிகொடுத்தாள்.

பிரஷ்ஷான கேரட்டும், அனலில் வாட்டிய முத்துச்சோளத்தையும் ஆசையாய் வாங்கி தென்றல் சாப்பிட... கதிரவன் அதை ரசிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அங்கங்கே நிற்க வைத்து போட்டோ பிடித்தான்.

மீண்டும் ஊட்டிக்கு கிளம்பினர்.

கல் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த விண்வெளி கல் 2.2 மீட்டர் நீளமும், 1.25 மீட்டர் அகலமும் கொண்டதாக உள்ளது. உலகிலேயே மிகப்பெரிய 3-வது விண்கல்லாக இந்த கல் உள்ளது. இந்த விண்வெளி கல் பூமியில் உள்ள கல்லை விட கடினமாக இருந்தது. அட்லாஸ் மலைப் பிராந்தியத்தில் 10 ஆயிரம் அடி உயரத்தில் இந்த விண்வெளி கல் இருந்தது.

இந்த விண்கல்லின் மேற்பரப்பு கறுப்பு, சிவப்பு என பல வண்ணங்களில் பிரதிபலித்தன. இந்த கல் இரும்பு சார்ந்ததாக இருக்கும் என பெய்ஜிங் விண்வெளி கல் ஆய்வு நிபுணர் ஹாங்போலின் தெரிவித்தார். சூரிய குடும்பம் உருவாகும் தருணத்தில் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்னர், விண்வெளி கிரகங்கள் சேதம் அடைந்தபோது இந்த கற்கள் உருவாகி இருக்கலாம் என்றும் சில நிபுணர்கள் கூறுகிறார்கள்.

வழிநெடுகிலும் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த தேவதாரு, பைன், யூகலிப்டஸ் மரத்தைக் கண்டு பிரமித்துப் போனாள், தென்றல்.

தேயிலைத் தோட்டத்தையும், காபி தோட்டத்தையும், ஆங்காங்கே கம்பீரமாய் முளைத்திருந்த பங்களாக்களையும் விழிவிரித்து தென்றல் நோக்கிக் கொண்டுவர...

"தென்றல்... இங்கே ஒரு பங்களாவோடு கூடிய தேயிலைத் தோட்டத்தை வாங்கலாம்னு நினைக்கிறேன்!"

"அட... எப்போதிருந்து இந்த எண்ணம்?" என்று தென்றல் ஆச்சரியத்துடன் கேட்க...

"பங்களாக்களை நீ ஆசையாசையா விழிவிரித்து பார்த்துட்டு வந்தபோது..." என்றான்.

"ஐய்யோ... அழகா இருக்கேன்னு பார்த்துட்டு வந்தேன்!"

"இன்னும் ஒரு வருடத்தில் உனக்கு இங்கே பங்களாவும், எஸ்டேட்டும் வாங்கித் தருவேன்!"

"நீங்க சாதிக்கலே தெரியுமா?" என்று அழகாய் சிரித்த தென்றலுக்காக... இந்த உலகையே வாங்கி... அவள் காலடியில் சமர்ப்பிக்க அவனுக்கு ஆசை வந்தது!

தாவரவியல் பூங்கா, ஏரியில் போட்டிங் என்று சுற்றி திரிந்து விட்டு அறைக்கு வந்தனர். உடைமாற்றிக் கொண்டு கட்டிலில் அவளெதிரே அமர்ந்த கதிரவன் சிறு வயது ஞாபகங்களை அவளிடம் பகிர்ந்து கொண்டான்.

"தென்றல்... நீ சிறுவயதிலேயே என்னை 'அங்கிள் அங்கிள்'ன்னு அழைச்சிட்டு சுற்றி வருவியே உனக்கு ஞாபகம் இருக்கா?"

"ம்..." என்று அவள் நாணினாள்.

"அப்போது சுவாதியை விட உன்னைத்தான் எனக்கு பிடிக்கும்!"

அந்த சொல்லில் தென்றலின் மனம் சந்தோஷமானது.

"கதிர்... எப்படி இந்த சின்ன வயதிலேயே இப்படி உச்சத்துக்கு வரமுடிஞ்சது! அதுக்கு விவசாயத்தையும், ஹோட்டல் தொழிலையும் எப்படி தேர்ந்தெடுத்தீங்க?"

"காரணம் அம்மாதான்..." என்று அத்தனையும் சொல்லி முடிக்க... அவள் அவனை பிரமிப்பாய் பார்த்தாள்.

"ஹோட்டல் பிஸினஸ்ல நான் வெற்றி கண்டபோதுதான்... சுவாதி இப்படி பண்ணிட்டு போயிட்டா. உடைஞ்சி போயிட்டேன், தென்றல்! சுக்கு நூறாய் உடைந்தவனை பேசிப் பேசியே மாமா எழுப்ப... விண்ணுக்கும், மண்ணுக்குமாய் உழைப்பை கொண்டு எழுந்துட்டேன், தென்றல். நான் முழுக்க கடுமையா உழைக்கும் போது... அவள் செய்த துரோகத்தை மறக்க முடிஞ்சது! கடுமையா உழைச்சேன்... உச்சிக்கு வந்தேன்!"

"உங்களை நினைச்சா பெருமையா இருக்குங்க, கதிர்!" என்று கண்கள் ஒளிர தென்றல் சொன்னாள்.

பின் இருவரும் முதுகு காட்டிக் கொண்டு ஒரே கட்டிலில் படுத்து உறங்கினர்.

இரண்டு நாட்கள் குன்னூர், கோத்தகிரி, அரவங்காடு, கூடலூர் என்று சுற்றி திரிந்தனர்.

"கதிர்... எனக்கு ரெயிலில் போகணும்னு ஆசையா இருக்கு! ரெயிலில் மலையிறங்கலாமே!" என்று சிறு குழந்தையாய் ஆசையோடும், ஆர்வத்தோடும் கெஞ்ச...

டிரைவரை ஏற்பாடு செய்து... காரை கொடுத்துவிட்டு... மலைரெயிலில் பயணப்பட்டனர்.

"காரை விட ரெயில் அற்புதம், இல்லையாங்க கதிர்! நாம போகும் போதும் ரெயிலில் ஊட்டிக்கு போயிருக்கணும்! மிஸ் பண்ணிட்டோம்!"

"இப்போதும் ஒன்னும் குறைஞ்சிடல தென்றல்! மேட்டுப்பாளையம் போய்... மீண்டும் இதே ரெயிலில் ஊட்டிக்கு போவோமே!" என்று கூறி அவள் சிரிக்க...

"வேணாம் கதிர்! குழந்தை நம்மை காணாமல் ஏங்கிட்டு இருப்பா! பார்க்க வேண்டிய பின்னர், கணக்கு வழக்குகள் அங்கே உங்களுக்காக மலைபோல குவிஞ்சிருக்கும்! அந்த கவலையெல்லாம் இல்லையா?"

"நான் சந்தோஷமா இருப்பதே... உன்னைக் கண்டபிறகுதான், தென்றலம்மா!" என்று அவன் கண்கள் கலங்க... அவளால் கண்கொண்டு காண முடியவில்லை!

"கதிர் உங்க பண்ணைக்கு என்னை எப்போ கூட்டிட்டு போவீங்க?"

"ஊருக்கு போனதும் கூட்டிட்டு போறேன்!"

"நான் மீண்டும் வேலைக்கு போகவா?"

"அந்த இடத்துக்கு வேற டீச்சரைப் போட சொல்லிட்டேன், தென்றல்! வீட்டை பொறுப்பா கவனிச்சிட்டு... குழந்தையை அன்பா பராமரிச்சிட்டு... என் கணக்கு வழக்குகளை சரிபார்த்துட்டு இருந்தாலே போதும், தென்றல்! தொழில் வளர வளர... என்னோட சுமையும் ஏறிட்டே போகுது! அந்த சுமையை கொஞ்சம் குறைத்தால் சந்தோஷப்படுவேன் தென்றல்!"

"உங்க விருப்பம் அதுன்னா செய்யறேங்க, கதிர்!"

வீடு வந்ததும் இதயா ஓடி வந்து அட்டையாய் ஒட்டிக் கொண்டாள்.

இரவும் அவள் புடவைத் தலைப்பை பிடித்துக் கொண்டு மாடியேற... பெரியவர்கள் தடுக்கவில்லை.

படுக்கையை விரித்து... அதில் இதயாவோடு படுத்துவிட்டாள், தென்றல். இருவரும் ஒருவரை ஒருவர் கட்டியணைத்து உறங்கினர்.

கட்டிலில் படுத்து அதையெல்லாம் கண்ணுற்ற கதிரவனுக்கோ... இதயா இருக்கும் இடத்தில் தான் இருந்தால் எவ்வளவு இனிக்கும்! என்று எண்ணமிட்டான்.

நான்கு நாட்கள் கழிந்து... தென்றலைப் பண்ணைக்கு அழைத்துச் சென்றான்.

இயற்கை அன்னையின் மடியில் நெல்லும், கரும்பும், கமுகும், சூரியகாந்தியும், திராட்சை கொடியும்... அழகாய்... காற்றின் தாளத்திற்கேற்ப... நின்ற இடத்திலேயே நடனமாடிக் கொண்டிருந்தன!

பண்ணையில் பணிபுரியும் ஆண்களும், பெண்களும் வந்து சூழ்ந்து கொண்டனர்.

"ஆஹா... சின்னம்மா எம்புட்டு அழகு! அட அட... அப்படியே மதுரை மீனாட்சியம்மன் போல இருக்கீங்களே!"

"ஐயாவோட முத சம்சாரம் முகத்துல கர்வம், நடையில அலட்சியம்னு இருப்பாங்க. ஆனால், உங்க முகத்துல சாந்தமும், நல்ல களையம்சமும் தாண்டவமாடுது. அமைதியான, அடக்கமான சின்னம்மா! சின்னய்யாவுக்கு பொண்ணாவே எங்க வாக்கப்பட்டு இருக்கீங்க! எங்க சின்னய்யாவை மனைவியோட பார்க்க ரொம்ப சந்தோஷமா இருக்கு!" என்று அந்த மூதாட்டி அருகில் வந்து, கன்னம் வழித்து, நெட்டி முறித்து சொல்ல... தென்றல் சட்டென்று காலில் விழுந்து வணங்க...

"ஐய்யோ சின்னம்மா... என்ன காரியம் செய்யறீங்க? நாங்கயெல்லாம் கூலிக்காரங்க! எங்க கால்ல நீங்க விழலாமா?" என்று அந்த மூதாட்டி தென்றலை அவசர அவசரமாய் தூக்கி நிறுத்தினாள்.

இதையெல்லாம் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கதிரவனுள்... தென்றல் உயர்ந்துக் கொண்டே போனாள்!

ஒவ்வொரு இடமாய் அழைத்துப் போய் காட்டிவிட்டு... கடைசியாய் பண்ணை வீட்டிற்கு வந்தனர்.

சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் எழுப்பி... நடுவில் சிறியதாய், அழகாய் வீடு கட்டியிருந்தனர். வீட்டைச் சுற்றி மலர் செடிகள் இருந்தது! நந்தவனத்திற்குள் நுழைந்த உணர்வு வந்தது, தென்றலுக்கு!

பண்ணை வீட்டிற்கு அருகிலேயே பெரிய மாட்டுக் கொட்டகை! நூற்றுக்கும் மேற்பட்ட கறவை பசுக்கள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அந்த மாடுகள் சுரக்கும் பால் அனைத்தும் அவன் ஓட்டலில் டீ, காபி, தயிர், மோர், ஐஸ்கிரீம் என்று தயாரிக்க பயன்பட்டது.

பொரிக்க, வறுக்க அங்கே விளையும் மணிலா, எள், சூரியகாந்தியிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டது.

கதிரவனுக்கு போன் வந்தது. பேசி முடித்தவனிடம் "போனில யாருங்க?" என்று தென்றல் கேட்க...

"நாமக்கல்ல இருந்து கோழியும், முட்டையும்... கொல்லிமலையில இருந்து ஆடுகளும் இறக்குமதி செய்யறோம், பிரியாணிக்காக! அந்த பிசினஸ் டீல் விஷயமா பேசினேன்!"

"நான் ஒண்ணு சொன்னா கேட்பீங்களா, கதிர்?" என்று தென்றல் தயக்கத்துடன் கேட்க...

"சொல்லும்மா, தென்றல்!" என்றான்.

"பாலுக்காக மாடு வளர்க்கும் நீங்க... இறைச்சிக்காக அந்த கோழிகளையும், ஆட்டையும் நம்ம பண்ணையில் வளர்க்கக் கூடாதா, கதிர்!"

"அட... நல்ல ஐடியா! எனக்கு தோன்றாமல் போச்சே, தென்றல்!" அவன் ஆச்சரியப்பட...

"கம்பி வேலி போட்டு கோழிகளையும், ஆட்டையும் இங்கேயே வளர்க்கலாம்! ஆட்டின் சாணம் மாட்டு சாணத்தைவிட நல்ல இயற்கை உரம்! கோழி எச்சமும் சிறந்த உரம்தான்! தெரியுமா?

அடுத்தது காளான் வளர்க்கலாம்! பெரிய குளம் வெட்டி ஒருபுறம் மீன் வளர்க்கலாம்! ஒரு பக்கம் கடுகு, சீரகம், வெந்தயம், ஏலம், இஞ்சி, மிளகுன்னு விதைச்சி அறுவடை செய்யலாம்! இதையெல்லாம் வெளிமார்க்கெட்டுல இருந்து எதுக்கு வாங்கணும்? ம்..."

"உன்னைப் போல ஒரு நல்ல மனைவி கிடைக்கத்தான்... என் வாழ்வின் முற்பகுதியில் அவ்வளவு சோதனைகளையும் துக்கங்களையும் இறைவன் எனக்கு கொடுத்தாரா, தென்றல்! உண்மையாகவே நான் பெரிய லக்கிமேன்தான். நீ எனக்கு கிடைச்ச மிகப்பெரிய வரம் தென்றல்!" என்று அவள் கைப்பற்றி கலங்கியவன்...

"ஏழு வருடத்திற்கு முன்பே நீ என் மனைவியாகியிருந்தால் என் வாழ்க்கை எவ்வளவு இன்ப தேனோடையா சலசலத்து போயிருக்குமே, தென்றல்! நான் கவிதாவால் அவமானப்படுத்தப்பட்டு, ரணப்படுத்தப்பட்டு... நீயும் சின்னாபின்னமாகி, காலம் கடந்து, கண்ணில் பட்டு..."

கதிரவனுக்கு துக்கத்தில் தொண்டை அடைக்க... முடிக்க முடியாமல் தடுமாறினான்.

கலங்கி நின்ற கதிரவனை இழுத்து அணைத்து ஆறுதல்படுத்த வேண்டும்போல மனமும்,கையும் பரபரத்தது!

சட்டென்று எழுந்த... அந்த எண்ணத்தாக்கத்தால் ஆச்சரியமானாள், தென்றல்!

## 15

அதன்பிறகு வந்த நாளில்... அவனோடு ஒவ்வொரு ரெண்டாரெண்டுக்கும் போனாள். சில மாற்றங்களைச் சொன்னாள்.

பங்களாவிலும் சிற்சில மாற்றங்களை செய்யச் சொல்ல... கலைநயத்துடன் பங்களா கண்களுக்கு விருந்து தந்தது!

கதிரவன் நாள் முழுக்க பண்ணைக்கும், ரெண்டாரெண்டுகளுக்கும் என அலைந்தாலும்... மதிய சாப்பாட்டிற்கு சரியாய் வீடு வந்துவிடுவான்.

ஒரு நாள்... தென்றல் பொறுக்க முடியாமல் கேட்டாள்.

"நீங்க ஒவ்வொரு இடமாய் வளைய வரும் இடம் ரெண்டாரெண்ட்தான்! அங்கே வகை வகையான உணவுகள் இருக்க... நான் செய்யற இந்த சாம்பார், ரசம், பொரியல்னு இந்த சாப்பாட்டை சாப்பிட இவ்வளவு தூரம் ஓடி வரீங்களே, கதிர்? ஏன்?"

"ஓட்டலில் எத்தனை வகை வகையான உணவுகள் இருந்தாலும்... உன் கையால் சமைச்ச சாப்பாட்டை சாப்பிடறப்போ கிடைக்கிற திருப்தியும், திம்மதியும் அங்கே கிடைக்குமா, தென்றல்!"

கதிரவன் சொல்லிவிட்டு... ஒரு ஆழ்ந்த பார்வையை அவள் மேல் வீச... அந்தப் பார்வை அவளுள் இனம்புரியாத, இன்னதென்று அறியமுடியாத செயலைச் செய்தது!

அன்று...

"மாமா... நான் இல்லத்து வழியாத்தான் போறேன்! குழந்தையை ஸ்கூல்ல கொண்டு போய் விட்டுடறேன்!" என்று சொல்லி இதயாவின் பையை கதிரவன் எடுத்துக் கொள்ள...

தென்றல் இதயாவை கட்டிப்பிடித்து, கன்னத்தில் முத்தமிட்டு கையாட்ட...

"மம்மி... என்னைப் போல டாடியையும் கட்டி முத்தமிடுங்க! டாடி பாவமில்லையா?" என்று இதயா கூற... கதிரவன், தென்றல் இருவரும் அதிர்ச்சியான பார்வை ஒன்றைப் பரிமாறிக் கொண்டனர்.

சோபாவில் அமர்ந்திருந்த விநாயகம், செண்பகம், மஞ்சுளா மூவரும் பார்த்துக் கொண்டிருக்க...

"மம்மி... டாடிக்கு முத்தம் கொடுங்க!" என்று குழந்தை மீண்டும் சிணுங்க...

"பெரியவங்களுக்கெல்லாம் முத்தம் கொடுக்கக் கூடாதும்மா!" என்று கதிரவன் சொல்ல...

"ம்கூம்... ம்கூம்... கொடுங்க மம்மி..." என்று இதயா அழ... செண்பகம் சொன்னார்.

"குழந்தை அழறாளே... அவளை ஏன் அழவிடறே? அவ ஆசைப்படி ஒரு முத்தம் கொடுத்திடேம்மா! யார் அவன்... உன் கணவன் தானே, தென்றல்?"

தென்றலின் பார்வை அச்சத்தில்

உறைந்தது. ஆனாலும் சமாளித்து அவர்களுக்கு சந்தேகம் வந்துவிடக் கூடாதென... கதிரவனின் அருகில் சென்றாள்.

அவன் முகம் பிடித்து முத்தமிட்டான்! அந்த முத்தத்தின் தித்திப்பில் சொக்கிப் போனான், கதிரவன்.

கதிரவன் குழந்தையோடு சென்றுவிட... தன்னறைக்கு போய் படுக்கையில் விழுந்த தென்றலுக்கு... உதடுகள் குறுகுறுத்தது. மீண்டும் அவன் முகம் பற்றி கன்னம், உதடு, நெற்றி என முத்தமிட மாட்டோமா என்று அவளுடைய மனதில் ஏக்கம் பிறந்தது!

அரைமணி நேரம் கழித்து... கதிரவனிடமிருந்து மன்னிப்பை வேண்டி போன் வர... தென்றல் பதிலேதும் சொல்லாமல் புன்னகைத்தாள், சத்தமில்லாமல்!

எதிர்முனையில் குரல் வராமல் போக...

"தென்றல்... லைன்ல இருக்கியா? என்மேல் கோபமா? உன்னை அப்படி ஒரு இக்கட்டில் தள்ளிவிட்டது நான் இல்லை என்பதை மட்டும் புரிஞ்சிக்கோ, தென்றல்!" என்று கூறி போனை ஆப் செய்தான்.

மதியம் சாப்பிட வந்தவன்... அவள் முகத்தை எதிட்டு பார்க்காமலேயே சாப்பிட்டுவிட்டு சென்று விட்டான்!

அவளுக்கும், அவன் முகத்தை பார்க்க வெட்கமாக இருந்தது!

அதன்பிறகு இருவரும் நார்மலுக்கு வந்த போது அந்தச் சம்பவம் நடந்தது.

தென்றல் குளித்துவிட்டு டவலைச் சுற்றிக் கொண்டு வந்து... பீரோவைத் திறந்து... எந்த சேலை அணிவது என்று பார்த்துக் கொண்டிருந்தபோது கதவு தட்டப்பட்டது.

செண்பகம்தான் ஏதோ அவசர செய்தியாய் வந்து கதவைத் தட்டுகிறாள் என்று நினைத்து... கதவைத் திறக்க... கதவைத் தள்ளிக் கொண்டு வந்தவன், கதிரவன்!

தென்றலை அந்தக் கோலத்தில் கண்டவனின் உள்ளே மின்சாரம் பாய்ந்தது. அவன் பார்வை அவளின் சந்தனமேனியில் ரசிப்புத்தன்மையுடன் சுவாரசியமாய் படிய...

தென்றல் அச்சமும், நாணமும் கலந்த உணர்வுடன்... முகமெல்லாம் குங்குமமாய் சிவக்க... மார்புக்கு குறுக்கே கையை வைத்து மறைத்துக் கொண்டு வேகமாய் பின்னுக்கு நகர... வேலைக்காரி தரையைத் துடைத்துவிட்டுப் போன ஈரம் விருந்தி

யிருக்க... அதில் கால் வழுக்கி வீழ, விழப் போனவளை... சட்டென்று வளைத்து நீண்ட கரத்தை நீட்டி அணைத்துக் கொண்டான்.

கதிரவனின் அணைப்பில் கட்டுண்ட தென்றல்... தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல்... நெகிழ்ந்து... அவன் மார்பில் முகம் புதைக்க... அவன் பிடி இன்னும் இறுகியது.

கதிரவன் அவள் வயிற்றில் ஆசையோடு முத்தமிட... அவன் முத்தத்திற்காக அவள் கன்னமும், உதடுகளும் ஏங்க... இறுக்கத்தோடு முகம் தூக்கி அவனை பார்வையால் அழைப்பு விடுக்க... அடுத்த விழுங்கி, அழைப்பு விடுக்க... அடுத்த நொடி கன்னத்தில் முத்தமிட்டவன்... இதழ்களில் முத்திரைப் பதிக்க... இந்த நிலை கொஞ்ச நேரம் நீடிக்க... முடிவில் தன்னை உணர்ந்த கதிர்... அவளை அணைத்திருந்த பிடியை விட்டுவிட்டு... "ஸாரி... ஸாரி... தென்றல்ம்மா..." என்று கூறிவிட்டு விறுவிறுவென போய்விட்டான்.

தென்றலும் கதிரவனைக் கொஞ்ச காலமாய் உயிராய் நேசிக்க ஆரம்பித்து விட்டாள். அந்த நேசத்தைச் சொல்ல முடியாமல் ஏதுவோ ஒன்றிருந்து தடுத்து அணைப் போட்டது! அது அச்சமா...? நாணமா? ஈகோவா...? எது என்று

## தென்கொரியாவின் அதிசய டிராம் வண்டி!

தென்கொரிய தலைநகர் சியோலில் 'சியோல் கிராண்ட் பார்க்' என்ற பொழுதுபோக்கு பூங்கா உள்ளது. இங்கு ராட்சத ராட்டினம், பூட்டல், நீச்சல்குளம் உள்பட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளன.

பூங்காவைச் சுற்றிப் பார்க்க டீசல் ரெயில் இயக்கப்பட்டு வந்தது. அதற்கு பதிலாக நவீன தொழில்நுட்பத்தில் மின்சார ரெயில் இயக்குவது குறித்து கொரிய அறிவியல் தொழில்நுட்ப கழகம் ஆய்வு நடத்தியது. மின்காந்த தூண்டுதல் முறையை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இந்த தொழில்நுட்பத்தில் இயக்கப்படுகின்ற வாகனங்கள் உருவாக்கும் பணி கடந்த ஆண்டு நிறைவடைந்தது. இதற்கு ஒன்லைன் எலெக்ட்ரிக் வெகிக்கிள் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த டிராம் வண்டிக்கு தண்டவாளம் தேவையில்லை. 3 பெட்டிகள் இணைக்கப்பட்ட இது கார்

அவளுக்கு இளம் காண முடியவில்லை.

நாட்கள் மெல்ல நகர்ந்தது.

ஒருநாள் தென்றலுக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்க... விஷயம் செய்தி சொன்னவுடன் பதறிக் கொண்டு வந்து விட்டான், கதிரவன்.

அது வெறும் சுரமாய் இல்லாமல்... விஷ சுரமாய் மாறி அவளை மருத்துவமனையிலேயே படுக்க வைத்துவிட... உடைந்து போனான், கதிரவன்.

எல்லா வேலைகளையும் தூக்கி போட்டுவிட்டு... அவளருகே தவம் கிடந்தான்.

நீர்காணாத அல்லிக் கொடியாய் வாடி, வதங்கி, அலலாய் கட்ட சுரத்துடன் தென்றலைக் காண காண கண்கள் பொங்கியது. கன்னத்தில் கண்ணீர் பிரவாகம் எடுத்து ஓடியது. அவள் முகத்தருகே



போலவே ஓடும். பூங்கா முழுவதும் டிராம் செல்லும் தடத்தில் அடையாளத்துக்காக நீல நிற கோடு போடப்பட்டிருக்கும். இந்த கோட்டுக்கு நேராக தரைக்கு கீழே சுமார் ஒரு அடி ஆழத்தில் மின்சார கம்பிகள் செல்லும். அந்த வழியாக செல்லும் போது மின்காந்த தூண்டுதல் விசையை பயன்படுத்தி மின்சாரத்தை வாகனம் நேரடியாக உறிஞ்சிக் கொள்ளும். இதன் மூலம் எஞ்ஜின் இயக்கப்படும்.

பாதாள மின்கம்பியானது உயர் அழுத்த மின்கம்பியுடன் இணைக்கப்பட்டிருக்கும். அதனால் மின்சாரம் எப்போதும் தடைபடாது. மின்காந்த தூண்டுதல் முறையில் மின்சாரம் உறிஞ்சப்படுவதால் மின் இழப்பு அவ்வளவாக இருக்காது. சொற்ப அளவே புகை வெளியாகும் என்பதால் சுற்றுச்சூழலுக்கு ஏற்றது.

கடந்த ஆண்டின் 'டாப் 50' கண்டுபிடிப்புகளில் இந்த டிராம் வண்டியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

குனிந்து கன்னம், நெற்றி, கழுத்து என்று தொட்டுப் பார்க்கும் போது... அவன் கண்களில் வழிந்த நீர்... அவள் முகத்தில் சில்லென்று தெறித்து சிதற... அந்தச் சில்லிப்பில்... அடுத்த நிமிடம் தென்றல் கண்விழித்தாள்.

கதிரவன்... அவள்மேல் கொண்ட காதலைக் கண்ணீரில் கண்டாள், தென்றல்.

இரவும், பகலும் தென்றலை விட்டு கதிரவன் நகரவேயில்லை!

மருத்துவமனையில் இருந்த இருபது நாளும்... அவள்பட்ட வேதனையைவிட... அவன்பட்ட வேதனைகளே அதிகம்! கவலையில் சரியாய் உண்ணாமல்... முள்ளாய் மண்டிய தாடியுடன்... முகம் வாடியத் தோற்றத்துடன்... கதிரவனைக் காண காண நேசம் நெஞ்சுக்குள்ளே ஊற்றாய் பெருகிற்று!

அவள் மாத்திரை, மருந்தை சிறுபிள்ளைக்கு புகட்டுவது போல புகட்டுவான். அவள் சாப்பிட மறுக்கும் சமயம்... அவனே தாயாய் மாறி... அவளுக்கு பிசைந்து ஊட்டி விடுவான்!

சுதாகர் என்ற சுதாவின் நினைவுகள் ஒரு புள்ளிகூட இல்லாமல் சுத்தமாய் அழிந்து விட்டது, அவள் மனப்பலகையிலிருந்து!

கதிரவனைப் பற்றிய நினைவுகளைத் தென்றலின் நெஞ்சம் இனிக்க இனிக்க அசைக்க ஆரம்பித்து விட்டது!

வீட்டிற்கு போய் உடல் தேறியதும்... மனதையும், உடலையும் ஒருசேர அவனுக்கு படைக்க விரும்பினாள்!

தென்றலின் விருப்பத்தில்... சுவாதியின் வரவு இடியாய் இறங்கியது!

## 16

முகமெல்லாம் வெந்து... நோய் பிடிக்கப்பட்டு... உடலிலுள்ள வலுவெல்லாம் வற்றி... எலும்பும் தோலுமாய் இருந்த சுவாதி... சுட்டெரித்த சூரியக்கதிருக்கு தாங்காமல் மயங்கி விழுந்தாள்!

அவள் மயங்கி விழுந்த இடம்... இதயா ஆதரவற்றோர் இல்லத்தின் முன்பு! கேட் வாட்ச்மேன் பதறி அவளைத் தூக்கி நீர் தெளிக்க... மயக்கம் தெளிந்தவளை மெல்ல

உள்ளே அழைத்து வந்தான்.

கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு வில்லிபுஷ்பம் அவனுஇல் வந்து...

"யாருய்மா நீ...?" என்று கேட்க...சுவாதி பதில் சொல்லாமல் அழுதாள்.

"நீ சொல்ல வேண்டாம்! உன்னைக் காணும்போதே யாருமில்லையென்று தெரிந்தது! அப்படித்தானே?"

சுவாதி 'ஆம்' என்று தலையசைத்தாள். அழுகை பொங்கியது.

அவளுக்கு உணவு கொடுத்து... பார்வதம், சுமலா, வேணி என்ற மூதாட்டிகள் இருந்த அறைக்கு அனுப்பி வைத்தார், வில்லிபுஷ்பம்.

அந்த அறையின் கட்டிலில் படுக்க... வீடு வந்து சேர்ந்த நிம்மதி அவளுள் ஏற்பட்டது!

சுனிலோடு முடிபை சென்றதும்... அவன் நண்பன் வாடகைக்கு பிடித்திருந்த வீட்டிற்கு சுவாதியை அழைத்துச் சென்றான்.

"சுனில்... என்னை உங்க வீட்டுக்கு அழைச்சிட்டுப் போகலையா?"

"எப்படி முடியும், சுவாதி? அண்ணா, அண்ணி, அம்மாவுக்கு என் காரியம் தீரணிக்குமா? நீ இங்கே தங்கு! நான் அவங்கக்கிட்ட பக்குவமா பேசி... உன்னை என் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறேன்!"

"சுனில்... என்னை ஏமாத்திட மாட்டீங்களே?"

"ஸ்டுபிட்... இந்த சுனில் ஏமாற்றுக்காரனா?" அவன் அழகாய் புன்னகைக்க...

"என்னைக் கல்யாணம் பண்ணிப்பீங்கதானே?"

"அப்புறம் எதுக்காக உன்னை அழைச்சிட்டு வந்திருக்கேன்? உன்னை கல்யாணம் பண்ணி, சந்தோஷமா வாழ வைக்கத்தானே! சுவாதியின் சந்தோஷம்... என் சந்தோஷம்!" என்று அணைத்துக் கொண்டான்.

பிறகு வந்த நாட்களில் தினம் தினம் சொர்க்கத்தைக் காட்டினான், சுனில்! சுவாதி கட்டிய கனவுகளையும் பெற்ற ஆசைகளையும் விட்டுவிட்டு வந்திருந்தாளே! என்ற சிறு குற்ற உணர்ச்சியில்லாமல் சந்தோஷமாய் இருந்தாள்.

பகலில் மட்டும்தான் வருவான். இரவு ஒரு நாளும் வந்ததில்லை. அவனுக்கு துணையாய் கணவன், மனைவியாய் வேலைக்காரர்கள் இருந்தனர்.

நாட்கள் நகர்ந்ததே தவிர... சுனில் கல்யாணப் பேச்சையே எடுக்கவில்லை.

"சுனில்... என்னை எப்போ கல்யாணம் பண்ணிப்பீங்க?"

"என்ன அவசரம், சுவாதி? பிசினஸ் கொஞ்சம் நல்லா போயிட்டு இருக்கு! இப்போ போய் கல்யாணப் பேச்செடுக்க முடியுமா? சொல்?"

சுனில் கேட்டதும்... சுவாதிக்கு சுள்ளென்று கோபம் வந்தது.

"உங்களோட இப்படி தாலிகட்டாமல் சேர்ந்து வாழறது முறையா, சுனில்?" என்று வேகமாக கேட்க...

"கட்டின புருஷனையும், குழந்தையையும் விட்டுட்டு... என்னோட ஓடிவந்தது மட்டும் முறையா?" என்று சுனில் பதிலுக்கு தன் கோபத்தை காட்ட...

"நீங்க என் செயலைச் சொல்லி... குத்திக் காட்டறீங்களா? உங்களை மறக்க முடியாமல்தானே, நீங்க அழைச்சதும் ஓடி வந்தேன்! அதை மறந்துட்டு பேசறீங்களே?" என்று அழவும்... சுனில் அவளை மடியில் இழுத்துப்போட்டு சமாதானப்படுத்தினான்.

"சுவாதி குட்டி... என்கிட்ட திருமணத்தைப் பற்றி வற்புறுத்தாதே! நேரம் வரும்போது அண்ணாகிட்டே கேட்கறேன்" அவன் கொஞ்சினான்.

அதன்பிறகு நாட்கள்தான் சென்றது... அவன் திருமணம் பற்றி வாயையே திறக்கவில்லை!

இரண்டு முறை அவன் மறுக்க மறுக்க அழைத்துச் சென்று கருக்கலைப்பு செய்தான்.

ஒருநாள் அவன் முகவரியை ஐ.டி. கார்டில் தெரிந்து கொண்டு... அங்கே போய் நின்று...

"சுனில் வர்மா..." என்று கேட்க...

கைக்குழந்தையுடன் நின்ற பெண் "சுனில் என் கணவர்தான்... நீங்க...?" என்று இழுக்க... சுவாதியின் காலடி நிலம் நழுவியது.

"நா... நான் அ... அவர் தோ... தோழி!" என்று அதிர்ச்சியுடன் கூறிவிட்டு வெளியேறினாள்.

அவளுள் ஆத்திரம் பொங்கியது.

குரோதத்தோடு நடந்தவளருகே... கார் வந்து நின்று... அவளை உள்ளிழுத்துப் போட்டு வேகமெடுத்து ஓடியது.

சுனில் என்று உணர்ந்து... அவன் கத்த வாயெடுத்த நேரம்... அவள் முகத்தருகே மயக்க மருந்தில் தோய்த்த கர்ச்சீப்பை

காட்ட... மயங்கி சரிந்தான், சுவாதி.

சுவாதி அவன் வீட்டை விட்டு வந்த கொஞ்ச நேரத்தில் கனிகா உள்ளே போக... அவன் மனைவி காஜல் "உங்களைத் தேடி தோழின்னு சொல்லிட்டு ஒரு பெண் வந்தாள்! பேரைக் கேட்க... பதில் சொல்லாமல் வெளியேறிட்டாள்!" என்று சுவாதியின் நிறம், முக அமைப்பு, உதட்டுக்கு கீழ் இருந்த அழகிய மச்சம் என வர்ணிக்க... அது சுவாதி என்று உணர்ந்தான்.

காஜல் கொடுத்த காபியை அருந்திவிட்டு... 'அவசரம்' என்று சொல்லி உடனே கிளம்பி வந்து... சுவாதியைக் காரில் அள்ளிப் போட்டுக் கொண்டான்.

சுவாதி மயக்கம் தெளிந்து படுக்கையில் எழுந்தமர்ந்தாள். கனிகாவைப் பார்த்து...

"பாவி... படுபாவி... நீ கல்யாணமானவனா? இப்படி என்னை ஏமாத்திட்டையே? நான் உனக்கு என்னடா துரோகம் செய்தேன்? ஏன் என் கண்ணில் பட்டே? உருகிஉருகி பேசி என்னை இப்படி இங்கே அழைச்சிட்டு வந்து... ஒரு வருஷமா ஏமாத்திவிருக்கையே! நானும் ஏமாந்து இருக்கேனே!"

அவன் சட்டையை கொத்தாய் பற்றி கேட்க...

"ஏய்... நீ மட்டும் யோக்கியமா? திமிருபிடி! ஆமா நான் கல்யாணமாகி ஒரு குழந்தைக்கு தகப்பன்தான்! அதுக்கு என்ன? நீ என்ன கன்னிப்பெண்ணா? நீயும் ஒருத்தனை மணந்து... ஒரு குழந்தையை பெத்து போட்டுட்டு வந்தவள்தானே?...

அங்கே படிப்பை முடிச்சிட்டு வந்ததும் அண்ணாவுக்கு திருமணம் நடந்தது. அதே வீட்டில இருந்த இன்னொரு பெண்ணை எனக்கு கொடுக்க விரும்பினாங்க! அழகாக இல்லைன்னாலும்... பெரும் சொத்தோடும், கம்பெனிகளோடும் காஜல் வர... சந்தோஷமாய் கட்டிட்டேன்!...

நீ தொந்தரவு செய்வியோன்னு போன்நெம்பரை மாற்றினேன்! மாமனார் வீட்டுக்கே ரெண்டு பேரும் குடிபோனோம்! அவள் கர்ப்பம், பிரசவம்னு வயித்தை தள்ளிட்டு நின்ன சமயம்... பிசினஸ் விஷயமாய் கன்னியாகுமரி வந்தேன்! கல்லூரிகால சுவாதியை விட அழகு கூடி, கவர்ச்சியாய் பொழுதியாய் நிகழ்ந்த நீ என் கண்ணில்பட்டே!

உன் குறையைச் சொல்லி அழுதே! அதைப் பயன்படுத்தி... உன்னை அனுபவிக்க ஆசை வந்துதான் என்னோடு கூட்டிட்டு வந்தேன்! ஆனந்தமா இருந்தேன்! உனக்கு இப்போ என்ன குறை வச்சேன்? தாலியில்லை என்பதைத் தவிர!"

"த்தூ...நீயெல்லாம் ஒரு மனுஷனா?" காறி அவன் முகத்தில் கொத்தாய் துப்பினாள்.

"இப்பவே போய் உன்னை பத்தி போலீசில புகார் கொடுத்து உன்னை ஜெயிலுக்கு அனுப்பறேன் பாருடா!" என்று எழுந்த சுவாதியின் கையைப் பிடித்து முறுக்கி...

"இது என் கோட்டைடி! இங்கே வேலைப்பார்க்கற ரெண்டு பேரும் பெரிய கிரிமினல்ஸ்! உன்னால் என் வேலியைத் தாண்டி போக முடியாது, இங்கேயே கிடந்து உயிரை விடுவதைத் தவிர!" என்று புலியாய் உறுமியவன்...

"நீ பொம்பளை... உனக்கு எவ்வடி போச்சு, அறிவு? காதலிக்கற காலத்துல என்னைத் தொடவே விடாதவள் தானே? அப்படிப்பட்டவள் கல்யாணமாகி, ஒரு குழந்தைக்கு தாயானவள்... காதலிச்சவன் கூப்பிட்டான்னு ஓடி வரலாமா? நான் ஆம்பளை... உன்னை அனுபவிக்க ஆயிரம் பொய் சொல்லுவேன்! நீ அதையெல்லாம் நம்பலாமா?" என்று கேட்டான்.

அன்றிலிருந்து சுவாதி சிறை வைக்கப்பட்டாள். நாளையிடை மோசமாக நடத்தப்பட்டாள். காலை, மதியம், இரவு என்று உணவு வைக்கப்பட்டத் தட்டு கதவு திறந்து உள்ளே தள்ளப்படும்!

நல்லவனை நிராகரித்து... பிஞ்சுக் குழந்தையைத் தவிக்க விட்டு விட்டு வந்ததுக்கு அவளுக்கு சரியான பாடம் கிடைத்து விட்டது!

அதன் பிறகு வந்த நாட்களில் அவன் கம்பெனியோடு ஒப்பந்தம் செய்துக் கொண்ட முதலாளிகளையும் கொண்டு வந்து நிறுத்தி... அவர்களைச் சந்தோஷப்படுத்தச் சொன்னான்.

மறுத்த அவளுக்கு கிடைத்தது... அடியும் உதையும்தான்!

தினம் தினம் சுவாதி கண்டவர்களால் வேட்டையாடப்பட்டாள்! அவளை வைத்து கனிகா நிறைய பணம் சம்பாதித்தான்!

சுவாதி கடும் காய்ச்சல் வந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட... அவளை பரிசோதித்த மருத்துவர் அவளுக்கு எய்ட்ஸ் நோய் இருப்பதாக அறிவிக்க... இடியாய் இறங்கிய செய்தியால் செத்தே விட்டாள்.

கனிகா அவளை மருத்துவமனையிலேயே விட்டுவிட்டு ஓடிவிட்டான். அவளுக்கும்

அந்த நோய் பிடித்திருக்கும் என்ற நிம்மதியில் சுவாதி புன்னகைத்தாள்.

அந்த மருத்துவரின் அருளை உள்ளத்தால் சுவாதி ஒரு அநாதை இல்லத்தில் சேர்க்கப்பட்டாள். அங்கு தற்கொலைக்கு முயற்சித்த போது முகம், கழுத்து, கை என்று வெந்து போனது.

கடைசியாய் கதிரவனையும், குழந்தையும், பெற்றவர்களையும் தூரத்தில் இருந்தாவது பார்த்துவிட்டு இறந்துபோக ஆசைவர இங்கு வந்து...மயங்கி விழுந்து... இல்லத்தில் சேர்க்கப்பட்டாள்.

ப ப ப

அன்று... கொஞ்சமாய் உடம்பு தேறிய தென்றல் கதிரவன் மறுக்க மறுக்க இல்லத்துக்கு வந்தாள்.

பர்வதம் அம்மாவைப் பார்க்க போனபோது-

"தென்றல்... தென்றல்..." என்று கைப்பற்றி சுவாதி அழ, அவளை தென்றலுக்கு நெடுநேரம் அடையாளம் தெரியாமல் போனது! அந்த அறையை விட்டு வெளியே வந்தார்கள்.

சுவாதி தன் கதையைக் கூறி கதறி விட்டாள்.

"சந்தனத்திலும், பன்னீரிலும் குளிக்க வேண்டியவள்... சாக்கடையில் விழுந்து சகதியைப் பூசிட்டேன், தென்றல்"

தென்றலின் உள்ளம்... அவள் கண்ணீரால் கரைந்தது.

"நீ வரவேண்டிய இடத்துக்குத்தான் வந்திருக்கே, சுவாதி! இதயா இல்லம் கதிரவனுடையது! இதயா வேறு யாருமில்ல, உன் குழந்தைதான்!" என்றவள் அவனுடைய தொழில், முன்னேற்றம், அந்தஸ்து, கவுரவம் பற்றிக் கூறினாள், தென்றல்.

"அவர்... அவர் மீண்டும் திருமணம் செய்துட்டாரா, தென்றல்! சந்தோஷமா இருக்காரா? அவரை மணந்துட்ட பாக்கியசாலி யார் தென்றல்?"

சுவாதி அழுகையோடும், ஆவலோடும் கேட்க...

"நான்... நான்தான் அவர் மனைவி சுவாதி!" என்று சொல்லவும்...

"தென்றல்... நீயா? நீயா அவர் மனைவி?"

"ம்..."

"சந்தோஷம், தென்றல்! ரொம்ப ரொம்ப சந்தோஷம், தென்றல்! அவங்களை நான் பார்க்கணும், தென்றல்! மிச்ச மீதி உயிரை எடுத்துட்டு வந்ததே அவங்களைப் பார்க்கணும்னுதான்!" சுவாதி விறிட்டழ...

"நான் கூட்டிட்டுப் போறேன்! நீ இனி இங்க இருக்க வேண்டாம்! நம்ம வீட்டுக்கு போகலாம் வா!" என்று சொன்னதும்...

"ஐய்யோ... நானா... நானா? ம்கூம்! வரமாட்டேன், தென்றல்! அந்த வீட்டுல காலெடுத்து வைக்க எனக்கெங்கே தகுதியும், உரிமையும் இருக்கு? உரிமையுள்ளவள் நீதான்! இதயாவின் தாய் நீதான்! அத்தானுக்கு மனைவின்னா அது நீதான்! சந்தோஷமா போயிட்டு இருக்க அவர் வாழ்க்கையில நான் கல்லெறிய விரும்பல! நான் அவங்க பார்வைக்கு ஓடிகவளாவே இருக்கட்டும்! நான் இப்படி சனியால் ஏமாற்றப்பட்டேன்... கொடுமைப்பட்டேன்னு தெரிய வேண்டாம்! எனக்கிருக்கும் நோய் பற்றியும் தெரிய வேண்டாம்! நான் கடைசி கட்டத்துல இருக்கேன்னு தெரிஞ்சால் அவராலும், அத்தையாலும், என்னைப் பெற்றவர்களாலும் தாங்க முடியாது" என்றவள் குலுங்கி குலுங்கி அழுதாள். "சத்தியம் பண்ணு, தென்றல்! நான் இங்கே இருக்கேன்னு சொல்ல மாட்டேன்னு!" என்றாள்.

"அவர் வருவார்! வில்விபுஷ்பம் உன்னைப் பற்றி தெரிவிப்பார்! கதிர்

# 10 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் மோட்டார் சைக்கிள்

ஆஸ்திரேலியாவின் நார்த் ரைடு பகுதியைச் சேர்ந்த என்ஜினீயர் கிரிஸ் மல்லாய் தரையில் இருந்து 10 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் புதுவகை மோட்டார் சைக்கிள் ஒன்றை தயாரித்து உள்ளார். ஒருவர் மட்டுமே உட்காரும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் முன், பின்



பக்கங்களில் மரத்தால் செய்யப்பட்ட 2 பெரிய இருக்கைகள் உள்ளன. மற்ற பகுதிகள் கார்பன் இழைகளால் உருவாக்கப்பட்டுள்ளன. 1170 சிசி திறன் கொண்ட 4 ஸ்டிரோக் என்ஜின் பொருத்தப்பட்டுள்ளது. எடை 110 கிலோ. மணிக்கு 270 கி.மீ. வேகத்தில் செல்லும். அவசர நிலையில் தரையிறங்க மோட்டார் சைக்கிளில் 2 பாராசூட்களும் பொருத்தப்பட்டுள்ளன.

ராணுவ மீட்பு நடவடிக்கைகள், வனவிலங்கு பூங்கா சுற்றுலா மற்றும் திரைப்படங்களில் பயன்படுத்தலாம் என்கிறார் மல்லாய். இதன் விலை ரூ. 20 லட்சம். விரைவில் விற்பனைக்கு வரும் என்றும் அறிவித்துள்ளார். என்ன எப்போது வரும் என்று ஏக்கமாக இருக்கிறதா?

பார்த்தாலே கண்டுபிடிச்சிடுவார்!"

"ம்கூம்... உன்னால் என்னைக் கண்டுபிடிக்க முடிஞ்சுதா? நான் சொன்ன பிறகுதானே சுவாதின்னு தெரிஞ்சிட்டே? என் பெயர் அமுதான்னு கொடுத்திருக்கேன்! அவரால் கண்டுபிடிக்கவே முடியாது! நீ சொல்லக் கூடாது, தென்றல்! சத்தியம் செய்" என்று சுவாதி அழுகையோடு கை நீட்ட... தாங்க முடியாத தென்றல் அவள் கைப்பற்றிக் கொண்டாள்.

"அவங்களை நான் எப்போ பார்க்கலாம், தென்றல்?" ஆசையோடு கேட்க...

"நாளைக்கு இதயாவுக்கு பிறந்தநாள்! ஸ்வீட் எடுத்துட்டு வருவோம்!"

வீட்டுக்குப் போன தென்றலால் இரவெல்லாம் உறங்கவே முடியவில்லை.

மறுநாள் அனைவரும் வந்தார்கள்.

அடுக்கு கவுனில் இதயா குட்டி தேவதையாய் ஜொலித்தாள்.

"தென்றல்... ஃபோட்டோல இருந்து ரொம்ப டல்லா இருக்கியேம்மா? ஏன்? உடம்புக்கு முடியலையா?" என்று கவலையுடன் அப்பொழுது கேட்க... தென்றலுக்கு கண்களில் கண்ணீர் கசிந்தது.

இல்லத்தில் வரிசையாய் வந்த அனைவருக்கும் இதயா ஸ்வீட் பாக்ஸை கொடுத்துக் கொண்டிருந்தாள். கதிரவன் ஒவ்வொரு பெட்டியாய் "அவளிடம்" கொடுக்க வழங்கிக் கொண்டிருந்தான், இதயா.

முக்காடிட்டு வரிசையில் நின்று சுவாதி அந்த கண்கள் கலங்க பார்த்துக் கொண்டிருந்தாள்!

தனது குழந்தைக்கு நிஜ தாயாய்

மாறிய தென்றலைக் காணக்காண அவளை அவமானம் பிடுங்கித் தின்றது!

அருகில் வந்த சுவாதியின் முகத்தைக் கண்ட குழந்தை "ஐய்யோ..." என்று அலறி கதிரவன் காலைக் கட்டிக் கொண்டது.

"இத்தனை கோரமா இருக்கே! குழந்தைப் பயப்படுதாளே... முகத்தை நல்லா மூடிட்டு வரக்கூடாதாம்மா?" என்று விநாயகம் சொல்ல...

"நல்லா இழுத்து மூடும்மா! மாப்பிள்ளை... முதல்ல அவ கையில ஸ்வீட்டைக் கொடுத்து அனுப்புங்க!" மஞ்சுளா சொல்ல...

சுவாதி சில்லு சில்லாய் உடைந்து விட்டாள்!

அவள் வாழ்க்கையை காப்பாற்றியவளுக்கு இனிப்பைக் கொடுத்து அனுப்பினான், கதிரவன்!

கண்ணீர் சரம் தொடுத்து நின்ற சுவாதியைக் காண முடியவில்லை, தென்றலுக்கு! திரும்பிக் கொண்டாள்!

கதிரவனிடமிருந்து ஸ்வீட் பாக்ஸைப் பெற்ற சுவாதி... வேகவேகமாக முடிவிட்டாள்.

எல்லாம் முடிந்து... அவர்கள் அலுவலக அறையில் வில்லிபுத்தூரிடம் பேசிக் கொண்டிருந்த போது... சுவாதியைத் தேடி தென்றல் வந்தாள்.

"தென்றல்... நான் மீண்டும் உன் வயிற்றில் அத்தானுக்கு மகளாக பொறக்கணும், தென்றல்!" என்று தென்றலைக் கட்டிக் கொண்டு கதறியழுதாள், சுவாதி!

# 17

அன்று இரவு ஓட்டல் அதிபர்களுக்கான தொழில் முறை கூட்டம் என்று சென்னைக்கு கிளம்பிக் கொண்டிருந்தான், கதிரவன்.

சென்னையில் நான்கு நாட்களுக்கு கருத்தரங்கு!

ஐந்தாம் நாள் சிறந்த ஓட்டல் தொழிலதிபரைத் தேர்ந்தெடுத்து விருது வழங்கும் விழா!

கதிரவனை எப்படி ஐந்து நாட்கள் பிரிந்திருப்பது என்று தென்றல் மருகினாள்!

இவ்வளவு நாட்கள் தென்றலை பிரிந்து செல்வது கதிரவனுக்கு முதல் முறை என்பதால் அவனும் மிகவும் கஷ்டப்பட்டான்.

மறுநாள் காலை வில்லிபுத்தூரிடம் இருந்து போன் வந்தது. தென்றலுக்கு

"அமுதா என்ற பெண் இறந்து விட்டாள்

என்று!

தென்றல் இல்லத்துக்கு ஓடினாள்.

நிரந்தர புன்னகையை உதடுகளில் தேக்கி உயிர் விட்டிருந்தார், சுவாதி!

"விடியற்காலையில் நெஞ்சுவலிக்குதுன்னு சொன்னா. டாக்டர் வரதுக்குள்ளே..." என்று பார்வதம் சொல்ல... தென்றல் தேம்பினாள்.

'எல்லோரையும் பார்த்த திருப்தியில் உன் இதயம் சுவாசத்தை நிறுத்திக் கொண்டதா சுவாதி!'

இல்லத்தில் சடங்கு நடந்து... சுவாதியை மின்மயானத்திற்கு கொண்டு செல்லப்பட... தென்றல் வீட்டிற்கு வந்தாள்.

மூவரையும் கண்டதும் அழுகை பீறிட்டது! குழந்தையைக் கட்டிக் கொண்டு கதறினாள், தென்றல்.

"நான் வந்தால் எல்லோருமே போய்த்தான் சேரணும்! அவங்க முன்னாடி போனால்... நாம பின்னாடிப் போகப் போறோம்! போய் குளி தென்றல்! இல்லத்துல யார் இறந்தாலும் அவங்க நம்ம குடும்பத்துல ஒருத்தர்னு நினைச்சி தண்ணி ஊத்திக்குவோம்! விநாயகம், மஞ்சுளா... போய் நீங்களும் குளிங்க!"

செண்பகம் தம்பி, தம்பி மனைவியைப் பார்த்து சொல்லிவிட்டு... குளியலறை நோக்கி நடந்தாள்.

தென்றல் கதிரவனுக்கு போன் செய்தாள்.

"கருத்தரங்கு முடிஞ்சிட்டதா? தலைக்கு தண்ணி ஊற்றி குளிச்சிட்டீங்களா? அத்தை உங்களுக்கு செய்தி சொன்னாங்களா?"

"அதெல்லாம் குளிச்சிட்டேன், தென்றல்! நீ இப்போதான் வந்தியா! காய்ச்சல் வந்து படுத்து எழுந்தவள், நீ! தலைக்கு நீர் ஊற்றியதும்... நல்லா தலையைத் துவட்டு! சாம்பிராணி புகைப் போடச் சொல்லி அம்மாவுக்கு போன் செய்யறேன்! உடம்பை பத்திரமா பார்த்துக்கம்மா, தென்றல்!" என்று அக்கறையோடும், அன்போடும் பேசிய கணவனை உடனே காண வேண்டும் போல இருந்தது.

ஒரு நாள்... இரண்டு நாள்... மூன்று நாள் என்று தாக்குப்பிடித்தாள், தென்றல்! சுவாதியின் மறைவு, கதிரவனின் பிரிவு அவளை வாட்டி வதைத்தது!

நான்காம் நாள் கருத்தரங்கம் முடியும் நேரம் 'சிறந்த ஓட்டல் தொழிலதிபர் கதிரவன்' என்று மைக்கில் கூற அரங்கமே கைதட்டலால் அதிர்ந்தது.

கருத்தரங்கு முடிந்து வெளியே வந்தவன் தென்றலுக்கு போன் செய்யலாம் என்று செல்லைக் கையிலெடுக்க... அந்த நேரம் தென்றலே போன் செய்தாள்.

"கதிர்... கதிர்... என்னால முடியலே! கதிர்... காணாமல் இருக்கவே முடியலே! கதிர்... உங்களைப் பிரிந்து என்னால இருக்க முடியலே! நீங்க புறப்பட்டு வாங்க கதிர்... ப்ளீஸ் கதிர்..." என்று தென்றல் அழுகையில் வெடிக்க...

"தென்றலம்மா... நாளை ஒருநாள் மட்டும்... எனக்கு பரிசு..."

அவன் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், "ம்கூம்... மாட்டேன்... நீங்க வரணும்! நெஞ்சு வெடிக்குது, கதிர்! ப்ளீஸ்... ப்ளீஸ்" என்று அவள் உதடு பிதுக்கி அழ கதிரவனால் தாங்க முடியவில்லை!

"வரேன் தென்றல்! என் பி.ஏ.வை இங்கே விட்டுட்டு வரேன்டா!" என்று கதிரவன் காதலில் கசிந்துருகினான்!

உடனே பிளைட் பிடித்து... மதுரை வந்து... மதுரையில் இருந்து கன்னியாகுமரிக்கு காரில் வந்து சேர்ந்தான்.

நள்ளிரவு! காலிங் பெல் சப்தம் கேட்க... கதவு திறந்த செண்பகம் கதிரவனை ஆச்சரியத்தோடு நோக்கினாள்.

அவன் மாடிப்படி ஏறி ஓடினான். நாற்காலியில் அமர்ந்து... கைகளால் முகத்தைத் தாங்கிக் கொண்டிருந்த தென்றல்... கதிரவனைக் கண்டதும் "கதிர்..." என்று ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

"என்னால உங்களைப் பிரிந்து இருக்க முடியல, கதிர்! என்னைவிட்டு எங்கேயும் போகாதீங்க, கதிர்! என்னால தாங்க முடியலே, கதிர்!" என்று மேலும் அணைப்பை பலமாக்கி... அவன் மார்பில் சாய... அவன் அப்படியே அவளை அணைக்காமல் ஆச்சரியத்தோடு நின்றிருக்க...

"ஐ லவ் யூ கதிர்! என் மனசு, உடம்பு இரண்டையும் உங்களுக்கு காணிக்கையாக்க காத்திருக்கேன், கதிர்!" என்றாள்.

கதிரவன் விழிகளை விரித்து நோக்கிக் கொண்டிருக்க...

"இதயாவுக்கு தம்பி பாப்பா வேண்டுமாம்! பெத்து கொடுத்துடலாமா, கதிர்! ஏய் மட்டி... மடையா... ராட்சசா... நான் இவ்வளவு சொல்றேன்... அப்படியே நின்னா என்ன அர்த்தம்!"

தென்றல் கண்கள் படபடக்க... அழகாய் தலைசாய்த்து கேட்க...

அவள்மேல் காதல் வைத்து காத்திருந்த கதிரவன், "தென்றல்... பேசறது நீதானா! ஏய் கள்ளி..." என்றழைத்து... அப்படியே அவளைத் தூக்கி, தட்டாமாலை சுற்றி... மஞ்சத்தை நோக்கி நடந்தான்.

(முற்றும்)

# மூச்சு

"இனி பிரயோஜனம் இல்லை. வீட்டுக்கு எடுத்துப் போயிடுங்க..."

டாக்டர் சொன்னதைக் கேட்டு மகாதேவன் அழுதார். வாய் கோணி, கையும் காலும் இழுத்தபடி... ஜீவன் மட்டும் இழுத்துக் கொண்டிருக்கும் தன் நடைப்பிண மனைவி சாரதாவைப் பார்க்கிறார்.

கண்கள் வெறித்து எங்கோ நிலைத்துப்

—விமலா ரமணி



பார்த்தபடி இருக்கின்றன. கண்களில் தாரை, தாரையாக நீர், கையை அசைக்க முடியாமல் இடத்தை விட்டு நகர முடியாமல்...

அடிப்பாவி! இந்தக் கைகளால் அந்த ஆண்டவனுக்கு எத்தனை அர்ச்சனை பூக்களை அள்ளிச் சொரிந்திருப்பாய்!

அடைத்துப் போன இந்த வாயால் எத்தனை ஸ்லோகங்களை இனிமையாகப் பாடியிருப்பாய்!

'சவுந்தர்ய லஹரி'யை அட்சர சுத்தமாக ராகமாலிகையாகப் பாடுவாளே சாரதா!

இன்று உனக்கா இந்த கதி!

"என்னா, சிட்டாள்டு ஆசி அம்மாதானே உட்கார்ந்திருக்கேள்!"

"அதுக்கென்ன இப்போ... உனக்குக் கூடமாட சமையல்ல உதவணுமா?"

"போறுமே... காலேஜுல செகண்ட் லாங்க்வேஜ் சமஸ்கிருதம்னு பெருமையா சொல்லிப்பேனே! ரகுவம்சம் எல்லாம் படிச்சதா சொல்லுவேளே?"

"அப்போ ரகுவம்சம்... இப்போ மகாதேவ வம்சம் தான் வந்தாச்சே!"

"உம்... மறந்துபோன சமஸ்கிருதத்தை ஞாபகப்படுத்திக்கோங்க... ராமாயணம் பாராயணம் பண்ணுங்கோ... சுந்தரகாண்டப் பாராயணம் பண்ணுங்கோ. குடும்பத்துக்கு க்ஷேமம். அந்த வாயு புத்ரன் நம் புத்ரனை ரட்சிப்பார்!"

"இதோ பார் சாரதா... விரதம், நோன்பு, அனுஷ்டானம் எல்லாம் நீ ஒருத்தி செய்யறது போறாதா! மாதா செஞ்சது மக்களுக்குத்தானே? நீ என் க்ஷேமத்துக்காகவும் உன் தாலி பாக்யத்துக்காகவும் சோம வார விரதம் இருக்கே. திங்கட்கிழமை தோறும் எலக்கு புட்டு டிபன் கிடைக்கிறது. ஞாயிற்றுக்கிழமை தவறாம சூர்யநமஸ்காரம். அடடா... அந்தக் காலை நேரத்தில் நீ காபியோட வெண்பொங்கலையும் தருவே பார்... ரொம்ப ருசி..."

"நான் விரதம் இருக்கறது உங்களுக்குக் கிண்டலாப் போச்சா!"

"ஆமாம் போ... வாரத்தில் ஏழுநாள் விரதம்! ஞாயிறு சூர்யநமஸ்காரம், திங்கள் சோமவார விரதம். எனக்குச் செவ்வாய் திசை நடக்கறதால மங்கள வார விரதம் ராகு கால பூஜை. புதன்கிழமை விஷ்ணுவுக்கு. எனக்கு அஷ்டமத்துக்குரு... அதனால் குருவார விரதம். வெள்ளிக்கிழமை அம்பாள் பூஜை. சஹஸ்ரநாமாவளி... அப்புறம் சனிக்கிழமை சொல்லவே வேண்டாம்... நவக்கிரக ஆராதனை! நைவேத்தியம்,

## புரட்டாசி பிரார்த்தனை

மதுரை திருமங்கலம் அருகே உள்ள வாரான் கீழ் உரப்பனூரில் உள்ள 300 ஆண்டு பழமையான வடக்குவாச்சி செல்லியம்மன் கோவிலில் மீனாட்சியும் சொக்கரும் அருள்பாலிக்கின்றனர். இங்கு புரட்டாசி மாதம் வினோதமான ஒரு வேண்டுதல் நிறைவேற்றப்படுகிறது.

பக்தர்கள் அருகிலுள்ள வயல்களுக்குச் சென்று சகதியில் விழுந்து தங்கள் உடலில் சேற்றை பூசிக் கொள்கின்றனர். பிறகு அனைவரும் வீதியில் ஆடிப் பாடியபடி ஊர்வலமாக கோவிலுக்கு வந்து வழிபடுகின்றனர். இதனால் வயல்களில் விளைச்சல் அதிகரிக்கும் என்பது நம்பிக்கை. மேலும் இங்கு ஆண்கள் பெண் வேடமிட்டு நேர்த்திக்கடன் செய்யும் வழக்கமும் உண்டு.

– ஆர். சாந்தா, சென்னை.

கோவில், குளம் வேண்டுதல்... வாரத்திலே இன்னும் ரெண்டு நாள் கூட இருந்தாலும் உனக்கு புரோக்ராம் போடத் தெரியும்! பிள்ளையாருக்கு வாழைப்பழ மாலை. ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை, வடைமாலை... ஆஞ்சநேயர் வால் முழுக்கப் பொட்டு..."

இப்படி இவர் கிண்டலடித்தாலும் மனைவியின் சொல்லைத் தட்டாமல் சுந்தரகாண்ட பாராயணம் பண்ணுவார்.

'மங்களம் கோசலேந்த்ராய மஹநீய குணாப்தயே' என்று இவர் பாராயணம் முடிக்கும் சமயம் கேட்டவுடன் நைவேத்தியத்துக்கு பாலுடன் வருவாள் சாரதா. பால் இல்லை பழங்கள் என்று ஏதோ ஒன்று.

சுந்தரகாண்ட ராமாயணப் பாராயணம் முடிக்கும் நாளில் ஒரு சின்ன ராமபட்டாபிஷேகமே நடத்தி விடுவாள். பட்டாபிஷேக சர்க்கம் வாசிக்கச் சொல்லி, பருப்புத் தேங்காய் பிடித்து ரவிக்கைத் துணி வைத்து...

'ராமா கல்யாண வைபோகமே' – என்று சம்பிரதாயக் கீர்த்தனை பாடி ஆரத்தி எடுத்து நீர்மோர், பானகம் என்று விநியோகித்து... முடிந்தால் இவரை அழைத்துச் சாப்பாடு போட்டு, ரவிக்கைத் துணி வைத்துக் கொடுத்து... எதிலும் குறை கூடாது சாரதாவுக்கு.

"அம்மாதானே இருக்கிறீர்கள்... ஆதரம் சுற்றுக் கொள்ளுங்கள். அம்மா தானே இருக்கிறீர்கள்... சமயம் சுற்றுக் கொள்ளுங்கள்

"உம்... ரொம்ப வேண்டியதுதானே?"

"ஆம்புலன்ஸ் தயாரா இருக்கு. மிஸ்டர் மகாதேவன், உங்களுக்கு... பையன் பொண்ணு..."

மகாதேவன் சிரித்தார்.

"உம்... இருக்கான். ஒரே பையன். சதீஷ். ஒரு மராட்டியக்காரியை கல்யாணம் பண்ணிட்டு மும்பையிலே தன் வேட்டகத்தோட வசதியா இருக்கான். கம்ப்யூட்டர் என்ஜினீயர்..."

"அவனுக்குச் சொல்லி அனுப்பிடுங்கோ... நான் நினைக்கிறேன்... அவங்க மனசுக்குள் ஏதோ ஒண்ணு இருக்கு... அதைச் சொல்ல முடியாமத் தவிக்கிறாங்க. ஒருவேளை மகனைப் பார்க்கணும்னு ஆசைப்படறாங்களோ என்னவோ?" என்றார் டாக்டர்.

இன்னும் நன்றாக நினைவு இருக்கிறது. இவரின் மகன் சதீஷ் ஒருத்தியைக் காதல் திருமணம் செய்து கொண்டுவிட்டதாக தொலைபேசி வழியாக அறிவித்தபோது மகாதேவன் கொதித்துப் போனார்.

"ராஸ்கல்... இத்தனை கஷ்டப்பட்டு கடன் உடன் வாங்கி இவனை அமெரிக்காவுக்கு அனுப்பி எம்.எஸ். படிக்க வெச்சதுக்கு என் மூஞ்சியிலே கரி பூசியிருக்கான். காதலியாம்... ஒண்ணா அமெரிக்காவிலே படிச்சாங்களாம்! கல்யாணம் பண்ணிட்டாங்களாம்! நீ ஒரு பைத்தியம்டி! பையன் படிப்புக்கு விரதம் இருந்தே... அவன் பாஸ் ஆகணும்னு

சும்மாதானே இருக்கிறீர்கள்... வேதம் கற்றுக் கொள்ளுங்கள்" என்று பிரம்பெடுக்காத குறையாக சர்வாதிகாரி மாதிரி இவரை விரட்டி விரட்டி வித்தைகள் கற்றுக் கொள்ளச் செய்தவள் இவள்தான்!

இவருக்கு இப்போது சும்மா இருக்கவே நேரம் இருப்பதில்லை!

ஆனால், அவளோ இன்று... பேச முடியாமல் கையை அசைக்க முடியாதபடி படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள்!

இவருக்கு 'பக்தி'யின் மீதே கோபம் வந்தது.

கடந்த நாலைந்து ஆண்டுகளாகவே இவள் கொஞ்சம் கொஞ்சமாக படுக்கையில் விழ ஆரம்பித்தாள்.

முதலில் கால்வலி என்றாள். மூட்டுவலி என்றாள்... மருந்துகள், மாத்திரைகள், ஆயுர்வேத எண்ணெய்கள் என்று வைத்தியம் ஆரம்பமானது.

'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்ததில் எலும்புகள் தேய்ந்து விட்டன என்றார்கள். எண்ணெய்க் குளியல், மருந்து தடவல் என்று கை வைத்தியமாகச் செய்து கொண்டாள். உட்கார முடியவில்லை. அதனால் நின்றபடியே பூஜை செய்தாள். குச்சி வைத்து நடமாடினாள். அதன்பிறகு மெள்ள மெள்ள படுக்கையில் சாய்ந்தாள்... சரிந்தாள்.

"என்ன சார்... இன்னும் கிளம்பலியா?" டாக்டரின் குரல் மகாதேவனின் சிந்தனைகளைக் கலைத்தது.

## முப்பெருந்தேவியர்!

விழுப்புரம் [illegible] சரஸ்வதி, லட்சுமி, பார்வதி ஆகியோரின் படங்களை ஒரே பிரேம் செய்து வைத்திருப்பதை காண முடியும். ஆனால் இவர்களை ஒரே சந்நிதியில் [illegible] அருகில் [illegible] செல்ல வேண்டும். அந்த [illegible] பார்வதி தேவி நடுவிலும், இரண்டு பக்கத்திலும் [illegible] சரஸ்வதியும் [illegible] லட்சுமியும் காட்சி தருகிறார்கள். மூன்று சிலைகளுமே [illegible]



மண்ணால் அமைந்துள்ளன.

இந்த சிலைகளுக்கு அபிஷேகம் கிடையாது. தைலக்காப்பு மட்டுமே சாத்தப்படுகிறது. தவக்கோலத்தில் இருக்கும் பார்வதிக்கு பாதுகாவலாக சரஸ்வதியும், லட்சுமியும் இருப்பதாக கருதப்படுகிறது. மூன்று தேவியருக்கும் [illegible] சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அம்மனின் மீது கார்த்திகை மாதம் பவுர்ணமி அன்று மட்டும் நிலா ஒளி படும். எனவே அம்மனுக்கு 'பிறை சூடிய அம்மாள்' [illegible]

பட்டினி இருந்தே... இப்போ என்ன பண்ணப் போறே? உன் பக்தியும் பூஜையும்..."

"சும்மா இருங்கோ... அவன் எங்கிருந்தாலும் நம்ம குழந்தை. அவன் சவுக்கியமா இருக்கணும்... அதான் நமக்கு வேணும்..." என்றாள் சாரதா.

"உம்... வேணும்... வேணும்... உனக்கு இதுவும் வேணும்... இன்னமும் வேணும்..."

"உங்களுக்குத் தெரியுமா? அன்னிக்கு ஒரு பிரசங்கத்திலே கேட்டேன்... பகவான் அத்தனை பேரையும் ஒரே மாதிரிப் படைக்கறதில்லை. ஒருத்தன் ஏழை, ஒருத்தன் பணக்காரன். ஒருத்தன் குட்டை, ஒருத்தன் நெட்டை. ஒருத்தன் கறுப்பு, ஒருத்தன் வெளுப்பு... ஆனா அத்தனை பேருக்கும் மூச்சுக்காத்தை மட்டும் ஒரே மாதிரிப் படைச்சிருக்கிறான். இந்த மூச்சுக் காத்து நம்மகிட்ட சொல்லிக்காமலே வருது... சொல்லிக்காமலேயே வெளியே போறது... இந்த மூச்சை நம்ம இஷ்டப்படி விட முடியாது... நம்ம இஷ்டப்படி திரும்ப அடைய முடியாது... இதுதான் ஆண்டவன் தத்துவம். இதைப் புரிஞ்சிகிட்டா கோபம் வராது... எரிச்சல் வராது..."

அன்று சாரதா சொன்னது எத்தனை நிஜம்!

இன்று அவள் மூச்சிரைக்கப் படுத்திருக்கிறாள்... மூச்சை இழுப்பதும், வெளியிடுவதும் கூட ஒரு மரண அவஸ்தையாக. இவள் மனத்துள் கோபம் இல்லை... சோகம் இல்லை... சொந்த மகனை விட்டுப் பிரிந்த தாபம் இல்லை. வழிமாறிப் போகிற மூச்சை நம்பி எத்தனை எத்தனை கற்பனைகள்.

சாரதாவை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார் மகாதேவன். கையோடு மகனுக்கும் தகவல் தந்து விட்டார்.

சதீஷ் எப்போது வேண்டுமானாலும் ப்ளைட்டில் வரலாம். மகாதேவன் வாசல்கதவு திறந்து வைத்துக் காத்திருந்தார்.

"ஐயா... ஐயா..."

குரல் கேட்டது...

யாரது? வாசலுக்கு விரைந்தார்.

ஓ! இவர்கள் கிராமத்து மாரியம்மன் கோவில் பூசாரி... வருடம் தோறும் அக்னி நட்சத்திரத்தில் அந்த மாரியம்மனுக்கு அபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்வான் சாரதா. முதலில் இருவருமாக போய்க் கொண்டிருந்தார்கள். அதன்பிறகு சாரதாவுக்கு உடல் நலமில்லாமல் போனபோது இவர் பணம் மட்டும் அனுப்பி வைப்பார்.

"அடடே... மாரியா? வா... எப்படி இருக்கே?" என்றார் மகாதேவன்.

"நல்லா இருக்கேன் ஐயா... அம்மாவுக்கு உடம்புக்கு எப்படி இருக்கு? இந்த ஊருக்கு வந்தேன். என் மகனுக்கு இங்கே வேலை கிடைச்சிருக்கு. அதான் ஐயாவைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்..."

மாரியை உள்ளே அழைத்து வந்தார் மகாதேவன்.

சாரதா கிடந்த நிலை பார்த்து மாரி கதறி விட்டான்.

## இசை மருத்துவம்

நரம்பு மண்டலத்தைச் சீராக்குவதில் இசையின் மருத்துவ குணம் மகத்தானது. [illegible] உணர்வுகளையும் தூண்டவும், அதே நேரத்தில் அடக்கவும் அதற்குரிய இசை உண்டு.



நரம்பு சம்பந்தமான கோளாறுகள், நரம்புத் தளர்ச்சி, சோகமான நிகழ்வால் ஏற்பட்ட அதிர்ச்சி இவற்றைப் போக்கடிக்க இதற்கான இசையை ரசித்துக் கேட்டால் பலன் தெரியும்.

ஹிஸ்டீரியா நோயின் அறிகுறிகள் தோன்றினால், நரம்புக் கருவிகளின் இன்னிசையை அடிக்கடி கேட்பது நல்லது. நரம்பு இசை ஹிஸ்டீரியாவை விரட்டும்.

கடுமையான தலைவலி அது [illegible] கொடிய தலைவலியானாலும் ஒரு நாள் மட்டும் (சோலோ) வயலின் இசையைத் தொடர்ந்து கேட்டால் தலைவலி போயே போச்சு. [illegible] இசையைக் கேட்பது [illegible] மருந்தில்லா அருமை சிகிச்சை [illegible] நடக்கிறது.

உடலுக்கும் மனதிற்கும் வரும் எந்த நோயையும் குணப்படுத்தும் ஆற்றல் இசைக்கு மட்டுமே உண்டு. எந்த நோயானாலும் இசையில் கலந்து மறந்துவிட வேண்டும். உடலில் இசை பரவும் போது நோய் ஓடி விடும்.

-[illegible]

"அம்மா... உங்களுக்காம்மா இந்த கதி! என்னம்மா இப்படி ஆயிட்டீங்க?"

சாரதா கண் விழித்தாள். அவள் கண்களில் ஓர் ஒளி! பிரகாசம்.

இதுவொன்று மாரி நினைவுக்கு வந்தவனைப் போல கத்தினான்.

"அம்மா... அன்னிக்கே நான் சொன்னதைக் கேட்டிருந்தீங்கன்னா இப்படி ஆகி இருக்குமாம்மா! அநியாயமா உங்களை நீங்களே காவு கொடுத்திட்டீங்களே?"

மகாதேவன் திடுக்கிட்டார்.

என்ன சொல்கிறான் இவன்?

மாரி விவரித்தான். "ஆமாங்க ஐயா... அந்த வருஷம் நீங்க வரலை. அம்மா மட்டும்தான் வந்திருந்தாங்க... நம்ம சின்ன ஐயாவுக்கு உடம்பு சரியில்லன்னு மும்பையிலே இருந்து தகவல் வந்தது. அம்மா சொன்னாங்க... 'நம்ம கிராமத்து தேவதை சக்திவாய்ந்த அம்மன். உயிருக்கு உயிர் பலி கொடுத்தா சின்ன ஐயா பொழைச்சுப்பார் அம்மா. ஒரு கிடா வாங்கி வெட்டுங்க... இல்லே ஒரு சேவலை காவு கொடுங்க... சின்ன ஐயா பொழைச்சிடுவார் தாயின்னேன்...

'மாரி... நான் வணங்கற தெய்வம் தாய். அவள் கருணை வடிவானவள். அவ ரத்தக் காட்டேரி இல்லை. ஒரு உயிரைக் காப்பாத்த இன்னொரு உயிரைப் பலி தந்து எனக்கு சரிப்பட்டு வரலை... தீவ இதுக்கு பாவம்... ஒரு வேளை உன் அம்மனுக்கு உயிர் வேணும்னா என் உயிரை எடுத்துக்கட்டும்... என் மகனை காப்பாத்தட்டும்'னு அம்மா சொன்னாங்க.

'அப்படி சொல்லாதீங்கம்மா... தெய்வ சந்நிதியில சொல்ற வாக்கு சத்தியமாயிடும்'னு அலறினேன்.

அன்னிக்கு இதைச் சொல்லிட்டுப் போனவங்கதான் ஐயா... அடுத்த வருஷம் அம்மா வரவேயில்லை... இப்போ... இப்படி... ஆனா அம்மாவை நான் இந்தக் கோலத்துல பாப்பேன்னு நினைக்கலீங்க ஐயா..."

மாரி இரைந்து கத்தினான்.

மகாதேவனின் தேகம் நடுங்கியது. ஒரு பயம்... ரொம்ப நாட்களாக இவரை

## பூனைகளால் வரும் மூளைப் புற்றுநோய்!



சில வீடுகளில் செல்லப் பிராணியாக பூனை வளர்க்கப்படுகிறது. வெளிநாடுகளில் பூனைகளை செல்லப்பிராணியாக வளர்ப்பதை ஒரு வழக்கமாகவே கொண்டிருக்கிறார்கள். இப்படி பூனைகளை வளர்ப்பதால் முக்கிய ஆபத்து வரும் என்று சமீபத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பூனையின் வயிற்றில் வளரும் ஓர் ஒட்டுண்ணியானது மனிதர்களுக்கு மூளைப் புற்றுநோயை ஏற்படுத்துகிறதாம். இங்கிலாந்தில் மூளைப் புற்றுநோய்க்கு ஆண்டுக்கு 3500 பேர் பலியாகிறார்களாம். இவர்களில் 34 சதவீதம் பேர் பூனையின் வயிற்றில் வளரும் டோக்சோப்ளாஸ்மா கோண்டி என்ற இந்த ஒட்டுண்ணியின் தொற்றலுடன் இருக்கிறார்களாம்.

ஆகவே கர்ப்பிணிப் பெண்கள் பூனைகள் உடன் நடமாட தடை செய்யப்பட்டது என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். கர்ப்பம் இது பிறக்கப்போகும் குழந்தைக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்பதால் இந்த முன்னெச்சரிக்கையாம். இந்த ஒட்டுண்ணிகள் கூடுதலாகக் காணப்படும் நாடுகளில் மூளைப் புற்றுநோய் அதிக அளவில் ஏற்படுகிறதாம்.

இந்த ஒட்டுண்ணியால் ஒருவரது செயல்பாடு மாற்றம் அடைவதோடு, ஆண்களை மூர்க்கமானவர்களாகவும், பொறாமை மிக்கவர்களாகவும் மாற்றுவதோடு, பெண்களை பாலியல் ரீதியில் அதிக ஆர்வம் கொள்ள வைப்பதாகவும் மாற்றி விடும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே நாமும் பூனை வளர்ப்பில் எச்சரிக்கையாக இருப்போமா!

உறுத்திக் கொண்டிருக்கும் பயம்!

மூச்சு விடச் சிரமப்படும் அந்த நிலையைப் பார்க்கிறார் மகாதேவன்.

பகவான் இவள் பக்திக்குப் பரிசு கொடுக்காமல் ஏன் தண்டனை தந்திருக்கிறான்? இல்லை... இந்தத் தண்டனை இவளுக்கல்ல! மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகத்துக்காக எப்போதோ வசூல் செய்த பணத்தை கணக்குக் காட்டாமல் எனக்கென்று பாதி எடுத்துக் கொண்டு விட்டேனே! அந்தப் பாவம்தான் இது! என்னுடைய பாவங்களைக் கூட அவள் ஏற்று... அந்த தண்டனையை அனுபவிக்கிறாளோ?

கோவிலுக்கு ஊரார் தந்த பணத்தை நான் சூறையாடியதால் அந்த அம்மன் என்னுடைய அன்பு மனைவியின் உயிரைச் சூறையாடுகிறாள்!

மாதா செய்தது மக்களுக்கு என்றால், கணவன் செய்தது யாருக்கு?

மகனுக்காக தன்னுயிரைத் தாரை வார்க்க நினைத்த இவளின் பெரிய உள்ளம் எனக்கு ஏன் இல்லாமல் போயிற்று?

'என் பாவத்தின் பிராயச்சித்தமாக என் மனைவியைக் காப்பாற்று! என்னை எடுத்துக் கொள்... என்று பிரார்த்தனை செய்ய என்னால் ஏன் முடியவில்லை!

அத்தனை சுயநலவாதியா நான்!

அவருள் இருந்த கோபம், தாபம், ஆத்திரம் எல்லாமே இருவென்று தீர்ந்து போகிறது. செய்த பாவம் விஸ்வரூபமெடுத்து மிரட்டுகிறது.

ஒரே ஒரு பிரார்த்தனை... கடைசிப் பிரார்த்தனை.

'என் சாரதா பிழைக்க வேண்டும்... அதற்குப் பதில்...' தன் கைகள் மீது பலவீனமான கைகள் படிவதை உணர்ந்தார் மகாதேவன்.

"என்ன சாரதா?" - அவள் தலையை வருடிக் கேட்டார்.

"எ... எனக்கு ஒரே ஒரு ஆசை... தீர்க்கசுமங்கலியா உங்க மடியிலே சாந்தன்று உயிரை விடணும்..." குழறிய வார்த்தைகள்... நிஜமான உணர்வு.

அடிப்பாவி... விரல்களை வெட்டி விட்டு



## சரஸ்வதியின் திருப்பெயர்கள்

நாம் சரஸ்வதி என்று அழைப்பதை சமணர்கள் 'சுருதிதேவி' என்றும், 'வாக்தேவி' என்றும் போற்றுகிறார்கள். பவுத்தர்கள் மகாசரஸ்வதி, வஜ்ரசாரதா, வஜ்ரவீணாதாரா, ஆர்யசரஸ்வதி, வஜ்ரசரஸ்வதி என ஐந்து வடிவங்களில் சரஸ்வதிதேவியைப் போற்றி வழிபடுவர்.

### மும்தேவியும் தேவியாக பகவதி அம்மன்

கேரளாவில் செட்டிகுளங்கரை பகவதி அம்மன் கோவில் மிகவும் புகழ் பெற்றது. இங்கு அருள்பாலிக்கும் பகவதி அம்மனுக்கு காலையில் சரஸ்வதி ரூபத்தைக் காட்ட வெள்ளை உடையும், பகலில் காளி ரூபத்தைக் காட்ட சிவப்பு ஆடையும், மாலையில் லட்சுமி அம்சத்தை உணர்த்த நீல உடையும் அம்மனுக்கு அணிவிக்கப்படுகிறது.

-தென்னூர் சாரதா, திருச்சி.

விளை வாசிக்கச் சொல்கிறாயா?

சாரதாவின் கைகளைப் பிடித்துக் கதறுகிறார் மகாதேவன்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம்...

சாரதாவை மடியில் கிடத்திக் கொள்கிறார். மரணம் தழுவத் துடிக்கும் முகம்... வாழ்வின் அந்திமாலை!

கணவனின் மடிமீது தலைவைத்து படுத்திருக்கும் சாரதா, சற்றுத் திரும்பி வாசலைப் பார்க்கிறாள்.


சதீஷ் வந்து கொண்டிருக்கிறான்... சாரதாவின் இறந்த கண்கள் இறந்தபடி இருக்க நின்றுபோன மூச்சு... சுவாச வலிகளற்ற நெஞ்சு... மகனையும் அன்பையும் மட்டுமே சுமந்த தாய்மை...

இறந்திருக்கும் அவள் விழிகளை மூட நினைத்த மகாதேவன் பேசாமல் இருக்கிறார்.


"அம்... மா..."

சதீஷின் அலறலில் அந்தத் தாயின் சுவாசம் கேட்கிறது!

('நிலா சாரல்' இணையதளத்தில் சிறந்த சிறுகதையாக தேர்வு பெற்றது.)




17 புள்ளி 3 வரிசை. இருபுறமும் கோணத்தில் உள்ளவாறு புள்ளிகள் வைத்து போடவும் (நேர்ப்புள்ளி) - சாந்தி சங்கர், சென்னை.



15 புள்ளி 3 வரிசை. இருபுறமும் கோணத்தில் உள்ளவாறு புள்ளிகள் வைத்து போடவும் (நேர்ப்புள்ளி) - ராஜலட்சுமி, திருநெல்வேலி டவுன்.


# கோலங்கள்




11 புள்ளி 11 வரிசை (நேர்ப்புள்ளி) - [illegible]




19 புள்ளி 19 வரிசை (நேர்ப்புள்ளி) - பாரதி பாலாஜி, கடலூர்.




23 புள்ளி 1 வரை (இடைப்புள்ளி)






11 புள்ளி 3 வரிசை.

11 புள்ளி 6-ல் இருந்து (இடைப்புள்ளி)



7 புள்ளி 3-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி)



# உள்ளம் பேசட்டுமே

நம்மில் எத்தனை பேர் உள்ளத்தில் இருப்பதை உதட்டினில் கொண்டு வந்து பேசுகிறோம். சொல்ல முடிகுமா?

உண்மையில் உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்துதான் பேசுகிறோம்.

யாரும் உள்ளத்தில் இருப்பதை வெளியில் அப்படியே கொட்டி விடுவதில்லை.



சொல்ல வேண்டியதை மட்டும் சொல்லி மறைக்க வேண்டியதை மறைத்துதான் பேசுகிறோம்.

தன்னைப் பற்றி அடுத்தவர் முழுமையாக தெரிந்து கொண்டு விடுவார்களோ என்ற அச்சம் இதற்கு காரணமாக இருக்கலாம்.

இதில் ஓரளவு நியாயம் இருக்கலாம். அதற்காக முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது நியாயமாகுமா?

உள்ளத்தில் இருப்பதை மூடி மறைக்க வேண்டிய அவசியமே இல்லை. அடுத்தவர் நம்மைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்களோ என்பதற்காக சொல்ல நினைப்பதை சொல்லாமல் மறைப்பது நியாயமாகாது.

அதற்காக வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்றும் பேசி விடக் கூடாது. இலைமறைவு காயாக சொல்ல வேண்டியதை சொல்லலாம். கசப்புதான் காயம் ஆற்றும். நோய் தீர்க்கும்.

கசப்பை நேரடியாக ஏற்றுக் கொள்வது என்பது மிகவும் சிரமம்தான். இதனால் தேனில் குழைத்து கசப்பு மருந்தை உள்ளுக்கு கொடுப்பதைப் போல, அடுத்தவர்க்கு நாம் சொல்வது நன்மை பயக்கும் என்றால் நாம் மனதில் உள்ளதை ஒளிவுமறைவு இல்லாமல் சொல்வதில் தவறில்லை.

இதற்காக அடுத்தவர் என்ன நினைத்துக் கொள்வாரோ என்று அஞ்சத் தேவையில்லை. அறிமுகம் இல்லாதவர்களிடம் மனம் திறக்காமல் இருக்கலாம். அங்கே ஒளிவுமறைவு தேவைதான்.

ஆனால், அதே சமயம் மிகவும்



—வசந்தி ஈஸ்வரப்பன்

நெருக்கமானவர்களிடம், நண்பர்களிடம் இந்த ஒளிவுமறைவு தேவையில்லை. மனதில் பட்டதை வெளிப்படையாக சொல்வதில் தவறும் இல்லை.

ஒருவர் நலனில் ஒருவர் அக்கறை கொண்டிருக்கும் போது பேச்சில் திரைமறைவு தேவையில்லையே. அப்படி ஒளிந்து பேசுவோமேயானால் அங்கே உண்மையான நட்பு நிலைப்பதில்லை. உண்மையான உறவு தொடராது.

ஒரு குடும்பத்திற்குள் ஒரே உறவுக்குள் ஒளிவு மறைவு எதற்கு? ஒருவருக்கொருவர் மறைத்து பேசுவதால் அங்கே உண்மை ஒளிந்து கொள்ளும். நேர்மை புதைந்து போகும். அன்பு, பாசம் தீர்ந்துப் போகும்.

எனக்கு தெரிந்த ஒரு குடும்பம். வசதிக்கு குறைவில்லை. கணவன்-மனைவி இருவருமே நன்கு படித்தவர்கள். குழந்தை செல்வங்களுக்கும் குறைவில்லை. சொந்த நிறுவனம் நடத்தி வருகிறார்கள்.

எல்லா வசதிகள் இருந்தும் கணவன்-மனைவிக்கு இடையே சுமுக உறவு இல்லை. நல்ல பேச்சுவார்த்தை இல்லை. இத்தனைக்கும் ஒரே



வீட்டில்தான் வசிக்கிறார்கள்.

கூப்பிட்ட குரலுக்கு வேலையாட்கள் இருப்பதால் அவர்கள் தேவையை நிறைவு செய்து கொள்வதில் அவர்களுக்கு குறை தெரியவில்லை. தேவைக்கு அதிகமாகவே பணம் இருக்கிறது. ஆகவே செலவுக்கும் பஞ்சமில்லை. இவையெல்லாம் இருந்தும் எதுவும் இல்லாதவர்கள் போல அவர்கள் வாழ்க்கை வெறுமையில் கழிந்து கொண்டிருக்கிறது.

இதை கணவன்-மனைவி இருவருமே உணருகிறார்கள். ஆனால் அவர்களுக்குள் இருக்கும் 'ஈகோ' என்கிற தன்முனைப்பு அவர்களை கீழே இறங்கி வர தடுக்கிறது.

நான் ஏன் இறங்கி வர வேண்டும் என்று கணவரும், நான் என்ன அவரை விட இளைத்தவளா, நான் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று மனைவியும் தங்கள் நிலையில் இருந்து கீழே இறங்க மறுக்கிறார்கள்.

இதனால் யாருக்கு லாபம், இருவருக்குமே இழப்புதான். குழந்தைகளுக்

### [illegible]

இளமை நம்பிக்கையில் வாழ்கிறது. முதுமை நினைவுகளில் வாழ்கிறது.

-பிரான்ஸ்

இளமையில் பட்ட அடிகள், முதுமையில்தான் உணரப்படுகின்றன.

-ஐரோப்பா

சிறு வயதில் நீங்கள் ரோஜாப்பூவின் மீது படுத்திருந்தால், முதுமையில் முள்ளின் மேல் படுக்க வேண்டி வரும்.

-இஸ்ரேல்

மனிதன் முதுமை அடைகிறான். நோய் இளமை அடைகிறது.

-எஸ்டோனியா

வயோதிகர் ஒருவர் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு ரத்தினம் இருக்கிறது.

-சீனா

-சுமித்ரா பிரேம்குமார், சென்னை.



கும் பாதிப்புதான். ஏன் இந்த வீண் பிடிவாதம்? ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து சற்று இறங்கி வந்தால் எல்லாமே நல்லபடியாகவே நடக்கும். ஆனால் இந்த மனம் இருக்கிறதே அது இறங்கி வர மறுக்கிறது. அதனால்தான் பிரச்சினையே.

அந்த அம்மா எப்போதாவது என்னை பார்க்கும் போது என்னிடம் மனம் விட்டு பேசுவார்கள். தனது குடும்ப [illegible]னிடம் பகிர்ந்து கொள்வார்கள். இதன் மூலம் தனது மனச்சுமையை இறக்கியும் வைப்பார்கள்.

என்னிடம் மனம் விட்டு பேசுகிறவர், தனது கணவரிடமும் மனம் விட்டு பேசலாம். பிரச்சினைக்கு உடனடி தீர்வு ஏற்படும். ஆனால் ஏனோ அதற்கு அவர் தயாராக இல்லை.

இதை அவரிடமே கேட்டேன். நீங்கள்தான் கொஞ்சம் விட்டு கொடுத்துப் போகலாமே என்றேன். நான் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும். அவருக்கு இருக்கும் அதே பிடிவாதம்தானே எனக்கும் இருக்கும் என்று ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்கிறாரே தவிர, உண்மையில் அவருடைய மனதில் ஒரு வேதனை இருக்கத்தான் செய்கிறது.

இந்த வேதனை எதற்கு என்பதுதான் எனது கேள்வி. நெருங்கியவர்களிடம் தங்கள் மனக்குறையை பகிர்ந்து கொள்கிறார்கள்.

### பெண்களின் மேக்கப் ரகசியம்

திருமண வரவேற்புக்கு, விருந்து நிகழ்ச்சிக்கு ஆண்கள் சட்டென்று கிளம்பி விடுவார்கள். பெண்கள் கிளம்புவதற்கு நேரமாகும். வயதான பெண்கள், இளம்பெண்களை விட [illegible] வயது பெண்கள் மேக்கப்புக்கு அதிக நேரம் செலவிடுகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று இங்கிலாந்தில் [illegible] நிறுவனம் ஒன்று சமீபத்தில் ஆய்வு [illegible] நடத்தப்பட்டது.

ஆய்வில் ருசிகர தகவல்கள் கிடைத்தன. பல [illegible] பெண்கள் தங்கள் அம்மாவின் மேக்கப் பின்பற்றுவதை விரும்புவதில்லை. அம்மாக்களை அவர்கள் பழைய ஜெனரேஷனாக கருதுகின்றனர். அம்மா பயன்படுத்தும் மேக்கப் சாதனங்களை அவர்கள் விரும்புவதில்லை.

ஆனால் அந்த அம்மாக்கள் அப்படியல்ல. 'என் மகள் போல பளிச்சென்று இருக்க வேண்டும் என் மகள் போல [illegible] [illegible] மகளைப்போல [illegible] மாடலாக [illegible] [illegible] விரும்புகிறார்கள்.

[illegible] இருக்கும்போது [illegible] மேக்கப் [illegible] சராசரியாக [illegible] பெண் [illegible] 51 விதமான மேக்கப் சாதனங்களை பயன்படுத்துகிறார்களாம். அவற்றை 12 [illegible]

வெளிநாட்டு பெண்கள்தான் இப்படியா என்றால், நம் இந்திய பெண்களும் மேக்கப்புக்காக செலவு செய்வதில் வெளிநாட்டு பெண்களுக்கு சளைத்தவர்கள் இல்லையாம். மேக்கப் பொருட்களுக்காக எவ்வளவு செலவு செய்யவும் தயாராகவே இருக்கிறார்களாம். இது நமது ஆய்வில் கிடைத்திருக்கும் தகவல்.

வீட்டுக்குள் கணவரிடமும் பகிர்ந்து கொள்ளலாமே. அல்லது கணவர், தனது நிலையில் இருந்து சற்று இறங்கி வந்து மனைவியிடம் பேசலாமே.

கணவன்– மனைவிக்குள் வேறுபாடு எதற்கு? தேவையில்லையே. எந்தவொரு விஷயத்தையும் மனம் விட்டு பேசினால், அங்கே பிரச்சினைக்கு இடமில்லை. குடும்பத்தில் அமைதி, நிம்மதி நிலவும். இதை நாம் உணர மறுப்பது ஏன்?

இனியாவது இதுபோன்ற தம்பதிகள் தங்களுக்குள் இருக்கும் 'ஈகோ' மனப்பான்மையை விட்டு விட்டு வெளிப்படையாக மனம் திறந்து பேசினால் குடும்பத்தில் அதுதான் வரையில் நீடித்து வந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி விழும். மனத்துக்குள் நிம்மதி குடியேறும்.

ஒரு சில குடும்பங்களில் பெற்றோர், குழந்தைகளிடம் மனம் திறந்து பேச மாட்டார்கள். குழந்தைகளை கொஞ்சம் தள்ளி வைத்தே போகவார்கள். அவர்களிடம் எதையும் மனம் விட்டு பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். குழந்தைகள்தானே, இவர்களிடம் என்ன பேசுவது, அவர்களுக்கு என்ன தெரியும் என்று அளவோடு பேசுவார்கள். அல்லது அதிகமாக எதையுமே பேசாமல் விட்டு விடுவார்கள். இதுவும் தவறு.

வருங்கால பிரச்சினைகளை எதிர்கொள்ள தெரிந்து வைத்திருக்க வேண்டியவர்கள் குழந்தைகள். அவர்களிடம் பெற்றோர் மனம் விட்டு பேச வேண்டும். அன்றாட வாழ்க்கை அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் நல்லது எது? கெட்டது எது? என்று அவர்களுக்கும் தெரிய வேண்டும். அதை புரிய வைக்க வேண்டிய கடமை பெற்றவர்களுக்கு உரியது. அதற்கு மனம் விட்டு பேசினால்தான் முடியும்.

குழந்தைகளிடம் நாம் என்ன எதிர்பார்ப்பது என்று 'ஈகோ' பார்க்கக் கூடாது. அதற்கு அவசியமும் இல்லை. அவர்கள் நம்முடைய சந்ததி. நமக்கு பிறகும் வாழப் போகிறவர்கள். அவர்களும் இந்த வாழ்க்கையைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு, பெற்றவர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவங்களை அவர்களுக்கு கற்றுத்தர வேண்டும். அப்போதுதான் அவர்களும் நல்ல பாதையில் அடியெடுத்து வைக்க முடியும். ஆகவே குழந்தைகளை நம்மோடு இணைத்துக் கொள்வோம்.

## முல்லைப் பூவின் மருத்துவ குணங்கள்

முல்லைப் பூ தலைவலி, [illegible] பல்வேறு மருத்துவ குணங்களையும் கொண்டுள்ளது.

முல்லை மலரை தலையில் சூடிக் கொண்டு அதன் மணத்தை முகர்ந்தாலே மனோ வியாதிகள் நீங்கி மனத்தெளிவு உண்டாகும் என்று கூறப்படுகிறது.

முல்லைப் பூவின் சாற்றினை 2 அல்லது 4 துளி வீதம் கண்ணில் விட்டு வர கண் [illegible] குணமாகும்.

ஒரு கைப்பிடி அளவு முல்லைப் பூவை நீர் விட்டு காய்ச்சி பாதியாக வற்றியதும் 15 மி.லி. அளவு குடித்து வர [illegible] குணமாகும்.

[illegible] முல்லைப் பூவை அரைத்து உடல் முழுவதும் தடவி அரை மணி நேரம் கழித்து குளிக்கவும். இதுபோன்று மூன்று நாள் விட்டு ஒரு நாளாக 3 நாட்கள் செய்து வர நல்ல குணம் கிடைக்கும்.

முல்லைப் பூ கொண்டு தயாரிக்கப்பட்ட கஷாயம் கருப்பை நோய்களை போக்கும் தன்மை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைப் பூ மட்டுமல்லாமல் அதன் இலை, வேர் பகுதிகளும் அதிக மருத்துவ குணம் கொண்டது.

அவர்களுடன் நம் மனதில் உள்ளதை பகிர்ந்து கொள்வோம்.

குழந்தைகளிடமும் நட்பு பாராட்டுவோம், அன்பு செலுத்துவோம். ஒழுக்கமெனும் நல்வழியை புகட்டுவோம். இதுவே அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு நல்ல பாதையை அமைத்து தரும்.

அறிமுகம் இல்லாதவர்களிடம் முன்பின் தெரியாதவர்களிடம் உள்ளத்தில் இருப்பதையெல்லாம் கொட்டிவிடத் தேவையில்லை.

ஆனால் வீட்டில் இருப்பவர்களிடமுமா மனதை பூட்டி வைப்பது. கூடாது. மனம் திறப்போம்.

உள்ளத்தால் பேசுவோம்.

இல்லமெல்லாம் உவகை பூக்கட்டும்.

# கேட்டு வாங்குவதல்ல கொடுத்து வாங்குவது. அன்பு!

ஒரு சமயம் நான் நேரில் பார்த்த சம்பவத்தை கேள் சகோதரி. 20 வருடங்களுக்கு முன் வெளியூருக்கு போன செல்வதற்காக ஒரு சினிமா தியேட்டரின் அலுவலக அறையில் அமர்ந்திருந்தேன். பகல் காட்சியில் தன் அபிமான நடிகர் படத்தைப் பார்க்க பெண்கள் கூட்டம் அலைமோதியது. வரிசை மிக நீளமாக இருந்தது. அப்பொழுது ஒரு பெண் கைக் குழந்தையுடன் வேகமாக வந்தாள். வரிசையை பொருட்படுத்தாமல் மற்ற பெண்களின் கூச்சலை காதில் போட்டுக் கொள்ளாமல் டிக்கெட் கொடுக்கும் இடத்தருகே முட்டி மோதி வந்தாள். அனைவரின் கூச்சல் கேட்டு காவலாளி கையில் குச்சியுடன் வந்து கண்டபடி அவளை திட்டி தடியால் ஒரு அடி கொடுத்து வரிசைக்கு பின்னால் அனுப்பினான். குழந்தை வீறிட்டு அழ அசட்டு சிரிப்புடன் பின்னால் சென்றாள்.

சகோதரி, இப்பொழுது சொல் அந்த பெண்ணிற்கு சகிப்புத்தன்மை உள்ளதா? இல்லையா? கண்டிப்பாக அவளுக்கு சகிப்புத்தன்மை உள்ளது. அதனால்தான் எவனோ ஒருவன் திட்டி தடியால் அடித்தபோது திருப்பி எதுவும் சொல்லாமல் அவன் சொன்னதை கேட்டாளே. ஆனால் சகோதரி இதுவே வீட்டில் கணவனோ அல்லது மாமியாரோ அல்லது வீட்டில் உள்ள யாராவது அவள் செய்த சிறிய தவறை சுட்டிக் காட்டினால் அவளால் ஒரு வார்த்தை கூட பேசாமல் அவர்கள் சொல்வதை கேட்பாளா? யோசி சகோதரியே.

ஒரு விஷயத்தில் ஈடுபாடு அதிகம் இருக்கும் போது, செய்தே ஆக வேண்டும் என்ற அதீத ஆர்வம் இருக்கும்போது வரும் அவமானங்களை பொருட்படுத்த மாட்டோம். பழச்சாறு தம்ளரை உடைத்த பெண், மருமகளிடம் திட்டு வாங்கிய வயதான பெண்மணி இருவருமே தங்கள் குடும்பம் அமைதியாக இருக்க, சந்தோஷம் பெருக, பிள்ளைகளின் நலனுக்காக அவமானங்களை சகித்துக் கொள்வதில் தப்பு இல்லை.



-பிரம்மாகுமாரி கீதா ஸ்ரீராம்

மேலும் தன் உள் மனதில் மருமகள் அல்லது மாமியார் பற்றிய வேண்டாத எண்ணங்கள் இருந்தால் அதை எடுத்து விட்டு சுபசிந்தனைகளை கொடுத்துக் கொண்டே செல்ல வேண்டும். நம்முடைய நேர்மறையான எண்ணங்கள் அவர்களை சென்றடைந்து நம் மேல் அன்பு வரும். அன்பும் ஆதரவும் கேட்டு வாங்கும் பொருள் அல்ல. கொடுத்து வாங்கும் பொருள்.

மேலும் சுபசிந்தனை என்றாலே மற்றவர்கள் தவறுகளை மன்னிக்கும் சுபாவம் மற்றும் அவர்களுடைய தவறுகளை யாரிடமும் பரப்பாமல் இருப்பது. நாம் அவ்வாறு நடந்து கொண்டாலே நம் குழந்தைகள் தாய், தந்தையருக்கு செய்ய வேண்டிய கடமையை செய்வர். ஒரு தவறை இன்னொரு தவறால் திருத்த முடியாது. தன் மருமகளைப் பற்றியோ, மருமகள் தன் மாமியாரைப் பற்றியோ வெளியில் விட்டுக் கொடுத்து பேசுவது தன் மனதை சமாதானப்படுத்தும் வழி கிடையாது.

நாட்டின் நன்மைக்காக, விடுதலைக்காக சவுக்கடியும், சிறைச்சாலை கொடுமைகளையும் அனுபவித்த பலரின் உண்மை சம்பவங்களை நீ கேட்டதில்லையா? ஏன் வீட்டின் நன்மைக்காக சில ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் பொருட்படுத்தாமல் இருக்கலாம்.

நம்மை சுற்றி நடப்பவைகளில் உனக்கு கிடைத்த சாதகமான விஷயங்கள் என்னென்ன? என்று பட்டியலிடு சகோதரி. அதில் உன் சந்தோஷம் ஒளிந்துள்ளது. மற்றவர்களை மாற்ற முடியாது என்று அறிந்தால் உன்னை மாற்றும் வழி காண வேண்டும். நாம் எப்பொழுதும் வீடு, சொந்தங்கள், தொடர்பில் வருபவர்கள் மற்றும் சமுதாயம் இவர்களுக்கு தகுந்தாற்போல் நம் உறவு என்னவோ அதற்கு தகுந்தாற்போல் இடைவெளி விட்டு பழக வேண்டும். நம் எல்லைகளை தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். நமக்கு என்ன கடமையோ அதை மட்டும் கவனித்து அதன் பலன்களில் இருந்து விலகி இருக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

(இன்னும் சந்திப்போம்...)


## வயதானவர்களுக்கு முடி உதிர்வதை தடுக்கும்

# ரோஸ்மேரி எண்ணெய்!

வயதுக்கு முற்றுப்புள்ளி இல்லை. இன்றைய குழந்தை நாளைய இளைஞன். இன்றைய இளைஞன் நாளைய கிழவன் என்று வயது யாருக்கும் நிலைத்து நிற்பதில்லை. ஆனால் எல்லோரும் ஒரு நாள் கிழவன் ஆவது நிச்சயம். அதை யாராலும் தடுக்க முடியாது. ஆனால் முடிந்தவரை தன் இளமையையும் அழகையும் சிறிதளவாவது காக்க முடியும்.

ஒரு மனிதனுக்கு எந்த ஒரு நோய் இல்லை என்றாலும் அவனுடைய வயதை வைத்து சில நோய்கள் வரும். அதே போன்று வயது ஆக ஆக தலைமுடியும் நரைத்து உதிர ஆரம்பிக்கும். மனிதனுக்கு வயது ஆக ஆக உணவு அதிகமாக சாப்பிட முடியாது. மேலும், பலவீனம் ஏற்படும். இக்காரணத்தால் உடம்பில் ஊட்டச்சத்து கிடைக்காமல் முடி நரைத்து உதிர ஆரம்பிக்கும். இதை காப்பாற்றும் வகையில் ரோஸ்மேரி என்னும் ஒரு மூலிகை மிகவும் பயனளிக்கின்றது.

இந்த செடி 3லிருந்து 5 அடி வரை வளரும். இதன் இலைகள் நீளமாக பச்சை நிறத்தில் காணப்படும். பூக்களில் நல்ல நறுமணம் இருக்கும். எந்த வகையான மண்ணிலும் இந்த செடி வளரும். இந்த பூக்களில் சக்கை அதிகமாக வந்து செல்லும். இந்த செடியின் இலைகளையும், பூக்களையும் கொண்டு எண்ணெயில் காய்ச்சி பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த மூலிகை எண்ணெயை வயதானவர்கள் தினந்தோறும் தேய்த்து வந்தால் முடி உதிரல் நின்று விடும். மேலும் இதை பூசி தலை சீவினால் முடி அலையாமல் நிற்கும். இதை தலைக்கு ஷாம்புவாகவும் உபயோகிக்கலாம்.




டாக்டர் தமீம் – டாக்டர் ஆயிஷா நஜ்

அதிகம் சூடு உள்ள நீரில் தினமும் தலைக்கு குளிப்பதும், ஹேர் டிரையரில் சூடான காற்று மூலம் தலைமுடியை காயவைப்பதும் முடிக்கு நல்லதல்ல. அது தலையில் மெல்லிய ரத்த நாளங்களில் தீங்கு உண்டாக்கும். இளநரை ஏற்படக் காரணமாகி விடும்.

துளசி இலையை நசுக்கிப் பிழிந்து அதன் சாற்றை எடுக்க வேண்டும். அரை கப் சாற்றோடு அரை கப் ஆமணக்கு எண்ணெயும் கலந்து கொதிக்க வைக்க வேண்டும். இதை ஒரு பாட்டிலில் பத்திரப்படுத்த வேண்டும். தினமும் இந்த எண்ணெயை உபயோகித்தால் முடி உதிர்வதைத் தடுக்கலாம்.

### உடல்சூட்டால் தலைமுடி உதிர்வதை தடுக்கும் எலுமிச்சம்பழ எண்ணெய்

மனிதனின் உடல் மூன்று நிலையாக பிரிவாக்கப்பட்டன. வெப்பம், குளிர்ச்சி மற்றும் வெப்பமும் குளிர்ச்சியும் கலந்த நிலையாக இருக்கும். மேலும் நம் தென்னிந்தியாவில் வருடத்தின் 10 மாதங்களும் வெயிலாகத்தான் காணப்படும். மனிதனின் உடலில் இருக்கின்ற சூடு போதாது என்று வெயிலின் சூட்டையும் சேர்த்து உடல் முழுக்க உஷ்ணமும் வறட்சியும் காணப்படும்.




வெயிலின் வெப்பம் போதாது என்று பெண்கள் சமையலறையில் நாள் முழுவதும் இருப்பதால் மேலும் வெப்பம் கூடி வெப்பத்தினால் வரும் நோய்கள் உண்டாகின்றன. உடலில் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க தலைச்சூடும் அதிகரிக்கும். தலைச் சூட்டினால் தலையில் முடிக்கு தேவைப்படுகின்ற எண்ணெய்ப்பசை காய்ந்து விடுகின்றது. இதனால் தலைமுடியின் வேரும் காய்ந்து வலிமை இழந்து விடுகின்றன. மேலும் தலையில் வறட்சி ஏற்படுவதால் தலையில் தோல் நோய்கள் உண்டாகின்றன. நம் உடலில் எந்த ஒரு பகுதியில் ரத்த ஓட்டம் குறைவாகவோ அல்லது இல்லையென்றாலோ அப்பகுதியில் தோல் வறண்டு கடினமாக மாறி செதில் செதிலாக வர ஆரம்பிக்கும். அதேபோல் தலையிலும் செதில் செதிலாக விழும் போதும் அப்பகுதியில் உள்ள முடிகளும் கொட்டுகின்றன. இவ்வாறு உண்டாவதற்கு முக்கிய காரணமாகிய தலைச் சூட்டை குறைப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் எலுமிச்சம்பழம் ஒரு வரப்பிரசாதமாகும்.

எலுமிச்சம்பழத்திற்கு புளாளியில் நீமு என்று பெயர். இது யாவரும் அறிந்த ஒரு பழமாகும். இப்பழத்திலிருந்து சாறு பிழிந்தெடுக்கப்படுகிறது.

இது பல வகைப்படும். இதில் 'நீமு காகி' சிறந்த வகையாகக் கருதப்படுகிறது. இதன் தோல் மெல்லியதாகவும் சாறு நிறைந்ததாகவும் இருக்கும். இதுவே அகிலவியில் மருந்தாகப் பயன்படுகிறது. இதன் சாறு, கொட்டை ஆகியவை தோல் நோய்க்கான மருந்துகளில் பயன்படுத்தப்படுகிறது. இது இந்தியா மற்றும் ஐரோப்பாவின் தென் பகுதியில் விளைகிறது.

இதன் சாறு குளிர்ச்சியை உண்டாக்குகிறது. மனதிற்குச் சாந்தம் அளிக்கின்றது. தோல் நோய்களைத் தீர்க்கிறது. இருமிகளை சாகடிக்கிறது. அசுத்தமான இரவங்களை வெளியேற்றுகிறது. வயிற்றின் கோளாட்டையும், பித்தத்தையும் வெளியேற்றுகிறது. விஷத்தை முறிக்கிறது.





காசினி மருத்துவமனையில் எலுமிச்சம் பழத்தையும், இலையையும் சேர்த்து சாறு எடுத்து எண்ணெயில் காய்ச்சி தலையில் உள்ள உஷ்ணத்தை குறைக்க கொடுக்கின்றோம். அதனுடன் எலுமிச்சம் பழத்தினால் செய்த சில லேகியங்களையும் கொடுக்கின்றோம். இதை தினந்தோறும் உட்கொண்டும், தேய்த்தும் வந்தால் உடலிலும், தலையிலும் உள்ள உஷ்ணமும் சூடுத்தன்மையும் குறைந்து முடி நன்றாக வளரும்.

ஒரு ஸ்பூன் தக்காளிப் பழ ரசத்தில் நான்கு ஸ்பூன் வெந்நீரை கலக்க வேண்டும். இந்தத் திரவத்தை உச்சந்தலையில் நன்றாக அழுத்தி தேய்க்க வேண்டும். பின்னர் ஒருமணி நேரம் கழித்து முட்டை ஷாம்பு கொண்டு கழுவி சுத்தப்படுத்தி விட வேண்டும். வாரத்தில் இருமுறை இவ்வாறு செய்தால் பொடுகு அகன்று விடும்.

எங்கள் மருத்துவமனையில் சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட தலைமுடி கருமையாகவும், முடி நன்கு வளர்ச்சி பெறவும் எண்ணெய்களும், முகத்தை அழகுபடுத்தும் மூலிகை கிரீம்களும் (Herbal Face Creams), மூலிகை மருந்துகளும் கிடைக்கும். அதை நேரிலோ, தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;**

டாக்டர் தமீம் - டாக்டர் ஆயிஷா நாஜ்,
சென்னை காசினி மருத்துவமனை,
135, ஜானி ஜஹான்கான் ரோடு,
ஜாம்பஜார் போலீஸ் ஸ்டேஷன் எதிரில்,
ராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி: 98403 84898,
9677004898,
044-28486695
e-mail: drthameem@yahoo.com
drayeshanaaz@yahoo.com

PENMANI September-2011 Regd. No. TN/CH(C)/326/09-11. Licensed to Post
Regd. with the Registrar of newspaper for India under No.24256/71. Published 1st of every month.

